உ

சிவமயம்

ஓம் ஸ்ரீ வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகனே சரணம் சரணம்

ஓம் ஸ்ரீ முத்துமாரி தாயே சரணம் அம்மா

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

ஓம் ஸ்ரீ சாயிராம்

ஓம் ஸ்ரீ வீர அற்புத ஆஞ்சநேயா சரணம்

# ஹரிஹரானந்தம்



வெளியீடு: சாபரீச ஐயப்பனின் 14 ஆவது தீர்த்த யாத்திரையை முன்னிட்டு, சாவக்கச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருப்பணியாளர் 'மாரிமைந்தன்' வைத்திலிங்கம் சிவராசா அவர்களின் அனுசரணையுடன், சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் கோண்டாவில், யாழ்ப்பாணம்

தொகுப்பாசிரியர்: சைவப் புலவர்
குமாரசாமி சுமுகலிங்கம் சாமி
சபரீச வாசம், தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

26.12.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# சமர்ப்பணம்



**மஹாகுருசாமி M.N. நம்பியார் அவர்களினதும், நல்லூர் கந்தன் ஆலய பஜனைச் சாமி இ.கந்தசாமி சாமி அவர்களினதும் ஜீவாத்மாக்கள் இறையின்பத்தில் திகழ வேண்டி, கோண்டாவில் சபரீச ஐயப்பனையும் நல்லை கந்தனையும் மனதார வேண்டி திருக்கைலாயன் திருப்பாத கமலங்களில் சென்றடைய வேண்டிப் பிரார்த்தித்து சமர்ப்பிக்கின்றோம்.**

இறைவனோடு வாழ்வதே உண்மையான கல்வி
இறைவனுக்காக வாழ்வதே உண்மையான பக்தி
இறைவனில் வாழ்வதே உண்மையான ஆன்மீகம்
ஆசை பற்றிலிருந்து வருகின்றது
விடுதலை பற்றின்மையிலிருந்து வருகின்றது
உணவு கடவுள் – உணவை வீணாக்காதே!
பணம் கடவுள் – பணத்தை வீணாக்காதே!
நேரம் கடவுள் – நேரத்தை வீணாக்காதே!
சக்தி கடவுள் – சக்தியை வீணாக்காதே!

– பாபா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ## நூற்பட்டியல் | ## பொருடக்கம் |
|---|---|
| தலைப்பு: ஹரிஹரானந்தம்<br><br>தொகுப்பாசிரியர்:<br>ஐயன் ஐயப்பசாமிகளின் அடிமை<br>குமாரசாமி சுமுகலிங்கம் சாமி<br><br>வெளியீடு:<br>சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்<br>கோண்டாவில், யாழ்ப்பாணம்.<br>021 222 7688, 0777 110629<br><br>பதிப்பு:<br>திருவள்ளுவர் அச்சகம்<br>நல்லூர்.<br><br>வெளியீட்டுத் திகதி:<br>25.12.2008<br><br>பதிப்புரிமை: ஆசிரியருக்கு<br><br>எழுத்து: 12 புள்ளிகள்<br><br>தாள்: 70 கிராம்<br><br>பிரதிகள்: 300<br>அன்பளிப்பு:<br>சபரீச ஐயப்பனின் புனித யாத்திரைக்குரியது.<br><br>வாழ்க வளமுடன்!<br>வாழ்க வையகம்!!<br>மனித நேயம் காப்போம்!!! | 1.ஆசியுரைகள்:<br>2. வாழ்த்துரைகள்<br>3. அணிந்துரை<br>4.மகாகுருசாமியின் கட்டுரை<br>5. சபரீச ஐயப்பன் அருட்காட்சிகள் பத்து<br>6. நுண்பொருட்காட்சிகள் பத்து<br>7. விரத நெறிகள் பத்து<br>8. தங்கும் தாவலங்கள் பத்து<br>9. வழிபடும் முறைகள் பத்து<br>10. அமுதுறும் ருசிகள் பத்து<br>11. ஆலயங்கள் பத்து<br>12. மந்திரமொழிகள் பத்து<br>13. பல்சுவை பத்து<br>14. மணிகண்ட அற்புதம்<br>15. சரணக் கோவை<br>16. கவசம்<br>17. பஜனைப் பாடல்கள்<br>18. தீப மங்கலம்<br>19. வழிநடை சரணம்<br>20. குடையிற்சாமி அற்புதங்கள்<br>21. ஆலய நிகழ்ச்சிகள்<br>22. அற்புதங்கள்<br>23. ஞானிகள்<br>24. நூற்பயன் வாழ்த்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை
Nallai Thirugnanasambantar Atheenam
NALLUR, JAFFNA - SRI LANKA.



# அருள் ஆசி

மெய் அடியார்களுக்கு,

குமராசாமி சுமுகலிங்கம் அவர்களால் ஹரிஹரானந்தம் என்னும் நூல் வெளியிடுவதில் மகிழச்சி அடைகின்றோம். மக்களின் வாழ்வு இறை பணியுடனும், இறை ஆசியுடனும் இணைந்தது என்பதனை மென்மேலும் வளரச் செய்யும் நோக்கில் எழுதப்பட்டது. ஐயப்ப வழிபாட்டை மேற்கொள்ளும் அடியார்களுக்கு உதவியாக அமைகின்றது. புனிதமும், கட்டமைப்பும் பல சிறப்புக்களையும் கொண்டது ஐயப்பன் வழிபாடு. இதனை நோற்கும் அடியார்கள் இறை ஆசியை பூரணமாகப் பெற்று நிறைவான வாழ்வினை வாழ வைக்கின்றது. மனிதானாகப் பிறந்த அனைவரும் இறைவனுடைய ஆசியைப் பெறுவதற்கு இறைவழி பாடு இன்றியமையாதது. இதனை அடிப்படையாகக் கொண்டு நம் சமய வழிபாட்டு மரபுகள் அனைத்தும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ்தலே நல்வாழ்வாகும். பொருளுதவி புரிந்த திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா மற்றும் ஆலய குருசாமி, ஐயப்பசாமிகள், இதனை எடுத்து இயம்பும் வகையில் கு.சுமுகலிங்கம் சாமி அவர்களால் எழுதப்பட்ட நூல் அனைவருக்கும், பயனுள்ளதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# ஆசியுரை



**தேவஸ்தான அறங்காவலர், பிரதம குரு, குருசாமி, பிரம்ம ஸ்ரீ கி. ஹரிஹரசுத குருக்கள் சாமி, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில், யாழ்ப்பாணம்.** **பதிவு இலக்கம் : HA/J/JA/859**

சபரிமலை ஐயப்ப சுவாமி யாத்திரை ஐயப்ப பக்தர்களிடையே உயர்நிலை பக்தியை ஏற்படுத்துகின்றது. விரத காலம் 60 நாட்களை கொண்டது. சபரிமலை செல்ல முடியாத சாமிமார்கள் கோண்டாவில் அகில இலங்கை ஸ்ரீ சபரீச ஐயப்பன் ஆலயத்தில் சபரிமலைக் கிரியைகளை அவர்கள் மனம்போல் மனநிறைவாக செய்கின்றனர். சபரீசன் அருளை இங்கு வருகின்ற சுவாமிமார்களின் சரீரத தொண்டுகள், சரியை வழிபாடுகளில் காண முடிகின்றது. மேலும் சென்ற ஆண்டு தென்மராட்சி சாமிமார்கள் அறிவு, ஆன்மீக, சமூக சேவைப் பக்குவத்தை ஐயன் வழியது உணர்ந்து "ஹரிஹரசங்கமம் ஐயப்பன்" என்னும் நூலை வெளியீடு செய்தார்கள். அதன் ஒரு பகுதி நிதி இந்த ஆண்டு சபரிமலை யாத் திரை குழுவிற்கு பயன்பட உள்ளது. இவ்வரிசையில் ஐயன் ஐயப்ப சாமிகள் அடிமை சைவப் புலவர் குமராசாமி சுமுகலிங்கம் சாமி அவர்களின் தொடர்ந்த தேடுதலால் "ஹரிஹரானந்தம்" எனும் நூல் 14வது தீர்த்த யாத்திரைக் குழுவின் சார்பாக வெளிவர உள்ளது. இவ்வரியகங்கரியத்தை சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பெரும் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா சிவசேவையாகச் செய்வது அவரது ஆன்மீகப் பாதையைத் தெளிவுபடுத்துகிறது. அவரது முழுப்பங்களிப்புடன் வெளிவரும் நூல் வெளியீட்டு நிதி, ஐயப்ப யாத்திரைக் குழுவின் சுவாமி ஒருவர் சபரிமலை செல்லப் பயன்படவுள்ளது. இவரது சிவசேவையை உற்றுநோக்கமிடத்து, (1) எல்லா சாமி மார்கள் அடியார்கள், நலன்விரும்பிகள் சமய, சமூக சேவை மனப்பாங்கை வளர்க்கவும், (2) சபரிமலை தரிசனத்திற்கு ஏங்கும் ஒருவர் தரிசனம் செய்யும் பாக்கியத்தை பெற வழிசமைக்கிறார். (3) இறையருள் ஒன்றே உலகிற்கு உயர்ந்தது என்பதனை தெளிவுபடுத்து கின்றார். சிவ சேவை செய்ய வழி பல உள்ளன என பலரும் உணரச் செய்கின்றார். இவரது நிறுவனங்கள், பணியாளர்கள் நல்லாசி பெறவும் ஐயப்பன் அருள் பாலிக்க வேண்டுகிறேன். 2006ஆம் ஆண்டு இவ் ஆலயத்தில் மகரஜோதி தரிசனத்துடன் தொடங்கி 2007, 2008ம் மாலையணிந்த சுமுகலிங்கம் சாமியின் பணியை ஐயப்பசாமியே செய்து வைக்கின்றார் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். இவரது இப்பணி தொடர்ந்து சிறக்கவும், அவரும் அவர் சார்ந்த குடும்பத்தினரும் நல்வாழ்வு பெறவும், தென்மராட்சி சாமிமார்களனைவருக்கும், தென்மராட்சி மக்கள், அடியார்கள் அனைவருக்கும் மற்றும் இவ்வாலயத்து ஐயப்பசுவாமிமார்கள் அடியார்கள், இப்பகுதிவாழ் மக்கள், அனைத்து ஜீவராசிகளுக்கும் நல்லாசி கூறி ஆசீர்வதிப்பதும் ஐயப்பன் அருட்கடாட்சமேயாகும்.

வாழ்க தொண்டர் தம் பெருமை வளர்க திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா அவர்களின் அர்ப்பணிப்பில் இறைபணியாகிய இப்பணி சிவப்பணி திருப்பணி நற்பணிகள் வளர என்றென்றும் கோண்டாவில் சபரீச ஐயப்பன் துணையிருக்க மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

"ஐயப்ப சுவாமி திருத்தாள் போற்றி போற்றி"

**கி.ஹரிஹரசுதக் குருக்கள் குருசாமி**
**கோண்டாவில் ஸ்ரீ ஐயப்பன் சுவாமி ஆலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை.

அலுவலகம் : 2326
இல்லம் : —

நாள் : 02.12.2006

துறைத் தலைவர்
டாக்டர் மா.வேதநாதன்
பி.ஏ.(ஆனர்ஸ்), டி.ஏ., டிப்ளோமா, எம்.ஏ., பிஎச்.டி.



# ஆசியுரை

சுவாமி ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் உணர்வு பூர்வமாக நடைபெறுவது போற்றுதற்குரியது.

ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் ஈடுபடும் அன்பர்களுக்கு உதவும் வகையில் ஒரு வழி காட்டி யாக, "ஹரிஹரானந்தம்" என்னும் ஆன்மீக நூலை கோண்டாவில் ஸ்ரீ ஐயப்பன் தேவஸ் தானம் வெளியிடுவது பாராட்டுதலுக்குரியது.

சபரிமலை சுவாமி ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு ஆன்மீக அன்பர்களுக்கு ஓர் உணர்வு பூர்வ மான புனித யாத்திரை வழிபாடாக விளங்குகின்றது. இலங்கையிலும் ஸ்ரீ ஐயப்பன் வழிபாட் டில் ஈடுபடும் அன்பர்களின் தொகை அதிகரித்து வருவது ஆன்மீக வளர்ச்சியைக் காட்டு கின்றது.

சபரிமலை சுவாமி ஸ்ரீ ஐயப்பனை தரிசிக்கச் செல்லும் பக்தர்கள் தலைமையில் இரு முடியுடன் பதினெட்டுப் புனிதப்படிகளில் ஏறிச் செல்லும் காட்சி பார்ப்பவர்களுக்குப் பரவச மூட்டுவதாகவிருக்கும். தற்போது இந்தப் படிக்கட்டுகளில் பஞ்சலோக கவசங்கள் சாற்றப் பட்டுள்ளன. படியேறும் பக்தர்கள் வலதுகாலை முதலில் வைத்து முதல்படி ஏறவேண்டும். பதினெட்டுப் படிகளும் தத்துவ நோக்குடையவை. முதல் ஐந்து படிகள் ஐம்புலன்களையும், அடுத்த எட்டுப்படிகள் எட்டுவிதமான ஆசைகளையும், அடுத்த மூன்று படிகள் மூன்று குணங்களையும், இறுதிப்படிகள் வித்தை (அறிவு), அவித்தை (அறியாமை) ஆகியவற்றைக் குறிக்கின்றன. இப்பதினெட்டுப் படிகளையும் ஏறி சுவாமி ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்கும் பக்தர்கள் உலக பந்தங்களில் இருந்து விடுபட்டு, பேரானந்தம் பெருவாழ்வு பெற்று இறை பதம் அடைவார்கள் என்பது ஸ்ரீ ஐயப்பன் தத்துவமாகும்.

இத்தகைய அரிய சமய தத்துவக் கருத்துக்களையெல்லாம் கொண்ட இந்நூலை வெளியிடுவதற்கு நிதி நல்கிய சிவத்திரு வைத்திலிங்கம் சிவராசா என்பவரையும், இந்நூலைச் சிறப்பாகத் தொகுப்பித்த சைவசித்தாந்தத்தில் முதுகலை பயிலும் பேரன்பிற்கு ரிய மாணவர் கு.சுமுகலிங்கம் என்பவரையும் உளமாரப் பாராட்டுவதுடன் இப்பணியில் ஈடுபட்ட அனைவரும் வாழ்க் வளத்துடன் என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**டாக்டர்.மா.வேதநாதன் M.A., Ph.D.,**
**தலைவர், இந்து நாகரீகத்துறை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
ஓம் ஸ்ரீ முத்துமாரி தாயே சரணமம்மா
"ஓம் சுவாமியே சரணமையப்பா"


ஸ்ரீ முத்துமாரியம்மன் றேடர்ஸ்
இல: 342,344,346 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


"அரிகரானந்தம் வாழ்க"

"என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானவன் எங்கள் குருநாதன" (மகாவாக்கியங்கள்)



## சாஸ்தா பேதங்கள்

சாஸ்தா என்ற சொல்லுக்கு உலகங்களை ஆழ்பவர் என்றும் உலகில் செம்மையுறக் கட்டளைகள் பிறப்பிப்பவர் என்றும், மக்கள் உள்ளங்களில் சாசுவதமாக நிறைந்திருப்பவர் கள் என்றும் பொருள்படும்.

தியான ரத்னாவளி என்ற ஆகம பத்ததி சாஸ்தாவின் பதினாறு பேதங்களை தெரிவிக்கின்றது. 1. மதகஜசாஸ்தா, 2. மோகினி சாஸ்தா, 3. அமிருத சாஸ்தா, 4.கிராம சாஸ்தா, 5. உக்கிர சாஸ்தா, 6.வீரசாஸ்தா, 7. லக்ஷ்மி சாஸ்தா, 8. பால சாஸ்தா, 9. மதன சாஸ்தா, 10. பீஷண சாஸ்தா, 11. ருத்ரா சாஸ்தா, 12. வார சாஸ்தா, 12. அசுவ சாஸ்தா, 13. அசுவ சாஸ்தா, 14.சௌந்தர சாஸ்தா, 15. பவுண சாஸ்தா, 16. மகா சாஸ்தா.

### *மண்டல விரதம் பாவ நீக்கம்*

நட்சத்திரங்கள் : *27* + ராசிகள் *: 12* + கிரகங்கள் *: 9* = 48. மனிதப் பிறவி எடுத்தது பகவானை அடையவே. பிறக்கும் போது ஜென்ம நட்சத்திரம் அதன் ராசி, அப்போதைய கிரகங்கள் அவனை ஆட்டிப்படைக்கின்றன. இதற்கு வழி சமைக்கும் விரதம் ஐயப்ப விரதம்.




உங்களுக்குத் தேவையான பலசரக்குப் பொருட்களை
இனிதே நிறைவு பெற இன்றே இப்பொழுதே நாடுங்கள்.

- மலிவான விலை
- நிதானம்
- உண்மை உத்தரவாதம்
- சரியான நிறையில்

மொத்தமாகவும், சில்லறையாவும் பெற்றுக்
கொள்ள சிறந்த ஒரே நிறுவனம்

ஸ்ரீ முத்துமாரியம்மன் றேடர்ஸ்

இல: 342,344,346 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

*"ஹரிஹரானந்தம்" ஐயப்பன் அருட்கடாட்சத்தை அனைத்து ஆன்மாக்களுக்கும்
வாரி வழங்க வாழ்த்துகின்றோம்"*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**சபரீச ஐயப்பப தேவஸ்தான மகோற்சவ குருமணி,**
**கோண்டாவில் பர்வதவர்த்தனி அம்மன் தேவஸ்தான பிரதம குரு,**
**உரும்பிராய்.**

# ஹரிஹரானந்தம் ஆனந்திக்க
# "சாமியே சரணம் ஐயப்பா"

"பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால் ஐயனை நீ காணலாம்" என்ற வாக்கியத்திற்கமைய ஐயப்பனின் வழிபாடு மிகவும் சிறந்து விளங்குகின்றது. அறுபது நாட்க ளும் விரதமிருந்து மாலை அணிந்து சபரி மலைக்குச் செல்லும் அடியார்கள் யாழ் மண்ணில் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இவ்வகையில் கோண்டாவில் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்து வருகிறார் சபரீச ஐயப்பன். இவ்வாலயத்தின் குரு சுவாமியாக இருந்து விரதத்தை சிறப்பான முறையில் வழிநடத்திக் கொண்டிருக்கிறார் அரிகரசுதசர்மா அவர்கள். அவரின் வழிகாட்டலில் பல சுவாமிமார்கள் மாலை அணிந்து மலைக்குச் செல்கின்றார்கள். அந்த வகையில் எமது குருசுவாமியிடம் வருடா வருடம் மாலை அணிந்த சுமுகலிங்கம் சுவாமி ஐயன் அருள் பெற்றவர். அவர் வருடா வருடம் ஐயனைப் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவதில் வல்லவர்.

அந்த வகையில் இம்முறை "ஹரிஹரானந்தம்" என்னும் ஐயனின் 18 படிகளின் தத்துவங்கள் அடங்கிய புத்தகமாக வெளியிடுகிறார். இம்மலர் ஐயப்ப கன்னி சாமிகளுக்கும், மற்றை சுவாமிகளுக்கும் மிகவும் உகந்தது. இதைப் வாங்கி ஒவ்வொரு சுவாமியும் முக்கிய மாகப் படிக்கவேண்டும். அவரின் முயற்சி மேன்மேலும் பெருகி சிறப்புற பல்லாண்டு காலம் வாழ சபரீச ஐயனை வணங்கி 'ஹரிஹரானந்தம்' நறுமணங்கமழ ஆசி கூறுகின்றேன்.

இந்நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருப்பணியாளர் திரு.வைத்திலிங்கம் சிவராஜா அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தின ருக்கும் அவருடைய தொழில் ஸ்தாபனங்களுக்கும், தொழில் ஸ்தாபன ஊழியர்கள் அனைவருக்கும் கோண்டாவில் ஸ்ரீ சபரிஸ ஐயப்பனுடைய அருள்கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து இறைவன் ஆசி வேண்டுகின்றேன்.

**"தேவசிவாகமஞான பானு"**
**பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள்**

*"சுவாமியே சரணம் ஐயப்பா"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்

# சபரீச ஐயப்பனின் புனித யாத்திரை

சபரிமலை யாத்திரை யாதி, மத வேறுபாடின்றி சமூக பொருளாதார அந்தஸ்தினாலும் எந்தவித வேறுபாடுமின்றி நல்லொழுக்கம், கட்டுப்பாடு, சமத்துவம், கடவுள் பக்தி, சேவை உணர்வு எல்லாம் ஒருங்கே சேர்ந்து அமைந்தது என்ற காரணத்தினால் ஏனைய புண்ணிய தீர்த்த யாத்திரைகளைவிட பல சிறப்பான அம்சங்கள் கொண்டதாக கருதப்படுகிறது. நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வதும் வருடந்தோறும் பக்தர்கள் எண்ணிக்கை பெருகி வருவதும் இந்த யாத்திரையின் மேன்மையைக் காட்டுகிறது. முடியதாவரும் பிற சமயத்தினரும் கூட இந்த சபரிமலை யாத்திரையில் கலந்து கொள்கின்றனர். ஸ்தல புராணங்களில் எந்த கோவில்களில் தரிசனம் எப்போது விஷேசம் என்பது பற்றிக் கூறப்படுகின்றது. அதன்படி சபரிமலையில் மகரஜோதி தரிசனத்துக்குதான் முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது. மரக சங்கராந்தியன்று தான் பகவான் கலியுக வரதன் ஸ்ரீ ஐயப்பன் ஒரே சமயத்தில் யோகியாக வும் தரிசிக்க முடிகிறது. இந்தப் புத்தகத்தில் விடையங்களைப் படித்து நீங்கள் ஒவ்வொருவரும் ஐயப்ப சாமியாகுங்கள்.

இந்நூலிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணியாளர் திரு வைத்திலிங்கம் சிவராசா குடும்பத்தினருக்கும் எமது ஆலயத்தின் ஐயப்ப சுவாமி சுமுகலிங்கம் சாமி அவர்கள் ஐயனின் துணைகொண்டு வெளியீடு செய் வது ஐயப்பனின் அருள் கடாட்சமே ஆகும். அனைத்து உள்ளங்களுக்கும் ஐயன் அருள் கிடைத்து பிரார்த்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐயப்பன் பக்தன்
முத்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
*சிவமயம்*
ஓம் சுவாமியே சரனம் சரனம்

**ஸ்ரீ சிவபூதவராயர் தேவஸ்தானம்,**
**கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

# வாழ்த்துச் செய்தி



இப்புவியிலே மானிடர்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் களைந்து பக்தர்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஐயப்பன் சபரி மலையிலே வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். ஐயனை வழிபட்டு அவன் அருள் பெற வருடா வருடம் பல்லாயிரக் கணககான பக்தர்கள், ஐயப்ப சுவாமிகள் சபரி மலைக்குச் யாத்திரை சென்று வருவது அனைவரும் அறிந்ததே. அங்ஙனம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ள முடியாத பக்தர்கள் நலன் கருதி யாழ்ப்பாண நகரிலே கோண்டாவில் கிழக்குப் பதியிலே 18 படிகளுடன் ஐயனுக்கு ஆலயம் அமைத்து மஹோற்சவம் மண்டல பூஜைகள் யாவையும் வெகு சிறப்பாக "குரு சுவாமி" சிவஸ்ரீ.கு.அரிகரசுதசர்மா அவர்கள் நடத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

இவ்வாலயத்தில் மாலை அணிந்து விரதம் அனுஷ்டித்து வரும் ஐயப்பா சுவாமிகளும் ஏனைய ஐயப்ப சுவாமிகளும் பயன்பெறும் விதத்தில் குமாரசாமி.சுமுகலிங்க சாமி அவர்கள் ஐயப்ப சுவாமியின் பெருமைகளை விளக்கும் "ஹரிஹரசங்கமம்" என்னும் நூலினை வெளியிட்டு அந்நூல் எல்லோராலும் பாராட்டப்பட்டது. அந்த வரிசையில், விளங்கும் "ஹரிஹரானந்தம்" என்னும் பக்திப் பாமாலையை வெளியிட முன் வந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இவர் இதைப் போன்று இன்னும் பல அரிய நூல்களை வெளியிட வேண்டும் என வாழ்த்தி இந்நூலை அனைத்து ஐயப்ப அடியார்களும் வாங்கிப் படித்து பயன்பெற வேண்டும் எனவும், இவ் அருள்நூல் வெளிவர பொருள் உதவி புரிந்த சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா அவர்கட்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஐயனின் அருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் என சபரீச ஐயப்பனதும் கோண்டாவில் வடக்குப் பதியுறை ஐயப்பனும் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசி வழங்குகிறேன்.

சுபமஸ்து

**இங்ஙனம்**
**சிவஸ்ரீ.ஞானசம்பந்த.ஜோதிநாதக் குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

**தென்மராட்சி வலயக் கல்வி பணிமனை,**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**

# வாழ்த்துரை

"காப்பது விரதம்" என்பது ஔவையார் திருவாக்கு. "கொல்லா விரதம் குவலய மெல்லாமோங்க" என்பது முதுமொழி. விரதத்தை நோன்பு என்று சொல்லுவதுமுண்டு. நோன்பு அல்லது விரதம் அனுஷ்டிப்பவரது மனம் பக்தி, பரிசுத்தம் அடைவதுடன் ஞானமும் கைவர வழிபிறக்கிறது. விரமிருந்தால் ஆன்மா ஈடேறுகிறது. செய்த பாவம் ஒழிகிறது. சக்திக்கு தகுந்தபடி விரதம் இருந்து தான, தர்மங்கள் செய்வது முக்கிய வழிபாடாகும். விரதத்தை நித்திய, நைமித்திய விரதம் என பார்க்கும்போது ஐயப்ப விரதம் நைமித்திய விரத வகைகளுள் அடங்குகிறது. கார்த்திகை, மார்கழி மாதங்காளை உள்ளடக்கிய காலத்திலும் அமைகின்றது.

விரத அனுட்டான விதிமுறைகள் மனிதனை "ஐயப்பசாமி" என்ற உயர் நிலைக்கு உயாத்தி வைத்திருக்கும் காலம் இக்காலம். வரையறை செய்யப்பட்ட விதிமுறைகளை அறியவும், அதன் பலன்களை அறியவும் வழிகாட்ட 2007ம் ஆண்டு "அரிகரர் சங்கமம் ஐயப்பன்" என்னும் நூலை வெளிக்கொணர்ந்த, எனது கல்வி வலய ஆசிரியர் சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் "ஹரிஹரானந்தம்" என்னும் நூலை 2008ம் ஆண்டு வெளியீடு செய்வது எமது கல்விப் பணிமனையின் அனுசணையுடன் தென்மராட்சிப் பிரதேசத்து ஆலயங்கள், பாடசாலைகளில் அவர் ஆற்றுகின்ற சமயப் பணிகளின் வெளிப்பாடு என்று கூறுவது பொருத்தமாகும். மேலும் இந்நூல் வெளிவர அனுசரணை வழங்கும் வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பெருந்திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா அவர்களின் ஆன்மீகப் பணிகளில் ஒன்றாகும். இவ்வகையாக வெளிவரும் நூலானது ஐயப்ப சுவாமிகள், அடியார்கள், மாணவர்கள், ஆசிரியாகள் அனைவரும் பயன்படுத்தி உயர்வாழ்வு வாழ, எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி வாழ்த்துரை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறேன்.

"சுவாமியே சரணம் ஐயப்பா"

**கு.பிரேமகாந்தன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**
**தென்மராட்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
சாமியே சரணம் ஐயப்பா

# பிரதேச செயலகம், நல்லூர்.

## வாழ்த்துச் செய்தி

பாரத தேசத்தில் மட்டுமல்லாமல் இலங்கையிலும், பக்தர்களைக் கொண்ட அரிஹர புத்திரனாம் ஐயப்ப சுவாமிக்கு யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் கோண்டாவிலில் தேவஸ்தானம் அமைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அரிஹரபுத்திர னாக பூத நாதனாக இப்பூவுலகைக் காத்தருளும் ஐயப்ப சுவாமியின் அற்புதங்களை எழுத்திலே, சொல்லிலோ கூறி முடியாது. வருடம்தோறும் ஐயப்ப பக்தர்கள் இருமுடி தரித்து விரதமிருந்து, கல்லும் முள்ளும் நிறைந்த சபரி மலையேறி சபரீசனை தரிசிக்க செல்வது நாம் அறிந்த விடயமாகும். இந்த யாத்திரையில் யாழ்ப்பாண பக்தர்களும் வருடா வருடம் கலந்துகொண்டு சுவாமியின் தரிசனம் பெற்று, சபரிவாசனின் புகழை யாழ் மண் ணிலும் பரப்பி வருவது சாலச் சிறந்த பணியாகும்.

இத்தகைய மேன்மைமிக்க ஐயப்ப சுவாமியின் பக்தர்களில் ஒருவரான கு.சுமுகலிங்ம் சாமி அவர்கள் சுவாமியின் புகழை எடுத்தியம்ப பல நூல்களை வெளியிட்டுள்ளார். முன்னரும் இவர் சைவசமயம் சார்பானதும், மாணவர்களுக்கு பயனுடையதுமான பல சமய நூல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வரிசையில் இவர் சமயப் பணியின் வெளிப்பாடாக அமைந்த இந்த நூல் போல எதிர்காலத்திலும் மேன்மேலும் பல சமயம் சார்ந்த புத்தகங்களை, யாழ்ப்பாண சைவ சமுதாயத்திற்கு வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல ஐயப்ப சுவாமியைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

"சுவாமியே சரணம் ஐயப்பா"

**பாலசிங்கம் செந்தில்நந்தனன்,**
**பிரதேச செயலர்,**
**நல்லூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

# வாழ்த்துரை

ஐயப்பன் வழிபாடானது அண்மைக் காலத்தில் பிரபல்யம் அடைந்து வருகின்ற நிலையில் ஐயப்பன் வழிபாடானது சைவப்பாரம்பரியத்தில் ஐயனார் வழி பாடக புராதனமாக இருந்து வந்துள்ளது. சமய ரீதியில் ஐயனார் வழிபாடா னது சைவத்தையும் வைணவத்தையும் இணைக்கும் ஒரு வழிபாடகவும் சமய சமரசங்கானும் ஒரு வழிபாடகவும் இருந்து வந்துள்ளது. இத்தகைய வழிபாடு அண்மைக்காலத்தில் புத்துயிர்பெற்று ஐயப்பன் வழிபாடாகப் பிரபல்யம் பெறுவ தற்கு அண்மைக் காலப் போர்ச் சூழலில் ஐயப்பன் வழிபாட்டினால் யாழ்ப்பாண மக்களின் ஆத்மீக வாழ்விலும் பண்பாட்டு வாழ்விலும் அடைந்த வெற்றிகளே காரணம் எனலாம். இந்நிலையில் 2007ம்ஆண்டில் "ஹரிஹரசங்கம் ஐயப்பன்" என்னும் பெயரையுடைய நூல் ஐயப்ப வழிபாட்டின் மகத்துவத்தை வெளிப்படுத் துவதாக வெளிவந்து அமோக ஆதரவைப் பெற்று நின்றது. அந்நூல் பெற்ற ஆதரவைத் தொடர்ந்து ஐயப்பன் மகிமை, பஜனைப் பாடல்கள், பஜனை செய்யும் ஒழுங்கு முறைகள் என்பனவற்றைத் தாங்கி "ஹரஹரானந்தம்" என்னும் பெயர் தாங்கி தென்மராட்சிப் பிரதேச மக்கள் சார்பில் வருகின்ற இரண்டாவது நூலாகும். போரினால் நலிந்த தமிழ் மக்கள் வாழ்வை ஆத்மீக ரீதியில் மீட்டெடுக்க உதவுவதனை தலையாய நோக்கமாகக் கொண்டுள்ள நூல் வெளியீட்டாளர்களின் ஆத்மீக நோக்கை இந்நூல் சிறப்பாக நிறைவேற்ற வாழ்த்துரை வழங்குகின்றேன்.

**க.தேவேந்திரன்**
**மாவட்ட இணைப்பாளர்**

## வீபூதி

*வீபூதியின் மகத்துவம் சொல்லொணாதது; மந்திரமாய், தந்திரமாய், சுந்தர மாய் , ஞானந் தருவாய், பூச இனியதாய், நோய்களைத் தீர்ப்பதாய் உள்ளது. "நீறில்லா நெற்றி பாழ்" என்று மூதாட்டி ஞானம் கண்டு கூறினார்.*

*வீபூதி - அழியாத ஞானத்தைக் (செல்வத்தை) கொடுப்பது.*
*திருநீறு - தீவினை அனைத்தையும் நீறுபடுத்துவது.*
*இரட்சை - தீமைகளிலிருந்து இரட்சிப்பது.*
*சாரம் - ஆன்மாக்களின் மல மாசைப் போக்குவது.*
*பசிதம் - அறியாமையை அகற்றி சோதி நல்குவது.*

*இவ்வித பொருமைகள் பொருந்திய பெயர்களை உடைய வீபூதி, கற்பம்; அநுகற்பம்; உபகற்பம்; அகற்பம் என நால்வகைப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச் செய்தி

இந்து பண்பாட்டு மரபில் மக்களை பக்திநெறி மூலம் இறை இன்பம் காணச் செய்யும் சமய நெறியே இந்து நெறி. இறை இன்பத்தில் திளைத்த பக்தனுக்கு பாரதம் கடந்து கோண்டாவில் பதியில் எழுந்தருளியிருக்கும் ஐயப்ப சுவாமி, ஞான ஒளி பரவச் செய்யும் அற்புதக் கடவுளாக விளங்குகின்றார்.

பரம, விஷ்ணு ஜோதிகள் இணைந்த வடிவமே ஐயப்பன் என்பதனை,

"மோகினி வடிவம் கொண்ட
முகில் வண்ணன் தன்னை சேர்ந்து
சோகமில் ஐயனைத்
தோற்றி யோய் நமச்சிவாய"

என்னும் பாடல் அடிகள் நன்றாக விளக்குகின்றது.

இந்துமதம் பேசும் சமய, தத்துவங்கள், கலாசார விழுமியங்கள் ஏராளமானவை. இவற்றில் பாமரமக்களும் இறை அனுபவங்களை உணர்வதற்கு புராணங்களூடாக வெளிவரும் ஹரிஹரானந்தம் மக்களை நல்வழி வாழ வழிகாட்டும். இவ்வழியிலே அறிவே வடிவான சபரீச ஐயப்பன் விளங்குவதும், இந்நூல் வெளிவரும் இன்புறதக்க அம்சங்கள் ஆகின்றன. இவ்வாறான முயற்சிகள் தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

**எஸ். உதயபாலன்,**
**அபிவிருத்தி உதவியாளர்.**
**இந்து சமய கலாசாரம்.**

## பஞ்சாட்சரம்

**விளக்கம்:** பஞ்ச என்பது ஐந்து. அட்சரம் என்பது எழுத்துக்கள். குருவிடம் திட்சை பெறும்போது இம்மந்திரம் உபதேசிக்கப்படும். புத்தகங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் குருவிடம் முறையாக பெற்றாலே மந்திரத்தின் சக்தி பிரகாசிக்கும். 'சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை'. 'நற்றுணையாவது நமச்சிவாயவே' 'சொல்லுநா நமச்சிவாயவே' என்னும் அருள் வாக்குகளால் பஞ்சாட்சரத்தின் பெருமையை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்



# மகரஜோதி தரிசனத்தின் மஹாமந்திரம்

## "சுவாமியே சரணம் ஐயப்பா"

இப்பூவுலகில் தற்காலிக பிராணிகள் பல. அவற்றுள்நாமும் ஒரு வகை. அவற் றுள் சிந்திக்கத் தெரிந்த பிராணி மனிதனே. இங்குள்ள போகப் பொருட்கள் எல்லாம் எம்மை விட்டு விலகிவிடும். இதனை உணர்த்தவே சமயங்கள் வழி சமைக்கின்றன. வேதாகம உண்மைகளை புராண இதிகாசங்கள், திருமுறைகள் என்பன உணர்த்துகின்றன. புராணங் களும், மூர்த்திகள் குறித்த புராணங்களும் ஆதி கால உண்மைகளை வெளிக்காட்டி வருகி ன்றன.

ஐயப்ப புராண வரலாற் றிலே சபரி மலை சைவ, வைணவ சங்கமத்தின் ஒப் பற்ற திருவருளை உணர்த்தி நிற்கின்றது. ஐயப்ப வழிபாட்டின் புனிதத் தன்மை, சாதி, மத, இனவேறுபாடின்றி அனைத்து மக்களையும் கவர்ந்து இழுப்பது மகரஜோதி தரிசனத்தின் மகிமையேயாகும்.

சரணம் சரணம் என்று சொல் பாதம், பாதத்தைச் சரணடைந்தோம் என்ற பெரும் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. இப்புனித யாத்திரை மனிதனைப் புனிதனாக்கி பிறப்பின் உண்மையை உணரச் செய்து பிதிர்க் கடன்களை நிறைவு செய்து, ஜீவாத்மாக்களைப் புனிதப்படுத்துகின்றது. இதற்கு சுவாமியே சரணம் ஐயப்பா என்ற மகா மந்திரங்களுடன் கார்த்திகை மாதம் 1ம் திகதி தொடக்கம் மகரசங்கிராந்தியன்று அன்று காணும் ஞானதீபமாகிய மகரஜோதி தரிசனத்தை காண்பது வரையும் வாயோயாது மனம் மாறாது விரதக் கொள்கையை அனு சரித்து புனிதப்பேறு அடைகிறான்.

இவற்றை உணர்த்தும் முகமாக ஐயப்பன் பெயரால் வெளிவரும் "ஹரிஹரானந்தம்" என்ற நூலை ஆசீர்வதித்து வாழ்த்துவதும் ஐயப்பனின் பாதங்களில் சமர்ப்பிப்பதும், ஐயப்பனின் அரும்பெரும் திருவருளேயாகும்.

**வைத்திலிங்கம் சிவராஜா**
**சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்**
**திருப்பணியாளர்.**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஹரிஹரானந்தம்



திருவருள் முன்னின்று பொருத்தமான காலத்தில் இந்நூல் வெளிவருவது ஹரிஹர அனுக்கிரகம் அன்றில் பிறிதில. இந்நூல் தன்னகத்தே "ஐயப்பன் வரலாற்று உண்மைகள்" என்னும் பகுதிப் பக்கங்களை கொண்டதாயும்,

பஜனை ஒழுங்குமுறைகள்

பஜனை பாடல்கள்

சமய விடைய கருத்துக்கள் எனும் விடயங்களைக் கொண் இருக்கின்றது.

இதைத் தொகுத்துத் தரும் சான்றோன் கு.சுமுகலிங்கம் சாமி ஐயன் ஐயப்ப சுவாமிகள் அடிமை என்ற சரணகதிப் பக்தி மேலீடு போற்றுதற்குரியது.

இதைவெளியீடு செய்யும் கோண்டாவில் ஸ்ரீ ஐயப்பன் 14ம் தீர்த்த யாத்திரைக் குழுவின் திவ்யப் பணி காலத்தின் தேவையறிந்த திவ்ய கைங்கரியமாக அமைகின்றது.

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
தருணம் இ∴தப்பா தரணி காத்திட, உன்
அரனெம் காப்பாகி அருளும் ஐயப்பா அந்தக்
கரணம் சுத்தமாய் என்றும் சரணம் ஐயப்பா!

என்று கூறி அமையும் முன் இப்பணிக்கு வாழ்துரைக்கும் திவ்யானுகூலமும், இப்பேர்ப்பட்ட பணிகள் இன்றைய உலகுக்கு அத்தியாவசியமானதென்றும் தொடர்ந்து விகர்ஷித்து வினை நன்றாயமைய ஹரிஹர புத்திரன் தாள் பணிந்து வாழ்த்தி அமைகின்றனம்.

**வ.ஆ.தங்கமயில்** F 81
AMSST (London), Quantitiy Surveyer, Licensed Sureyer,
B.A. (Ceylon) **சைவ சித்தாந்த பண்டிதர், சைவப் புலவர், பண்டிதர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்
சாவகச்சேரி
# J / Sarasalai Saraswathi Vidyalayam
CHAVAKACHCHERI

..................200 ..



## வாழ்த்துரை

நீண்ட காலமாக நம் நாட்டுச் சமயச் சான்றோர்களும், அறிஞர்களும் சமூகச் சீர்திருத்தத் திற்காகவும் இந்து சமயத்திலுள்ள தீயவற்றைக்களைவதற்காகவும் பாடுபட்டுவந்துள்ளனர். சகோதரநேயம், அன்பு, பொறுமை, சமத்துவம் ஆகியவற்றில் இன்றியமையாமையை மக்களுக்கு உணர்த்துவதற்காக இவர்கள் தத்தமக்கேற்ற வழிமுறைகள் மேற்கொண்டனர்.

பக்தி நெறியின் மூலம் மக்களையும் சமூகத்தையும் சீர்திருத்த இயலும் என்பது சகலரதும் நம்பிக்கையாகும். இறைவன் திருவுருமுன் அனைவரும் சமமாதலால் அவனது திருப்பெயரை எடுத்துரைத்து வேற்றுமைகளுக்குக் காரணமான ஆணவத்தைக் களைந்திட இயலும் என்பது பலரது கருத்தாகும்.

இவ்வாறான பெரும் பணிகளைச் செய்த, செய்கின்ற சைவப் புலவர்கள் வரிசையில் எமது வித்தியாலய ஆசிரியரும், சைவப் புலவரும் ஆகிய திரு.குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களின் சமூகப் பணியும், சமயப் பணியும் மகத்தானது. கணேசகலசம், சைவ வாழ்வியலும் இடர்களைப் பதிகங்களும் என்று பல நூல்களை எழுதிய இவர் "ஹரிஹராசனம்" என்ற நூலை வெளியிடுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூலானது ஐயப்பன் தோற்றம், வழிபாட்டு முறை, பதினெட்டுப் படிகளின் விளக்கம் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துரைபதோடு ஐயப்ப வழிபாடு மூலம் சமயப் பண்பாடு மக்களிடையே வளர உறுதுணையாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

இவரது பணி மேன்மேலும் வளர்ந்து அதனூடாக சைவமும், தமிழும் தளைத்தோங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இந்த நூலிற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய சாவகச்சேரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணியாளர் உயர்திரு வைத்திலிங்கம் சிவராசா அவர்களின் சமயப்பணி மேன்மேலும் வளரவும், அவருடைய தொழில் நிறுவனங்கள் இறையருளினால் மேன்மேலும் வளரவும் இறைவனை வாழ்த்தி வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

அதிபர்

திருமதி ஜெயமணி தெய்வீஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
சாமி சரணம்

# அணிந்துரை

சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ் மண்ணில் சைவப் பணியாற்றி வரும் சைவ மகான்களின் வரிசையில் சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் குமராசாமி சுமுகலிங்கம் (J.P) அவர்களும் ஓர் அடையாள சின்னமாவார். இன்று வரை தான் ஆய்ந்து அறிந்து கொண்ட அரும்பெரும் இந்து மத தத்துவ அனுட்டான, ஆலய கிரியைகள் உள்ளிட்ட பல்வேறு இந்துசமய விடயங்களை படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை இலகுவாக புரிந்து இறைவனை முறைப்படி தரிசிக்கவும், அதன்பால் அறநெறியில் ஒழுகவும், பல நூற் சுவடிகளை உருவாக்கியும் தொகுத்தும் எம் கரங்களில் கிடைக்கச் செய்த அவர் பணி போற்றுதற்குரியது.

இவரது இறையருள் கூடிய இம் முயற்சியின் மற்றுமோர் அங்கமாக வெளிவரும் "ஹரிஹரானந்தம்" நூலானது நீண்ட காலமாக இந்துக்கள் மத்தியில் செல்வாக்குடனும், மிகவும் பயபக்தியுடனும் அனுட்டிக்கப்படும் "ஐயப்ப சுவாமிகள்" விரத மகிமையையும் அதன் பலாபலன்களையும் அவ்விரதத்தினூடாக ஆன்ம ஈடேற்றம் பெற்றவர்கள் பற்றியவை உள்ளிட்ட பல்வேறு அருட் காட்சிகளைத் தாங்கி வெளிவரும் இந்நூல் இவ்வழிபாடு பற்றிய தெளிவின்மை, நூற்பற்றாக்குறை என்பவற்றை நிச்சயம் ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும். அத்துடன் இந்நூல் வெளிவருதில் உறுதுணையாக நிற்கும் வைத்திலிங்கம் சிவராசா அவர்களிற்கும், நூலாசிரியருக்கும் இறையருள் மேலும் கிடைக்க வேண்டுமென்பதுடன் ஆசிரியரிற்கு பல சக்தி வல்லமைகளை ஸ்ரீ ஐயப்ப சுவாமிகள் வழங்கி என்றும் அவர் பணிக்கு இறையருள் துணை நிற்க எம் பிரானை வேண்டி அணிந்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"மேன்மை கொள் ஐயப்பன் மகிமையை புரிக மக்களெல்லாம்"

**V.விஜயரூபன் (விக்கி)**
**B.A. (Hons) history. S.P**

# நமஸ்காரம்

1.ஏகாங்கம்: மார்பில் கைகளை குவித்து வணங்குதல்

2.திரியாங்கம்: சிரசில் இரண்டு கைகளையும் குவித்து வணங்குவது. திரி என்பது மூன்று. அங்கம் என்பது உறுப்பு.

3. பஞ்சாங்கம்: இது பெண்களுக்கு மாத்திரம், தலை, கைகள் இரண்டு, முழங்கால் இரண்டு ஆகிய ஐந்து உறுப்புகளும் நிலத்தில் பட வணங்குதல்.

4. அட்டாங்கம்: ஆண்களுக்குரியது. தலை, கைகள் இரண்டு, செவிகள் இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புகளும் நிலத்திலே பட வணங்குதல். வணங்கும்போது (அட்டாங்க, பஞ்சாங்க) வடக்கிலும் கிழக்கிலும் தலை வைக்கவேண்டும். அத்திக்குகளில் கால்களை நீட்டகூடாது. கால்களை நீட்டும்போது அவ்வீதியில் வேறுமூர்த்திகள் இருந்தால் கால் நீட்டி வணங்காது மூர்த்திகள் இல்லாத வீதிகளிலேயே வணங்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.



## "அரிகரர் சங்கமம் ஐயப்பனின் உட்கிடை"

சனாதன தர்மமான இந்துமதம் மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்வியல் நெறிமுறைகளைக் கூறுகின்றதும், ஆத்மீக உணர்வை ஏற்படுத்து வதுமாக அமைகின்றது. இவ்வகையில் மனிதனை நல்ல வண்ணம் வாழ வைக் கவே தர்மத்தின் வடிவிலான தர்மசாஸ்தா அவதரித்தார். ஹரிஹரசங்கமத்தின் பிறப்பிடமான ஐயப்பனின் அருட் பிரவா ஹத்தினால் 2007ம் ஆண்டு வெளியீடு செய்யப்பெற்ற "ஹரிஹர சங்கமம் ஐயப்பன்" என்ற புனிதநூல் எமக்குக் கிடைக்கப் பெற்றது. அதைக் கருத்தூன்றிப் படிக்கம் வாய்ப்பும் ஏற்பட்டது.

அதில் இந்துமத வழிபாட்டு முறைகளுள் ஒன்றான விரதம் ஆத்மீக உணர்வை ஏற்படுத்தி உண்மைப் பொருளை உணர ஓர் ஊடகமாக இருப்பதும், உரிய முறைப் படி விரத அனுஷ்டானத்தை மேற்கொண்டால் தெய்வீக ஒளிப்பிரவாகத்தை ஒவ்வொரு விரதிகளா லும் தரிசிக்க முடியும் என்பதையும் ஆசிரியர் வெளிப்படுத் தியுள்ளார். ஹரிஹர புத்திரனின் தோற்றம் அவரின் அருட்திறன், விரதகாலம், விரத அனுஷ்டான முறை அதன் பயன்பாடு பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

மேலும் கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்கள் உலகின் எல்லா மதங்களுக் கும் புனிதமானவை என்றும் கூறி தனது நூலில் விநாயகர் திருப்பள்ளி எழுச்சி யில் ஆரம்பித்து, மணிவாசகரது திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள், திருவெம் பாவை, திருமால் திருப்பள்ளி எழுச்சி, ஆண்டாளின் திருப்பாவை, சுப்பிரமணிய பாரதியாரின் திருபள்ளி எழுச்சி, சிவநாம மகிமை, நாகவழிபாடு, திருவெம் பாவைத் தத்துவம், ஹரிஹரசுதனின் நூற்றெட்டுச் சரணங்கள், தியான சுலோகம் ஆகியவற்றைக் கூறி இறுதியில் இந்நூல் இதன் வாசர்களுக்கு ஏற்படுத்தும் பயன்பாடு மற்றும் இதில் தவறுதலாக ஏற்பட்டிருக்கும் குற்றங்களைப் பிழை பொறுக்கும் வேண்டுகோளும், இந்நூலை கருத்தூன்றிப் படிககும் அன்பர்கள், சபரீச ஐயப்பனின் தூய மங்கள ஜோதியைத் தரிசிக்க வேண்டும் என்று அந்த தர்மசாஸ்தாவை வேண்டி நிற்பதாகவும் அமைகின்றது.

இவ்வகையில் தன்னை ஐயன் ஐயப்பசாமிகள் அடிமை எனவே கூறித் தொகுப்பாசிரி யராக விளங்குகின்ற அன்பன் திரு ஐயப்பசாமி குமராசாமி சுமுக லிங்கம் சாமி அவர்களைப் பாராட்டி மென்மேலும் இத்தகைய நூல்களை வெளியிட்டு ஆத்மீக ஆர்வலர்களின் ஆன்மப் பசியைப் போக்கவும், பிறவிப் பிணிணை நீக்கவும் வழிகாட்டிப் பணிபுரியுமாறு வேண்டிப் பணிகின்றேன்.

நன்றி

**"கீதோபதேசவித்தகர்"**
**எஸ்.கே.என்.தவராஜா**
**(சைவசித்தாந்த முதுகலைமாணி மாணவன்)**
**உதவிப் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
சாமி சரணம்

# முகவுரை

என்னை என்றும் வழிநடத்திவரும் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகன் பாதம் பணிந்து, கண்கண்ட தெய்வங்களான மாதா, பிதா, குரு, குலதெய்வங்கள், சற்குரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் திருப்பாதங்களைச் சரணடைகின்றேன்.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருள் எல்லாம் எளிதில் முற்றுற
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுக
மன்னவன் மலரடி பணிந்துபோற்றுவாம்

கலியுகத்தில் உலகெங்கும் மெய்பொருளைத் தேடுவோரும், உலகியற் பொருளைத் தேடுவோரும் நான், எனது என்கின்ற அகங்கார மமகாரத்துடன் அல்லற்படுவதைக் காண் கின்றோம். நான், எனது என்பவை ஒரு மனிதனிடமிருந்து எப்போது விலகுகின்றதோ அப்போது மனிதன் புனிதம் அடைகின்றான். தர்மம் குறைந்து அதர்மம் தலை தூக்குவதற்கு இவையே காரணமாகின்றன. இவையகல தெய்வீகம் வழிகாட்டும். அதிலேயும் தன்னை இழக்கவும், சுயரூபத்தை இழக்கவும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மத மாச்சரியம் போன்றவற்றிலிருந்து விலகவும் ஐயப்ப விரதம் வழிகாட்டுகின்றது. ஐயப்ப விரதிகள், விரத நியதிகளை தவறாது கடைப்பிடிக்கின்றபோது, தன்னைத் தானே இழக்கின்ற மனப்பாங்கு வெளிவரும். இதையே "கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை" என்கின்ற வழி நடைச்சரணம் உணர்த்தி நிற்கின்றது.

பெருமுடி, திருமுடி, இருமுடி என அழைக்கப்படுகின்ற இருமுடிச்சுக்களானவை இம்மை, மறுமைப் பயன்களை உணர்த்துகின்ற உன்னதமான தத்துவமானவை. இதனை உணர்த்தவே சாதி, மத, இன பேதமின்றி சமரச சன்மார்க்க நோக்கிலே ஐயப்பன் அருட்காட்சிகள் அமைகின்றன. 'ஹரிஹரானந்தம்' என்கின்ற இந்நூலும் அருகாட்சியேயாகும். இந்நூலுக்கு வித்திட்டவர்கள் வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருப்பணியாளர், மாரிமைந்தன் திரு.வைத்திலிங்கம் சிவராசா அவர்களும் அவர் குடும்பத்தினரும் ஆவார். இவ்வித்து தழைப்பதற்கு குருசாமி அவர்களின் வழிகாட்டலும், சபரீச ஐயப்பன் அருட்கடாட்சம், ஐயப்ப சுவாமிமார்கள், ஐயப்ப அடியார்கள், அன்புள்ளம் கொண்டவர்களின் அருளாசியுமே காரணமாகும்.

இந்நூலிற்கான ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அணிந்துரைகள், ஐயப்பனின் கிருப கடாட்சத்தை உணர்த்தி நிற்கின்றன. ஒப்புநோக்குதலுக்கு உதவிக்கரம் கொடுத்தவர்கள் திருவருள் வ.ஆ.தங்கமயில், ஆசிரியை திருமதி சுதாமதி நடராசா, அறநெறிப் பாடசாலை ஆசிரியைகள் செல்வி மிருணா மகாலிங்கம், இளஞ் சைவப் புலவர் செல்வி வினோ தம்பையா மற்றும் குடும்ப சுவாமிமார்களுமாவார்கள். கணனி வடிவமைப்பில் உதவிய சன் பிறிண்ட் நிறுவனத்தினரும் அழுத்தக வேலைகளை திருவள்ளுவர் அழுத்தக உரிமை யாளர் உயர்திரு சொ.விமலன் அவர்களினதும் அவர் பணியாளர்களினதும் அளப்பரிய முயற்சியினாலும் 'ஹரிஹரானந்தம்' இன்று ஐயப்பன் பாதங்களில் சமர்ப்பணம் செய்வதற்கு இறையருளும் திருவருளுமே காரணமாகும். அனைத்து உள்ளங்களுக்கும் ஹரிஹர புத்திரனின் அருட்காட்சம் கிடைக்க பிரார்த்தித்து சபரீசன் பாதங்களில் சமர்ப்பணம் செய்கின்றறேன்.

**சைவப் புலவர் திரு.குமாரசாமி சுமுகலிங்கம் சாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

# நாள்தோறும் வணங்கி நல்வாழ்வு வாழ வழி காட்டும் ஸ்ரீ ஐயப்பன் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| சூரி. மாந்தி | சுக்ரன் செவ்வாய் | | சனி |
| புதன் குரு | ஸ்ரீ ஐயப்பன் | | கேது |
| ராகு | | | |
| | | | சந்திரன் |

சுவாமி ஐயப்பனின் ஜாதகத்தை – ஐயப்ப விரதக்காலமாகிய புனித நாட்களில் வீட்டில் வைத்து பயபக்தியோடு பூஜிக்க, பெரும்பேறு கிடைக்கும் என இறை ஜாதக பூஜை முறை பற்றிக்கூறும் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இப்படி தெய்வ அவதாரங்களின் ஜனன கால நவகோள் அமைப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஜாதகத்தை வரைந்து, வழிபட்டுப் போற்றுவது, நம் முன்னோர் வகுத்த வழிபாட்டு முறைகளில் ஒன்று. ஸ்ரீ ராமர் ஜாதகம் இப்படி பூஜிக்கப்படுவதை அனைவரும் அறிவர்.

அருள் வழங்கும் ஐயப்ப ஜாதகத்தை மாலையணிந்துள்ள ஐயப்பமார்கள் மட்டுமல்லாது யாவரும் ஐயப்பனை பூஜிக்கும்போது ஐயனின் ஜாதகத்திற்கும் பூச்சாற்றி அதன் முக்கிய இடங்களில் சந்தனக் குங்குமப் பொட்டு வைத்து வழக்கமான சரணகோஷத்தோடு, சுவாமி ஐயப்பனின் மூலமந்திரத்தைச் சொல்லி தியானித்து, தினமும் கற்பூர ஆராதனை செய்து வணங்கிவர நினைத்த காரியங்கள், நலன்கள் யாவும் கைகூடும்.

### ஐயப்பன் மூல மந்திரம்

ஓம் ஹரிஹர புத்ராய
புத்ரலாபாய!
மகா சாஸ்த்ரே
சத்ரு நாசனாய
மதகஜ வாகனாய
பிரத்யட்ச சூலாயுதாய!
வரவாத சர்வ ஜனமே!
வசமான்ய ஸ்வாஹா

### சாஸ்தாவின் காயத்ரி

பூத சேனாய வித்மஹே
பவபுத்ராய தீமஹி!
தந்தோ சாஸ்தா
பிரசோயாத்
பூதநாத சதானந்த
ஸர்வபூத தயாபரா
ரக்ஷரக்ஷ மஹாபாஹோ
சாஸ்த்ரே தும்யம நமோநமோ

நன்றி : சிவஸ்ரீ க. [illegible] சாமி,
[illegible], சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

சுவாமியே சரணம் ஐயப்பா

## "மஹாகுருசாமி" எனப் போற்றப்படும் M.N.நம்பியார் சாமி அவர்கள் 19.11.2008ம்



## ஆண்டு ஐயப்ப மண்டல பூசை காலத்தில் ஐயப்பன் திருவடி நிழலை அடைந்துள்ளார். மஹா குருசாமி அவர்களின் ஐயன் அருள் வாசகம்

### உடனுக்குடன் பலன்தரும்

'தர்ம சாஸ்தா'

'குருசாமி' எம்.என்.நம்பியார்

1942 ஆம் வருடம் ஆலப்புழையில் மதுரை பால விநோத சங்கீத சபையினர் 'ஸ்ரீ ஐயப்பன் நாடகம்' நடத்திக் கொண்டிருந்த சமயம், அந்த நாடகம் முடிந்ததும் நாடகக் கம்பனியில் இருந்த இளைஞர்களும், பெரியவர்களுமாக நாங்கள் சபரிமலைக்கு யாத்திரை புறப்பட்டோம்.

சபரிகிரிக்குச் செல்ல அப்பொழுதெல்லாம் இரண்டு வழிகள். ஒன்று பெரிய வழி, இன்னொன்று சின்ன வழி, சின்ன வழி என்பது வண்டிப் பெரியமாறு மவுண்ட் எஸ்டேட் வழியாகச் செல்வது, பெரிய வழி, கல்லும், முள்ளும் நிறைந்த கரடு முரடான, நடந்து செல்வதற்கு மிகவும் சிரமமான பாதை. அரையக்குடி வழியாகச் செல்வது; காட்டு மிருகங்கள் நடமாடும் பகுதி.

இந்த வழியில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. மக்கள் அதிகமாகக் குடியேறியிருக்கவில்லை. மக்களில்லாததால் காட்டு மிருகங்களும் தன்னிச்சையாக வந்து போய்க் கொண்டி ருக்கும். மனிதர்கள் இருக்கும் இடத்தை விட்டுத் தொலைதூரம் சென்றுவிடும் இயல்பு மிருகங்களுக்கு என்றும் உண்டு.

காட்டு மிருகங்களின் நடமாட்டத்தால் அந்த வழியில் வாழ்ந்த மக்களும் ஜாக்கிரதையாகவே இருந்தனர்.

செல்லும் வழியில் அங்கங்கே குடிசைகள் இருக்கும், அவற்றுக்கு அருகே உள்ள மரங்களின் மேல் குடிசைகள் கட்டியிருப்பதை நாங்கள் அப்போது கண்டு வியந்தோம். யானையோ, மற்ற காட்டு விலங்குகளோ, வந்தால் அவசர அவசர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக மரத்தின் மேல் ஏறி, மிருகங்கள் திரும்பிப் போகும்வரை, அந்தக் குடிசைக ளில்தான் தங்குவார்கள்.

எங்களுடைய சபரி யாத்திரையில் முதல் நாள் ஆலப்புழையிலிருந்து கோட் டயம் புறப்பட்டோம். கோட்டயம் அடைந்ததும் காயல், எனவே, பஸ் அதற்கு மேல் செல்ல இயலாது. காயலைக் கடக்கப் படகுப் பிரயாணம். காயலைக் கடந் ததும் அக்கரையிலிருந்து மீண்டும் பஸ்ஸில் சென்று எரிமேலி அடைந்தோம். இன்றிருப்பது போல, நாங்கள் சென்ற சமயம் பாலம் எதுவும் இருக்கவில்லை. எனவே, யாத்ரீகர்கள் பஸ்ஸிலும் படகிலும் மீண்டும் பஸ்ஸிலும் சென்றுதான் எரிமேலியை அடைந்தனர்.

இரண்டாவது நாள் அழுத மலையில் முகாமிட்டோம். மூன்றாவது நாள் பம்பா நதிக்கரையில் முகாமிட்டோம். எரிமேலிக்கு அடுத்து, கரிமலை, இது மிகவும் ஏற்றமானது நடந்து செல்வதற்குக் கடினமாக இருக்கும். கரிமலை ஏற்றம்தாண்டி கரிமலை உச்சியை அடைவதற்குள் மூச்சு பின்னர் கரிமலை இறக்கம். வேகமாக இறங்கி வந்து, சிறியானை வட்டம், பெரிய யானை வட்டம் இவற்றைப் பார்த்தபடியே பம்பை நதிக்கரை வந்து சேருவோம்.

இந்த மலையின் மீது ஏறும்போது சொற்ப உணவு; எளிய கஞ்சி தான். பம்பரைக்கரை அடைந்ததும் கடுமையான வழிநடை முடிந்தது என்று விருந்து வைத்து ஓரளவு நல்ல சாப்பாடு உண்பது வழக்கம் இன்றும் பம்பைக் கரையில் யாத்ரிகர்கள் விருந்துண்பர்.

அப்பொழுது மூன்று லட்சம் பேர் அங்கே குழுமியிருந்தனர். எங்கள் குழுவில் 4,5 பேர் காணாமற் போய்விட்டார்கள். அவர்களை மீண்டும் கண்டு பிடிப்பதற்குள் மிகவும் சிரமப்பட்டு விட்டோம். அப்படி ஒரு பிரும்மாண்டமான கூட்டம். அந்த மாதிரி கூட்டத்தை நான் முன்பு கண்டதே கிடையாது. சாமியே சரணம் ! சாமியே சரணம்! என்ற கோஷம் எல்லாத் திக்கிலும் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

நாங்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சற்றுத் தூரத்தில் ஒரு பாம்பு ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் படம் ஒன்றுக்குப் பக்கத்தில் படம் எடுத்து நின்றதைக் கண்டோம். சிறிது வினாடி அதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது என் கால்மேல் ஏதோ ஊர்வது போல் ஓர் உணர்வு, குனிந்து பார்த்தால், சிறு பாம்பு ஒன்று என் காலில் ஊர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டேன்; காலை உதறினேன், அந்தச் சிறுபாம்பு எட்ட விழுந்தது. அருகில் இருந்தவர்கள் மெல்ல அதை எடுத்து வீசினார்கள். இன்னும் அந்த நினைவு மனத்திலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பா நதியில் இன்னொரு விசேஷம், மெழுகுவர்த்தியோ, அகல் விளக்கையோ ஏற்றி, ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமியை மனமுருக எண்ணியபடியே பயபக்தியுடன் பம்பையில் மிதக்க விடுவார்கள். ஏற்றிய விளக்குகள் ஆயிரக்கணக்கில், மெல்ல மெல்லக் கவிழாமல் வெகுதூரம் வரை சென்று மறைவதைப் பார்க்கும்போது மனதில் விவரிக்க முடியாத ஆனந்தம் ஏற்பட்டது.

சபரிமலையில், ஸ்ரீ ஐயப்ப சுவாமி தரிசனத்துக்காகக் கூடிய 10 லட்சம் பக்தர்களும் உணர்ச்சி வசப்பட்டு சரணம் ஐயப்பா! சரணம் ஐயப்பா! என்று கூவுவார்கள் அப்போது சுற்றுப்புறம் உள்ள மலைப்பகுதி எல்லாம் லேசாக அதிருவதுபோல இருக்கும். அப்படி ஒரு பக்தி வெள்ளம்'!

பக்தர்களின் கூட்டமும், ஐயப்ப கோஷமும் சேர்ந்து உடலைப் புல்லரிக்கச் செய்யும். இதுவே ஒரு புதுமையான அனுபவம். மறக்க முடியாத அனுபவம். சொற்களால், விபரிக்க இயலாத அனுபவம்.

சபரிமலை யாத்திரையின்போது எங்களுக்கெல்லாம் ராஜண்ணா என்பவர் எல்லா வசதிகளும் செய்து தருவார். 85 வயதுவரை உயிருடன் இருந்து அண்மையில் தான் காலமானார். 85 வயதிலும் டென்னிஸ் விளையாடும் அளவுக்கு அவர் திடமாக இருந்தார். கடைசி வரையில் எந்த நோயும் அணுகவே இல்லை.

பல வருடங்களுக்கு முன்பு, ஸ்ரீ ஐயப்ப சுவாமியிடம் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. எங்களிடம் இருந்த அன்பினால், சபரிமலைப் பிரயாணத்தில் வேண்டிய சௌகரியங்களை எங்களுக்குச் செய்து வந்தார்.

ஒரு சமயம் அவர் வயிற்று வலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். மூஸ் என்ற வைத்தியரிடம் அடிக்கடி மருந்து வாங்கிச் சாப்பிடுவார். அப்படியும் அவருடைய வயிற்றுவலி நீங்கியபாடில்லை.

ஒருநாள் அவருக்குக் கடுமையான வயிற்றுவலி, மருந்து வாங்கி வருவதற்காக தம்முடைய பணியாளை வைத்தியரிடம் அனுப்பினார். அந்த ஆள் ஸ்ரீ ஐயப்பனுடைய தீவிர பக்தர், அந்தப் பணியாள் சென்றிருந்த சமயத்தில் வைத்தியர் வீட்டில் இல்லை. வெறுங் கையோடு மருந்தில்லாமல் எப்படிச் செல்வது? எஜமான் வயிற்று வலியால் வேதனைப்படுவாரே என்று எண்ணிய அவன், தன்னிடமிருந்த ஸ்ரீ ஐயப்பன் விபூதியையே பொட்டலமாகக் கட்டி, வைத்தியர் தந்த மருந்து என்று சொல்லி ராஜண்ணாவிடம் தந்தான். வைத்தியர் வயிற்று வலிக்குத் தந்த புதிய சூர்ணம் என்று எண்ணி, அதை ராஜண்ணாவும் சாப்பிட்டார். பல நாள்களாக அவரை வாட்டி வதைத்து வந்த வயிற்றுவலி இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடி விட்டது.

அடுத்த நாள் வைத்தியரை ராஜண்ணா சந்தித்தார். “இவ்வளவு நாளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுவலியால் என்னைத் துடிக்க வைத்து விட்டீர்களே! நேற்று தாங்கள் தந்த மருந்தை முன்பே தந்திருக்கக் கூடாதா? நீங்கள் தந்த புதிய மருந்தைச் சாப்பிட்டதும் வயிற்றுவலி முற்றிலும் நீங்கிவிட்டது என்றார்.

வைத்தியருக்கு ஆச்சரியமாக இருந்தது. "நான் எங்கு தங்களுக்கு நேற்று மருந்து தந்தேன்? நேற்று நான் ஊரிலேயே இல்லையே!" என்றார்.

"இல்லையே! நீங்கள் தந்ததாகத்தானே என் பணியாள் மருந்தைக் கொண்டு வந்து தந்தான்" என்று சொல்லிப் பணியாளை அழைத்து, நடந்ததைச் சொல்லும்படி பணிந்தார்.

பணியாளும் பயந்தபடியே, "நேற்று நான் போயிருந்தபோது வைத்தியர் இல்லை. அதனால் உங்களுடைய வயிற்றுவலி நீங்க வேண்டும் என்ற எண்ணத்தால், ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் விபூதியை மருந்து என்று தங்களிடம் தந்தேன்" என்று உண்மையைச் சொன்னான்.

வைத்தியருக்கும் ராஜண்ணாவுக்கும் ஒரே வியப்பு, பிரபல வைத்தியர் தந்த பல மருந்துகளாலும் தீராத வயிற்றுவலி, ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் விபூதியால் நொடியில் மறைந்து விட்டதை அனுபவத்தில் உணர்ந்து கொண்ட ராஜண்ணா அன்றிலிருந்து ஸ்ரீ ஐயப்ப சுவாமியிடம் நம்பிக்கை கொண்டார். சபரிமலைக்குச் சென்று வந்தார். இது ஸ்ரீ ஐயப்ப சுவாமி செய்த அற்புதமே ஆகும்.

கோயில்களுக்குச் செல்கிறோம்; தெய்வங்களைத் தரிசிக்கின்றோம்; வழிபடுகின்றோம்; பிரார்த்தனை செய்கிறோம்.

தெய்வம் அற்புதங்களைச் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் அற்புதங்கள் நடந்தால் அதைப்பற்றி ஆச்சரியப்படவும் கூடாது.

என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் ஐயப்ப பக்தர்; சில தடவை சபரிமலைக்குச் சென்றும் வந்திருக்கிறார்.

ஒரு நாள் என்னைப் பார்க்க வந்தார். "இந்த முறை சபரிமலைக்கு உங்களுடன் வர விரும்புகிறேன்" என்றார் அவர்.

"என்ன விஷேசம்?" என்று கேட்டேன்.

"உங்களுடைய வந்தால் பக்தி சிரத்தை, நியம நிஷ்டை அதிகமாக இருக்கும். ஸ்ரீ ஐயப்ப சுவாமி சீக்கிரமாகவே என் வேதனையைத் தீர்ப்பார் என்று நம்புகிறேன் என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுடைய என்ன கஷ்டம்?" என்று விசாரித்தேன்.

அவருடைய வீட்டுப் பிரச்சினையைச் சொன்னார். அவருடைய சம்சாரத்துக்குச் சற்று சித்தக் கோளாறு; மனப்பிரமை, பைத்தியம் என்று சொல முடியாது. நன்றாகவேதான் இருப்பார். ஆனால் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்வார். எண்ணங்களில் தொடர்பு இராது; செய்யும் காரியங்களில் சமபந்தா சம்பந்தமில்லாமல் இருக்கும் சமையலுக்குக் காய்கறி வாங்கி வரச் செல்வார். நண்பர் கடைக்குச் சென்று, பல காய்கறிகள் வாங்கி வருவார். பகலில் சாப்பாட்டு வேளையில் ஒன்றும் செய்திருக்க மாட்டார் அவர் மனைவி, "நீங்கள் காய்கறி வாங்கித்தரவில்லை, நான் என்ன செய்வது?" என்பார் ஃபிரிஜ்ஜைத் திறந்து பார்த்தால், காய்கறிகள் அதில் அப்படியே இருக்கும். இப்படி ஒரு மறதி; சித்தப் பேதலிப்பு.

எங்கள் பயணத்தின் போது சபரிமலைக்கு அவரும் கூடவே வந்து கலந்து கொண்டார். ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் அருளால், விரைவில் மனைவியின் சித்தப் பிரமை நீங்கிவிட்டது. ஆண், குழந்தை பிறந்தால் மணிகண்டன் என்று பெயர் வைப்பதாகவும் என்னிடம் சொன்னார். அவருக்குக் குழந்தையும் பிறந்தது. ஆனால், பெண் குழந்தை என் பக்கத்து வீட்டுக்காரர் வாழ்க்கையில் ஸ்ரீ ஐயப்ப சுவாமி நடத்திய அற்புதம் இது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கைலாசம் - மானசரோவரம் யாத்திரை சென்றிருந்தேன். பனிமலைகளுக்கிடையே பயங்கரமான பள்ளத் தாக்குகளின் சரிவிலே அமைந்த பாதைகள் வளைந்து வளைந்து மேலே மேலே செல்லும் தடங்கள்.

ஓரிடத்தல் நான் ஏறிச் சென்ற மட்டக் குதிரையின் கால்கள் உறைபனியில் சிக்கிக்கொண்டிருந்தன. மிகச் சிரமத்துடன, பனியிலிருந்து கால்களை விடுவித்து என்னைச் சுமந்து மேலே தொடர்ந்து சென்றது அது. இன்னொரு சமயம் முழங் கால் வரை என் கால்கள் பனிப்பாறையில் அழுந்தின. இப்படி வெகு சிரமப்பட்டுப் பிரயாணம்செய்து கைலாசம்-மானசரோவரரைக் கண்டேன். இப் பிரயாணத்தின் போது எனக்குப் பின்னால் ஐயப்பன் துணையாக வருவது போல ஓர் உணர்வு ஏற்பட்டத்தையும், அத் துணையையே ஓர் ஆத்ம பலமாக உணர்ந்ததையும் கூட இங்கே சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் அருளால் தான் அந்த அற்புதமான "கைலாச-மானசரோவர" யாத்திரைய என்னால் பூர்த்தி செய்ய முடிந்தது.

ஸ்ரீ ஐயப்ப சுவாமி கண் கண்ட தெய்வம், உடனடியாகக் கஷ்டங்களுக்கு - பிரச்சனைகளுக்கு - நிவாரணம் காட்டும் தெய்வம் என்று மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்; ஏராளமாக, லட்சக் கணக்கில் விரதம் இருந்து, சபரிமலை சென்று ஸ்ரீ ஐயப்ப சுவாமியைத் தரிசனம் செய்து, அருளும், பயனும் பெற்று வருகிறார்கள். இது நிதர்சனமாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரீச ஐயப்பனின் சரித அருட்காட்சிகள் பத்து

அவதாரம் என்னும் சொல்லுக்குக் "கீழிறங்கி வருதல்" என்பது பொருள். மானுடத்தின் உய்வுக்காகத் தெய்வீகம் இறங்கி வந்து செயல்படுவதை எடுத்துரைக்கின்றது சநாதன தர்மம். தெய்வீகம் எங்கெங்கு வெளிப்பட்டாலும் அதனை வழிபட்டு உய்வதை இவ்வழிபாடு பேணுகிறது. ஸ்ரீ ஐயப்ப வழிபாடு என்னும் பரம்பொருள் வழிபாட்டின் மையம் இதுவே.

1. பந்தள அரசன் ராஜசேகரனுக்குக் குழந்தைப் பேறு இல்லை; அவன் சிவ பக்தன். சிவபிரான் அருளை வேண்டி நின்றான். ஒரு குழந்தைப் பேறில்லா அரண்மனைப் பிரார்த்தனையில் நுழைந்த தெய்வீக சக்தி கோடானு கோடி யர்க்குப் பக்தியும், சக்தியும், ஞானமும் ஆத்ம போத வரலாறாக மலர்ந்தது.
2. பாற்கடல் கடைந்தனர் தேவரும் அசுரரும். அமுதத்தைத் அசுரரிமிருந்து மீட்க உதவினார் விஷ்ணு. அது கருதி எடுத்த அவதாரம் மோகினி அவதாரம். கண்டத்தை அடக்கிய சிவமும் பாற்கடல் அமுதத்தைத் தகுந்தோர்க்குப் பகிர்ந்திட உதவிய மோகனமும் இசைந்த அற்புதமே தர்மசாஸ்தா.
3. ரம்பன் அசுரன் அவன் மைந்தன் மகிஷன். கொடுமை புரிந்த மகிஷனைச் சண்டிகாதேவி வதம் செய்தாள். ரம்பன் சகோதரன் கரம்பன். கரம்பன் மகள் மகிஷி. அவள் தவம் புரிந்து வரங்கள் பெற்றுத் தன் சகோதரன் வதத்துக்குப் பழிவாங்கினாள். தேவர்க்குக் கொடுமை புரிந்தாள். அரியும், அரனும் இசைந் திடப் பிறந்த சக்தியால் மட்டுமே அவளுக்கு அழிவு. அது அவள் பெற்ற வரம். எனவே, சிவம் பணித்திட, தர்ம சாஸ்தா மணி கண்டனாக அவதரித்தார்.
4. அரசன் ராஜசேகரன் பம்பை நதிக்கரையில் குழந்தையைக் கண்டான். குதூகலம் கொண்டான். மணிமாலை கழுத்தில் கண்டு மணிகண்டன் எனப் பெயரிட்டான்.
5. மணிகண்டன் அரண்மனையில் வளர்ந்தான். குருவிடம் கலைகள் பயின் றான். அவனது தெய்வீக சக்தி குருவுக்குப் புலனாயிற்று. குரு தட்சிணையாகத் தம் மகன் ஊமை -செவிடு நீங்கி நலம்பெற வேண்டினார். அவ்வாறே அருளி னான் மணிகண்டன்.
6. மகப்பேறற்ற அரசிக்கு ஆண் குழந்தை வாய்ந்தது. வாரிசு உருவில் உருக் கொண்டு அரண்மனையில் வஞ்சனை நுழைந்தது. நலம் புரியும் சக்திகளாக மாறின. அரசியும், அமைச்சனும் மணி கண்டனை அழிக்கத் திட்டம் தீட்டினர். மருத்துவனும் உதவினான். தலைவலி நாடகம் அரங்கேறியது. அரசிக்குப் புலிப் பால் கொணர மணிகண்டன் காடு சென்றான்.
7. தாயின் மனவேறுபாடும் ஸ்தயப் பிரியனின் நாடகத்தில் ஓர் அங்கமே. பஞ்ச பூதங்களும் துணையாகக் கானகம் சென்றான் ஐயன். மகிஷியுடன் போர் நிகழ் ந்தது. அவள் அழுதை நதியோரம் விழுந்தாள். அவள் மீது ஐயன் திருவடி பதித்து ஆடிய நடனம் சாப விமோசனம் தந்தது. அவள் மஞ்சளமாதா ஆனாள்.
8. இந்திரனும் தேவர்களும் புலிப்படையாக ஐயனுக்கு உதவினர். வன்புலி வாக னனாக நாடு மீண்டான் மணிகண்டன். தீமை புரிந்தோர் நாணினர். அனைவ ரும் பணிந்தனர். அ வன் மன்னித்து அருளினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பூமியில் தன் பணி நிறைவுற்றது என்று கூறிப் பந்தள அரண்மனையிலிருந்து விடைபெற்றான் மணிகண்டன். பந்தள அரசன் வேண்டிய வண்ணம் ஆலயத்தில் அமர்ந்து அனைவருக்கும் அருள்பாலிக்க இசைவு கொண்டான் ஐயன். அவன் அம்பு எய்து தேர்ந்திட்ட இடமே இன்றைய சந்நிதானம்.

10. கோடிக்கணக்கான பக்தர்கள்; கோடிக்கணக்கான பாதங்களின் வனயாத்திரை; கோடிக்கணக்கான இருமுடிச்சுகள்; கோடி கோடி இனிய நெய்யபிஷேகங்கள்; இடையறாச் சரண கோஷங்கள்! மாயைத் திரை அவிழ்ந்திட, அவரவர் மனம் மலர்ந்து கொண்டதற்கு ஏற்ப, ஆன்ம ஒளி - அங்கு செல்பவர்க்கெல்லாம் பரவசம் தருகிறது; தெய்வீக ருசி தருகிறது.

# நுண்பொருள் நுட்பங்கள் பத்து

தத்துவம், புராணம், சடங்குகள் என்பவற்றின் சங்கமத்தில் ஆன்மீகம் தரும் அற்புதம், சநாதன தர்மத்தில் மிக முக்கியம். அது ஐயப்ப வழிபாட்டில் இயல்பாகவும், இனிமையாகவும் அமைந்துள்ளது ஒரு தனிச்சிறப்பு. காணும் வெளிக் காட்சிகளும், கருத்தாக்கங்களும் கரைந்துருகி, ஆன்மீக நுட்பம் கொள்கின்றன; ஆன்மசக்தி மிகுகின்றது. இங்கு தரப்படும் ஆன்ம நுட்பங்கள் பத்தும் ஐயப்பன் அருளுக்கு இட்டுச் செல்பவை. எனவே, அவற்றைத் தியானிப்போம்.

## ஹரிஹரசுதன்

"நாராயணின் காருண்ய லாவண்யமும், பரமேஸ்வரனின் சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன் ஒரு மகாதேஜஸ் - ஒரு பெரும் ஜோதி பிறந்தது. இந்த தேஜஸே ஐயப்பனாக உருக்கொண்டது" என்று விளக்குவர் காஞ்சி முனிவர். ஹரி - விஷ்ணுவையும், ஹரன் - சிவத்தையும் குறிக்கும் சப்தங்கள். விஷ்ஸ என்பது எங்கும் பரந்தது என்னும் பொருளை உடையது. சிவம் என்பது மங்கலம் என்னும் பொருளுடையது. இவ்விரண்டின் இனிய இசையே "ஹரிஹரசுதன்".

## இருமுடிக்கட்டு

இருமுடிக்கட்டு புனிதமானது. பதினெட்டுப் படி ஏறி ஐயப்பன் சந்நிதானம் முன்னிற்கும் உறவுரிமை உடையது. இருமுடி சுமத்தல் இருவினை சுமத்தலின் குறியீடு என்பது பொதுவான எளிய விளக்கம். ஆழ்ந்து நோக்கும் போது, வாழ்க்கைப் பயணத்தில் இரைமுடியும், இறை முடியும் இணைந்து இருமுடிச் சுமையின் குறியீடாகவே இது இலங்குகின்றது. லௌகீகமும், தெய்வீகமும் வாழ்க்கை மீது ஏறிய இருமுடிக்கட்டு. இருமுடியில் முன்முடி தெய்வீகம் கருதியது, பின்முடி வழித்தேவை கருத்தியது. முன்முடியின் துணை முடியே பின்முடி. ஐயப்பனை நெருங்க நெருங்கப் பின் முடியின் சுமை குறையும். முன் முடியின் சுவை பெருகும். இறை அபிஷேகம் கருதிய புனிதப் பயணத்தின் தவிர்க்க முடியாத சுய தேவைச் சுமைகளே பின்முடி. சுயதேவை சுமைகளின் தவிர்க்க முடியாத பொருள் தாங்கும் முன்முடி, இரண்டின் இணையும் வாழ்க்கைப் பயணத்திதை உணர்த்தும் குறியீடே இரு முடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருஸ்வாமி

குரு தத்துவம் சநாதன தர்மத்தின் சிறப்பிடம் பெறுவது. குரு ஓர் ஆன்மீக வழிகாட்டி. பயபக்தியுடன் குருவிடம் பயிலும் பயிற்சி சிறந்த ஆன்மீக சாதனை யாக மலரும், எனவே குருநெறியின் பயிற்சிக் களமாகவும் ஐயப்ப வழிபாடு திகழ் கிறது.

யாத்திரையை வழிநடத்திச் செல்பவர் குருஸ்வாமி. யாத்திரையின் நாளும், நேரமும் குறிப்பவர் அவர்; தக்க வண்ணம் இருமுடிகட்டும் ஏற்பாட்டினைச் செய் பவர் அவர்; சரணம் ஒலிக்க இரு முடிகட்டுக்குத் தீபாரதனை செய்து, தலையில் ஏற்றி, யாத்திரைப் புறப்பாட்டை நெறிப்படுத்துவர் அவர். இப்புறப்பாடு மங்கல மானது; ஆனந்தமானது. இம்மங்கலத்தின் இழை சபரி மலை சந்திதானத்தில் தரிசனம் கண்டு பரவசம் கொள்வது வரை நீள்கிறது. இதனைப் பேணிக் காக் கும் பொறுப்புடையவர் குருஸ்வாமி. எனவே, குரு தத்துவத்தின் நடைமுறைக் காட்சியாக அவர் திகழ்கிறார்.

## வன்புலிவாகனன்

கடவுளின் திருவுருவங்களைச் சித்திரிக்கும் போது வாகனங்களில் எழுந்தரு ளுவதாக உணர்த்துவது சநாதன தர்ம மரபு. இம்மரபு புராண கால் வழி வருவதா யினும், தத்துவ நுட்பம் உடையது. ஆன்ம நலம் ஒளிர்வது. சிவனுக்கு நந்தி, விஷ்ணுவுக்கு கருடன், விநாயகனுக்கு மூஷிகம், முருகனுக்கு மயில், பராசக்திக் குச் சிங்கம் என்னும் நெறியில் மணிகண்டன் வன்புலி வாகனனாகின்றான்.

வாகனம் செலுத்திச் செல்வது; தனக்கென்று குறியோ நெறியோ பேணாதது. இறை ஆரோகணத்தில் வாகனமாகிய ஆன்மா தற்போதமற்று, பரபோதமுற்றுச் செயல்படும் நிலையே இங்கு சுட்டப்படுகிறது. இது பொதுத் தத்துவம். ஒவ்வொரு வாகனத்துக்கும் சிறப்புப் பொருளுணர்வும் உண்டு. கானகத்துக் கொடும்புலிபோலும் கொடிய அகங்கார மனம் அடங்க, ஐயனைச் சரணடைய வேண்டும். எந்த அரசிக்கோ பொய்த் தலைவலி போக்க அவன் நடத்தும் புலிப் பால் நாடகத்தில் நாம் அவனுக்கு வாகனமாக நம்மனம் தந்துதவ வேண்டும். தேவர் கூட்டத்துடன் இந்திரனே புலியாக அவனைச் சுமக்க முன்வரும்போது நம் மனப்புலி அக்கூட்டத்திலாவது ஒன்றாக வேண்டாமா? ஒன்றிட வேண்டாமா?

## மகிஷி மர்தனம்

ஐயப்ப வழிபாட்டில் மகிஷிமர்தனம் ஓர் முக்கிய நிகழ்ச்சி. காளை கட்டி சிவமே தரிசித்த முக்கிய காட்சி அது. தேவரும் மூவரும் அகங்குளிர்ந்த முக்கிய அனுபவம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரங்களின் நோக்கமே அதர்மம் ஒடுங்கித் தர்மம் பேணலாகும். அனைத்து அவதாரங்களுக்கும் இது பொருந்தும். இது மணிகண்டன் அவதாரத்தில் மகிஷிமர்தனத்தில் மாண்பு பெறுகிறது. தர்மசாஸ்தா தர்மம் காக்கும் நிகழ்ச்சி அது; நேரமது. தாமஸ உருவம் மகிஷி. காட்டெருமைத் தலையின் கொடிய அவதாரம் அது. பழி வாங்கல் என்னும் வேடம்பூண்டு தர்மம் சிதைத்தல் அவள் செயற்பாடு.

அகத்து வளரும் மகிஷியை ஐயனருளில் மர்தனம் செய்தால் சிவமே வந்து கண்டு களிக்கும் – நம்முள்ளேயே காளைகட்டி, ஐயன் நடனமிட்ட திருவடித் தீண்டுதலில் மகிஷியிடமிருந்து மாளிகைப் புரத்தம்மனே மலர்ந்து எழுவாள். மனத்தின் மகிஷியை மாளிகைப் புரத்தம்மனாக்கிய மகிமையே மகிஷிமர்த்தனம்.

## ஸ்வாமி திந்தகதோம்

எருமேலியில் நிகழும் பேட்டை துள்ளல் சபரி யாத்திரையின் விஷேச அம்சம். கன்னி ஐயப்பன்மார்களுக்கு இது கட்டாயம். வண்ணக் கலவை பூசி, காய் கனிகள், பலூன் கட்டி, வேடம் புனைந்து, "ஸ்வாமி திந்தகத்தோம் – ஐயப்ப திந்தகத்தோம்" என ஆடுவர் பக்தர்கள். உணர்வுழ ஆடும் ஆன்மீக உற்சாகம் அங்குண்டு. "ஸ்வாமி என்றகத்து ஓம்; ஐயப்பன் என்றகத்து – ஓம் என்னும் வேத மஹா வாக்கியம்தானே சந்நிதானம் என்னும் வேத மஹா வாக்கியம் தானே சந்நிதான வரவேற்பாகவும் திகழ்கிறது.

## மகரஜோதி

மகரஜோதிதான் ஐயப்ப தரிசனத்தின் சிகர நிகழ்ச்சி. இலட்சக் கணக்கான பக்தர்கள் மகரஜோதியைத் தரிசித்துப் பரவசமடைவர். பொன்னம்பல மேட்டில் ஜோதி தெரியும். மகர சங்கராந்தியன்று இது நிகழும். மலை முகட்டில் சிறிது நேரம் பேரொளி தோன்றி மறையும். "ஒளிவளர் விளக்கே, உலப்பிலா ஒன்றே" என்று போற்றும் உணர்வின் காட்சி அது. "தமஸோ மா ஜ்யோதிர் கமய" எனும் ஞானப் பிரார்த்தனையின் காந்தமலைத் தீபாராதனை அது.

## சின் முத்திரை

ஸ்ரீ ஐயப்பனின் வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. தெய்வீகம் நோக்கிய மானிடப் பரிமாணத்தின் உன்னத நிலை சின்முத்திரை, எப்போதும் தான் இணைந்திருக்கும் மூன்று விரல்களையும் நீக்கி ஆள்காட்டி விரல் (சுட்டு விரல்) பெருவிரலோடு ஒன்றிய நிலையில் அமைத்துக் காட்டுவது சின்முத்திரை. கல்லாலின் நிழலமர்ந்த தட்சிணாமூர்த்தி சனகாதி முனிவர்க்கு உணர்த்திடும் ஞான முத்திரையும் இதுவே. ஆணவம், கன்மம், மாயை என்னும் அஞ்ஞான விருத்திகளாகிய மும்மலம் தவிர்த்து பரம்பொருளுடன் ஒன்றுதலே இதன் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய்யபிஷேகம்

ஐயப்பன் நெய்யபிஷேகம் பிரியன். இருமுடிக் கட்டில் இன்றியமையாத முதன்மையது நெய்த் தேங்காய். நெய் நிரப்புதல் ஒரு முக்கிய சடங்கு. தேங்காயின் ஒரு கண் திறந்து, இளநீர் அகற்றி அதன் வழி நெய் நிரப்புவர். இது உட்பொருள் உடையது. பக்தனின் மனம் என்னும் தேங்காயில் உலகியல் சுவை நீரை அப்புறப்படுத்தி அதில் ஞான நெய் நிரப்புதலை இச்சடங்கு குறிக்கும். சந்நிதான அபிஷேகத்துக்கு இதுவே எடுத்துச் செல்லப்பட வேண்டும். தன்னில் எழுப்பிய ஞானமே நெய்யபிஷேகம். அதுவே இறுதி இலட்சியப் பிராப்தி. அதில சிறிது நெய் பிரசாதமாகிறது. அருட்தரிசனத்தில் பெற்ற ஆனந்த அனுபவமே அது.

## பதினெட்டாம் படி

ஐயப்பன் பணித்த வண்ணம் அமைத்த படிகள் பதினெட்டுப்படிகள், "சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி" என பக்தர்கள் மனம்நெகிழ்ந்து போற்றும் அருட்சுரபி. அகமுகப் பயணத்திலும் இப்படிகள் முக்கியத்துவம் உடையவை. ஸ்ரீமத் பகவத்கீதையின் 18 அத்தியாயங்கள் என்றும்; ஐம்புலன்; ஐம்பொறி; ஐம் பிராணன், மனம்-புத்தி, அகங்காரம் எனும் அந்தக்கரணம் மூன்று - ஆகிய திரிகரணங்களால் பெருக்கிய 18 பகை கடந்தது என்றும்; ஐம்புலன், எண் ராகங்கள், முக்குணம், அஞ்ஞானம்-ஞானம் என்பவை கடந்தது என்றும்; நால் வேதம், நான்கு உபாயம், ஆறு சாஸ்திரம், நால் வர்ணம் என்றும் 18 நிலைகள் கடந்தது என்றும் கருதுவர். அகப் பயணப்படி நிலைகள் என உளம் உணர்த்துவது மிக முக்கியம்.

இப்பத்து நுண்பொருளில் - அகவுணர்வுத் தூண்டுதலின் ஆன்ம நலம் அருந்த வல்லவர், ஐயப்பன் அருட் திளைப்பில் ஆனந்தம் நிரம்பிடுவர்.

# விரத நெறிகள் பத்து

மனம் மாயையின் துகள், அதில் முக்குணச் சூழல் எப்போதும் நிகழும். முக்குணங்கள்: ராஜஸம், தாமஸம், ஸத்வம் என்பன. ராஜஸம்: அதிகாரம் செய்யும்; ஆக்கிரமிக்கும்; ஆணவம் பெருகும். தாமஸம்: சலிப்புடன் தப்பும்; நலியச் செய்யும்; வஞ்சனை புரியும். ஸ்தவம் : சமநிலை நாடும்; பிறழ்ச்சியை ஒதுக்கும்; அமைதியில் செயல்படும். தெய்வீகம் கருதுவோர் மனத்தில் ஸ்தவம் பேணுவர்; சித்த சுத்தி நாடுவர்; சித்த விருத்தி ஒடுக்குவர்; மனம் மாண்ட நிலையும் பெறுவர். அதற்கு விரத நெறி ஓர் உபாயம்.

"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" எனும் கீதமே விரத நெறியின் உயிரோட்டம். ஐயப்ப விரதம் மனக் கட்டுப்பாட்டுப் பயிற்சித் தளம். அதுவே ஒரு தற்காலிக சந்நியாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றம் ஓர் அடையாளம்

சவரம் செய்யதா முகம், நீலம் அல்லது கருமை நிற ஆடை துளசிமணி மாலை என விரத அடையாளம் தொடங்குகிறது.

## நீராடல்

"புறத்தூய்மை நீரால் அமையும்" என்பது வள்ளுவர் வாக்கு. இருமுறை நீராடி இறை நினைவில் திளைத்தல் முறை.

## சாத்வீக – மித உணவு

உணவுகள் உணர்வுகளோடு தொடர்புடைய. புலால் நீக்கம் ஸத்வம் வளர்க்கத் தேவை. புனிதச் சூழலுக்கு மது – மாமிசம் – புகை முதலியன தவிர்த்தல் மிக அவசியம். எனவே ஐயப்பன்மார்கள் உணவில் கட்டுப்பாடு பேணுவர்.

## உடல் சுகம் தவிர்த்தல்

உடலில் மையங்கொண்ட உணர்வு, அதில் நின்று விடுபட்டு உயர் நிலைக்கு எழ வேண்டும். எனவே தலையணை – மெத்தை போன்ற உடல் சுகங்கள் தவிர்க்கப்படுகின்றன. கானகப் பயணத்துக்கு இது உதவுவதும் உண்மையே.

## புலனடக்கம்

பிரம்மச்சரியம் பேணுதல், ஐம்புலன் வழிச்செல்லும் அவாவினை விடுதலே நோக்கம். பக்தன் உள்ளத்தில் பிரம்மச்சாரியம் பெருக்கும் முயற்சி ஐயப்ப விரதத்தின் முக்கிய அங்கம். பெண்களைத் தாயாகவும், சகோதரியாகவும் காணும் இயல்பு வலியுறுத்தப்படுகிறது. இது சபரிகிரீசனைப் பிரம்மச்சாரியாக அனுபவிக்க வழிவகுக்கும்.

## உரைநலம்

வாக்கு நான்கு தீங்குகள் கண்டு அவற்றை நீக்கப்பணிப்பார் வள்ளுவர். பொய்யாமை – இன்னாசொல்லாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை – எனத் தனித்தனியாக விளங்குவர். ஐயப்பன்மார் இந்நான்கும் பேணிய நலப்பேச்சு உடையவர்களாக விரதம் காப்பர்.

## கூட்டு வழிபாடு

ஐயப்ப விரதத்தின் அங்கங்களில் ஒன்று கூட்டு வழிபாடு. கார்த்திகை மாதம் ஆயிரக் கணக்கான ஆலயங்களில், சிறு சிறு பக்தர் குழாங்கள், விரத கோலத்தில், பக்தி சிரத்தையோடு கூடிநின்று சரணம் விளிக்கும் அழகே தனி. தன் முனைப்பு அடங்குதற்கும், மனம் அடக்கம் கற்பதற்கும், சகபயணச் சாதாகர்களை மதிப்பதற்கும் இது ஒரு நற்பயிற்சி. அங்கே சத்சங்கம் மென்மையாக அரும்புகிறது. யாத்திரையின் போது இது தொடர்கிறது; ஆழமும் விரிவும் அடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னதானம்

'அன்னம் பஹுகுர்விதா' என்கிறது வேதம். "அன்னத்தை மிகுதியாக ஆக்குக" என்பது பொருள் . அன்னதானம் என்பது அன்பின் அடையாளம்; அனைவரையும் நேசிப்பதன் அடையாளம். அப்பயிற்சிக்கு ஐயப்பன் விரதம் முக்கிய இடம் தருகிறது. விரத நெறி பேணுவோர் தம் இல்லங்களிலும், அண் மைக் கோயில்களிலும், பம்பையிலும் அன்னம் பகிர்தல் காணலாம். ஸ்ரீ ஐயப்ப னையே 'அன்னதானப் பிரபு' வாகக் காணுதல் இப்பண்பின் உச்ச நிலையாகும்.

## விளியழகு

உடன்பயில்வோரையும், பழகுவோரையும் "சாமி – சாமி" என அழைத்துப் பேசும் மரபும் ஐயப்ப விரத நெறியின் அங்கமாகும். சிலர் இன்னும் தெளிவாக, 'வந்திடுவேன் ஐயப்பா' , 'பால் கொடு ஐயப்பா' என்றும் பேசுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல; மாலை அணியாதவர்கள் கூட ஐயப்ப பக்தர்களை 'சாமி' என்றே விளித்து பேசுகிறார்கள். பார்ப்பவை எல்லாம் ஐயப்பனாக வேண்டும் என்னும் தத்துவப் பயிற்சியின் வித்து இது. "தத்துவமஸி" யை நோக்கிய நீந்தல் இது என்று ஆன்மிகப் பெரியவர்கள் அருளுகின்றனர்.

## தெய்வீகம் பெருகல்

அனைத்து ஆன்மீக முயற்சிகளின் நோக்கமும் உள்ளொளி பெருக்குதலே. ஐந்து புலன்களை ஓட்டைகளாக உடைய பானையில் அமுதம் அள்ளுவது எப்படி? பரமானந்த அமுதக் கடலில் பானையையே அமிழ்த்தி விடுவது தான் வழி என்பது மணிவாசப் பெருமான் அனுபவம். அதுவே ஐயப்ப வழிபாட்டிலும் செயல்படுத்தப்படுகின்றது. பூஜை – பஜனை – சரணம் விளித்தல் என்பவற்றில் ஆயினும் சரி; குருசாமியைப் பெற்று விரத நெறிவிதிகளை அனுசரித்து தன் முனைப்பு அடங்கப் பெறுதலில் ஆயினும் சரி; இருமுடி சுமந்து வனயாத்திரைக்கடன்களை முற்றுமாக நிறைவேற்றிப் பொன்னுபதினெட்டாம் படியேறி சந்நிதானம் அடைவதிலாயினும் சரி; மாலையிடுதலில் தொடங்கி நெய்யபிஷேகம் காண்பதுவரையிலும் – ஏன் அதற்கு மேலும் விரதம் ஆன்மீகத் தைப் பேணுகிறது. ஆன்மீக விரதத்தைப் பேணுகின்றது. அப்பேணுதலே வாழ்க்கைக்கு அர்த்தம் அளிக்கிறது.

## தங்கும் தாவளங்கள் பத்து

சபரி யாத்திரை ஒரு வன யாத்திரை; ஆனால் புனித யாத்திரை. மேற்கொள் ளும் வகையில் மேற்கொண்டால் அது வாழ்க்கை யாத்திரையே அழகும், பயனும், அர்த்தமும் உடையதாக்கிவிடும். வனயாத்திரையில் மேடும் பள்ளங்க ளும் உண்டு; கல்லும் முள்ளும் உண்டு; கடினமும் களைப்பும் உண்டு. என்றாலும் தாவளங்கள் என்னும் இளைப்பாறும் தங்கிடங்கள் உண்டு. அவரவர் சக்திக்கேற்ப தங்கும் தேவையும், அவரவர் பெறும் புத்துணர்ச்சிக்கேற்ப நோக்கி நகர்தலும் நிகழும் தாவளம் நோக்கி நகர்தலும் நிகழும். தாவளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு சூழல்கள் உடையன. என்றாலும் புண்ணியம் நாடலும், இலட்சியம் பேணலும் எல்லாத் தாவளங்களுக்கும் பொது.

"நமமுட யாத்ரா - சபரிமலைக்கே" இது சரண கோஷம்

வாழ்க்கையும் இதுதானே! தாவளங்கள் என்னும் பல பிறவிகளில் தங்கி இளைப்பாறி இருமுடி சுமந்து சபரியை நாடுவதுதானே நம் வாழ்க்கையும்!

'நம்முட இலட்சியம் - சபரிமலைக்கே
யாரைக் காணான் - ஸ்வாமியைக் காணான்
ஸ்வாமியைக் கண்டால் - மோக்ஷம் கிட்டும்!
எங்கே கிட்டும் -இங்கே கிட்டும்
எப்போ கிட்டும் - இப்போ கிட்டும்
யாரைக் காணான் - ஸ்வாமிகள் காணான்"

## எருமேலி

மரபு வழிப்பாதை எருமேலியில் தொடங்கும். இரும்புன்னிக் கரையில் காடு தொடங்கும். எருமேலித் தோட்டில் நீராடி, பேட்டைத்துள்ளலில் உற்சாகம் பெறும் தாவளம் அது. கொச்சம்பலம் என்னும் சிறிய கோயில், வலிய அம்பலம் என்னும் பெரிய கோயில், வாவர் மசூதி ஆகிய மூன்றிலும் வழிபாடும் நிகழும்.

## அழுதாமேடு

ஐயப்பன்மார் தலப்பாறக் கோட்டையை அடைந்து கோட்டைத் தலைவருக்கு மரியாதை செய்துவிட்டுக் காளைகட்டி சென்று சிவாலயத்தில் வழிபட்டு, அழுதா நதி சென்று புனித நீராடிப் பூஜைக்குப் பின் சிறிது ஓய்வெடுப்பர். அதன் பின் அழுதா மேடு என்னும் குன்றும் ஏறுவர். அழுதாமேடு அழ வைத்து விடும். சுவாமி ஐயப்பன் அங்கு நடந்து சென்ற மனக்காட்சியில் பக்தர்கள் நெஞ்சு நெகிழும், "ஏந்திவிடய்யா- தூக்கிவிடய்யா" என்னும் கோஷம் அர்த்த - ஆழத்தோடு கேட்கும். பாதைக்குக் கூறுவது வாழ்க்கை முழுமைக்கும் எனத் தொனிக்கும்.

## இஞ்சிப்பாறை

அழுதா மேட்டின் அருகே அமைந்த பாறை, பக்தர்கள் இதனருகிலுள்ள கல்லிடும் பாறையில் அழுதை நதியிலிருந்து எடுத்து வந்த கல்லினை இடுவர். இஞ்சிப்பாறை மூப்பன் ஆலயம் இங்குள்ளது. அது மலையரையர் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு வழிபட்டு ஐயப்பன்மார் ஓய்வும் எடுப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்குழிப் பள்ளத்தாக்கு

இஞ்சிப்பாறையை அடுத்து வருவது. இங்கும் இளைப்பாறலாம். இதன் பின் சுமார் 10 கி.மீ. தூரம், இடையே ஊர்கள் இல்லாத காட்டு வழி நீளும்.

## எலவந்தாவளம்

புதுச்சேரி ஆற்றோரம் அமைந்த தாவளம் இது. விலங்குகள் நீர் பருக வரும். கானகச் சூழல் இனிமை உடையது. நல்ல தீர்த்தம். ஐயப்பன்மார் கஞ்சி குடித்து விட்டு உடம்பை எளிதாக்கிக் கரிமலை ஏறுவதற்குத் தோதான இடைத்தங்கல்.

## கரிமலை

"கரிமலை ஏற்றம் கடினம் கடினம்" எனப்படுவது உண்மையே. அழுதா மேட்டை விடக் கடினமான ஏற்றம் இது. ஓய்வெடுக்காது ஒரேயடியாக ஏறுதல் இயலாது. எட்டுத் தட்டுக்களாக அமைந்த மலை. ஏழாவது தட்டு முடிந்ததும் வரும் மேடு கரிமலை மேடு. கரிமலை நாதர் தரிசனம் முக்கியம். வன துர்க்கைக் கும், கொச்சு கடுத்தைக்கும் கோயில்கள் உள்ளன. தேங்காய் உடைத்தும், மஞ்சள் பொடி தூவியும் வழிபாடு செய்வர். வெடி வழிபாடும் உண்டு. இங்கு நீர் ஊறிவரும் கிணறு ஐயப்பன் அம்பினால் உருவாக்கிய ஊற்று என்பது ஐதீகம். கரிமலை ஏற்றத்திலும் கடினமானது கரிமலை இறக்கம் 'தேகபலம் தா– பாதபலம் தா' என்னும் நெகிழ்வான சரண ஒலிகள் அங்கு கேட்கும்.

## பம்பை

நதிக்கரைத் தாவளங்கள் கரிமலை இறக்கம் சென்று சேருமிடம் வலியான வட்டம், சிறியான வட்டம் என்னும் பம்பை நதிக்கரைத்தாவளங்கள், பம்பையில் புனித நீராடல், பிதர் கடன் நிறைவேற்றுதல், பம்பா ஜோதி மிதக்க விடல், பம்பா சத்யா எனும் நல்விருந்தில் பங்கேற்றல், சரணம் விளித்தல், பஜனை புரிதல் என்னும் பல்வகையான ஆன்மீக இலாபங்கள் பெறுவர் பக்தர்கள்.

## அப்பாச்சிக்மேடு

பம்பையிலிருந்து புறப்படும்பக்தர்கள் பம்பை கணபதி கோயிலில் கணபதி, ஸ்ரீராமர், ஹனுமான், பார்வதி மற்றும் நாகராஜக்களை வணங்கி நீலி மலை ஏறுவர். இந்த ஏற்றமும் கடினமானதே. அடுத்து வருவது அப்பாச்சி மேடு. அது அச்சம் தருவது இருபுறம் அமைந்த பள்ளங்கள் உடையது. அப்பள்ளங்களை அப்பாச்சிக்குழி, இப்பாச்சிக் குழி என்பர். இருபுறப் பள்ளங்களிலும் உறையும் வனதேவதைகளைத் திருப்தி செய்தற்பொருட்டு அரிசிமாவு உருண்டைகளை வீசி எறிந்து வழிபடுபடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிபீடம்

அப்பாச்சி மேட்டை அடுத்து வருவது சபரிபீடம். சபரியின் தவத்தால் புனிதம் பெற்ற இடம். சபரியின் மோட்சத்தால் பெருமையுற்ற இடம். ஐயப்பன்மார் பீடத்தை வலம் வருவர். தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றி வழிபடுவர். புராண இதிகாசக் கீற்றுகள் தரு ம் ஆன்மீக நெகிழ்வைத் தாவளங்களில் சுரங்கச் செய்யும் இனிமை இது.

## சரங்குத்தி ஆல்

சபரி பீடத்தை அடுத்து வருவது. எருமேலியில் பெற்று வந்த சரங்களைக் கன்னி ஐயப்பன்மார் இவ்விடத்தில் இட்டு விடுவர். இரண்டாம் மலைவருவோர் மரக்கத்தியை இடும் வழக்கமும் உண்டு. ஐயப்பன் படையினர் தம் ஆயுதங்களை விட்ட இடம் என்பர். இங்கும் சரண ஒலி மிகுதி. இங்கிருந்து அடைவது "பொன்னு பதினெட்டாம் படி".

# வழிபடு முறைகள் பத்து

இரைதேடலில் தொடங்கும் வாழ்க்கை இறைத் தேடலில் நிறைவு பெறுகின்றது. இறையினைத் தேடுதலில் வழிபாட்டுப் பாலம் முக்கியமானது. அ து ஓர் பல்வண்ணப் பார்வைக் குழல் *(Kaleidoscope)* எனலாம். சுழற்றச் சுழற்றச் சுந்தர வண்ணங்கள் ; சுழற்றச் சுழற்றச் சுந்தர ரூபங்கள் ! சந்நிதான நெய்யபிஷேகமும் அங்குண்டு. அப்பச்சிக் குழியில் மாவுருண்டை வீசலும் அங்குண்டு. சரணகோஷமும் அங்குண்டு. பொதுமைச் சடங்குகளும் அங்குண்டு. தனியயான விசேக்ஷங்களும் அங்குண்டு. மந்திரங்களால், பாடல்களால், பஜனைகளால் , விரத நெறிகளால், மஞ்சள், பொரி, மாவு, மிளகு போலும் சிறு சிறு பொருட்களால், அன்னதானம் அங்கப்பிரதட்சணம் போலும் அருஞ் செயல்களால் ஐயப்ப வழிபாட்டின் வகைமை அழகுகள் பெருகிப் பொலிகின்றன.

## தேங்காய்

சநாதன தர்த்தில் தேங்காய் உடைத்தல் ஓர் இனிய வழிபாட்டுச் சடங்கு. கதம்பையும் சிரட்டையும் நீங்கிய வேளையில் வெண்மையும், இனிமையும் வெளிப்படும் தேங்காயில் அருளாளர் பெற்ற ஆன்மீக உணர்வு தேங்காயை நிவேதனப் பொருளாக்கிற்று. கோயில் முன்பு சிதறு தேங்காய்களும் வழிபாடாயிற்று. தெய்வத்தின் முன்பு உடைத்துவைத்த தேங்காயும் நிவேதனமாயிற்று. ஐயப்ப வழிபாட்டில் கோடிக் கணக்கான தேங்காய்கள் உடைகின்றன. இருமுடிக்கட்டில் அபிஷேக நெய் சுமக்கும் பேறும் தேங்காய்க்கே அமைகின்றது. பதினெட்டாம் படிகளில் உடைக்கப்படும் பேற்றைத் தற்போது பக்க இடம் வாங்கிக் கொண்டது. மாளிகைப் புரத்தம்மன் கோயிலில் உடைக்காது தேங்காய் உருட்டுவது மற்றுமொரு விசேக்ஷ வழிபாடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடி

இருமுடிக்கட்டு என்னும் பள்ளிக்கட்டு ஐயப்பனுக்கே உரிய வழிபாடாகும். மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் போலும் சக்தி ஆலயங்களிலும், பிறமத வழிபாடுகளிலும் இவ்வழிபா டு தற்போது பரவி விட்டது. ஸ்ரீ ஐயப்ப வழிபாட்டில் இருமுடிக்கட்டே வழிபடுவதற்குரிய புனிதமுடையது. குருசாமியின் வழிகாட்டலில் மிகுந்த ஆசாரம் பேணுதற்குரிய தெய்வீகமுடையது.

## கற்பூரம்

கற்பூர வழிபாடும் பொதுமையானது. அது ஒளிதந்து எரிந்துருகி மறைவது ஓர் ஆன்மீகப் பாடம். 'தியாகம்' எனும் உபநிடதக் குரலின் குறியீடு அது. ஆனால் இக்கற்பூர வழிபாடு கற்பூர அழியாகப் பெருகிவ ளர்ந்து பெரும் ஆன்ம எழுச்சி த ருவது ஐயப்ப வழிபாட்டில் தான். 'கற்பூரதீபம் சு வாமிக்கே' – என்பது அனைவரும் அறிந்த கோஷம். ஐயப் பன் கற்பூர தீபப்பிரியன். விரதநாட்களும், யாத்திரை வழிகளும், சந்நிதான ஆழியும் – கற்பூர ஒளியில் இருவினை பொசுக்கும்! நெருப்பில் கரைந்து மறையும் கற்பூரம் போலவே, இறையருளில் கலந்து கரைந்திடும் ஆன்ம வேட்கையின் குறியீடே கற்பூர ஆழி. ச ந்நிதானம் செல்லும் வழியில் கற்பூரத்தை நெருப்பிலிட்டு விட்டுப் படியேறுவார்கள் பக்தர்கள்.

## அபிஷேகம்

அபிஷேகமும் ஒரு பொது வழிபாடுதான். ஆனால் 'நெய்யபிஷேகம்' என்பது ஐயப்பனோடு இரண்டற ஒன்றி நிற்பதற்குகந்த ஓர் உத்தம வழிபாடு. பழனி முருகனுக்குப் பஞ்சாமிர்த வழிபாடு போல், சபரிமலை ஐயனுக்கு நெய்யபிஷேகம் உகப்பானது. 'நெய்யபிஷேகப் பிரியனே 'சரணம் ஐயப்பா' என்பது பக்தர்களின் உகப்பான கோஷம். அபிஷேக நெய்யே பிரசாதமும் ஆகின்றது.

## பேட்டை துள்ளல்

எருமேலியில் நிகழ்வது. வண்ணங்களாலும், இலைத் தழைகளாலும் தம்மைப் புனைந்துகொண்டு, 'சாமி திந்தகத்தோம், ஐய்யப்ப திந்தகத்தோம்' என்று பாடி ஆடுவர்.

## கல்லிடுதல்

ஐயப்பன் மார் அழுதைநதியில் நீராடி ஒரு சிறு கல்லெடுத்து வருவர். அதனை அவர்கள் இடும் இடம் கல்லிடும் குன்று. வதையுண்ட மகிஷி உடல் அழுதா நதியோரம் விழுந்தது என்றும் அது வளர்ந்து சந்திரன் சூரியரை மறைத்திடுமென அஞ்சி தேவர்கள் அந்த உடல் மீது கல்லெறிந்து மூடி மறைத்தனர் என்றும் அந்நினைவின் நீட்சியே கல்லிடுதல் என்றும் கூறுவர். மகிஷியின் சாபம் நீங்கி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அசுரத் தன்மை அகலுதற்பொருட்டு ஐயப்பன் ஆணைவழி செய்யப் படும் சடங்கு என்ற கருத்தும் உண்டு.

## சரமிடுதல்

எருமேலியில் பெற்று வந்த சரங்களை விட்டுவிடும் சடங்கு நிகழும் இடம் சரங்குத்தி ஆல் வண்ணத்தாள் சுற்றி இறகு ஒட்டிய குச்சி சரங்கள் எனப்படும். கன்னி ஐயப்பன்மார் சரமிடுதலும், இரண்டாம் மலை வருவோர், மரக்கத்தி இடலும் மரபு. இது ஐயப்பனுக்கே உரிய வினோத வழிபாட்டுச் சடங்கு. இலட்சக் கணக்கில் கத்தப்பட்டிருக்கும் அந்த அம்புகளைக் கண்டு மஞ்சள் மாதா ஏமாற்றத் துடன் தன்னிடம் மீளும் விழாச் சடங்கும் உண்டு.

## வெடி வழிபாடு

ஐயப்பன் வழிபாட்டில் வெடியோசை வழிபாட்டுக்குச் சிறப்பிடம் உண்டு. நாகர்கோயில் – திருவனந்தபுரம் சாலையில் சாஸ்தா கோயிலொன்று பொது மக்கள் வழக்கில் 'வெடி வைச்சான் கோயில்' என்றே அழைக்கப்படுகின்றது. கானகச் சூழல் இவ்வழிபாட்டிற்குக் காரணமாக இருக்கலாம். சபரி மலையில் சரண கோசங்களோடு வெடியோசையும் மிகவே முழங்கும்.

## படி வழிபாடு

படிகளைத் தொட்டு வணங்கி பக்தர்கள் ஆலயம் நுழைவது பொது வழக்கம். "படியாய் கிடந்துன் பவளவாய் காண்பேனோ" எனப்பாடிய அருளாளரும் உண்டு. ஆனால், ஐயப்ப வழிபாட்டில் படிகள் தனிச்சிறப்புடையவை. "சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி" என்னும் போற்றுதற்குரியவே இருமுடியின்றி ஏறக் கூடாதவை. மிகுந்த பொருளும் நேரமும் செலவிட்டுச் செய்யும் படிபூசை பெரும் விஷேடம் உடையது.

## ஒளி வழிபாடு

சபரி யாத்திரையின் நிறைவு மகரஜோதி வழிபாடு. 'தமஸோ மா ஜ்ஜோதிர் கமய' எனும் ஞான பிராத்தனையின் உள்ளின்று ஒளிதரும் ஒளியின் அடையாளமே மகரஜோதி. மகர சங்கிரம நாளில் சபரி மலை சந்நிதானத்தில் சந்தியா காலத் தீபாராதனை நிகழும்போது பொன்னம்பல மேட்டில் சிறிது நேரமே தோன்றி மறையும் அற்புத ஒளியே மகர ஜோதி. தேவரும், முனிவரும் நடத்தும் தீபாராதனை என்னும் சிரத்தையோடு இலட்சக்கணக்கான பக்தர்கள் இவ்வொளியை வழிபடுவர். பரவ உணர்ச்சியின் சரண ஒலி முழங்கும் ஆன்மீகம் ஓர் அற்புத நேரத்தை சபரி மலை வழங்கும் மேன்மையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுதூறும் சரணகோடி ருசி பத்து

தமிழகம் உலகிற்கு அளித்த ஏழு பொக்கிசங்களில் ஒன்றாக பக்திப் பாடல்களைக் குறிப்பிடுவர். கமில் ஸ்வலபில் என்ற செக்கோஸ்லவேகியத் தமிழறிஞர் பக்திப் பாடல்கள் தந்த நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் கருத்திற் கொண்டு அவர் கூறினாலும் அனைத்துத் தமிழ் பக்திப் பாடல்களுக்கும் இது பொருந்தும். ஐயப்பன் பாடல்களோ ஒரு தனி நந்தவனம். எத்தனை நிறங்கள் எத்தனை ருசிகள், எத்தனை மணங்கள், எத்தனை வடிவுகள்.

## திருக்காட்சி வியப்பு

சுவாமி பொன் ஐயப்பா - சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே - சரணம் பொன் ஐயப்பா
அச்சன் கோயில் அரசனென்றும் ஆரியங்கா வீசனென்றும்
பக்தர் எல்லாம் அழைப்பதும் உம்மைத் தானோ?
வானோர்கள் புகழ்வதும் உம்மைத்தானோ?

(ஹரி - சுவாமி பொன்)

என்ற ஐயன் திருக்காட்சியில் பக்தி வியப்புக் கொள்கிறது ஒரு பாடல்.

## அகரவரிசை அழகு

ஓம் ஓம் ஐயப்பா - ஓங்குருநாத ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா - ஓங்குருநாத ஐயப்பா
அருணாதாரா ஐயப்பா - அம்பிகை பால ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா - ஆதிபாரபரா ஐயப்பா

- ஓம் ஓம் -

என்று வளர்வது அகரவரிசை அழகினை முயலும் சில பாடல்களில் ஒன்று.

## நாம ருசி

சரண கோசப் பிரியா - மணிகண்டா
சத்குரு நாதா - மணிகண்டா
சரணம் சரணம் - மணிகண்டா
சபரி கிரீசா - மணிகண்டா

என்று மணிகண்ட நாமத்தின் ருசியில் ஆழ்கின்ற ஒரு பாடலில் ஒரு பகுதி இது. இந்த ருசி உடைய பாடல்கள் பல.

## அங்கு இங்காதல்

வந்தாரய்யா - ஐயன் வந்தாரய்யா
தந்தாரய்யா - அருள் தந்தாரய்யா
என்று உற்காசகம் ஊற்றெடுத்து பொங்குகிறது ஒரு பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமூலை கணபதியும் அங்கே அங்கே
கருணையுடன் வந்தாரய்யா இங்கே இங்கே
மாளிகைபுரத்தம்மை அங்கே அங்கே
மனசுக்குள்ளே தெரியுதுபார் இங்கே இங்கே
திருப்படிகள் பதினெட்டும் அங்கே அங்கே
திரும்பிப்பார்த்தால் தெரியுதுபார் இங்கே இங்கே
கற்பூர ஆழியது அங்கே அங்கே
கண்ணுக்குள் தெரியுது பாரு இங்கே

பாடல் முழுவதும் அங்கும் இங்காகும் ஆனந்தத்தில் திளைக்கிறான் பக்தன்.

## அபிஷேகப் பிரியம்

சபரி மலையில் வண்ணச் சந்திரோதயம் – தர்ம
சாஸ்தாவின் சந்நிதியில் அபிஷேகம்
கோடிக்கண் தேடி வரும் ஐயப்பனை – நாமும்
கும்பிட்டுப் பாடுகிறோம் என்னப்பனை

என்று தொடங்கும் பாடல். அபிஷேகத்தில் மனம்நெகிழ்ந்து பரவசமாகிறது.

பாலென்று சொல்வது உடலாகும் – அதில்
தயிரென்று கண்டதெங்கள் மனமாகும்
வெண்ணெய் திரண்ட துன்றன் அருளாகும் – இந்த
நெய் அபிஷேகம் எங்கள் அன்பாகும்.

என்று அகங்குழைகின்றது ஒரு பாடல். தொடர்ந்து பன்னீர் அபிஷேகத்திற்கும், பஞ்சாமிர்த அபிஷேகத்திலும் மனம் மகிழ்கின்றது.

உள்ளத்தின் வெண்மைதனைக் கையிலெடுத்து – அதில்
உன் பெயரைக் குழைத்து நெற்றியில் இட்டு
உருகும் விபூதியினால் அபிஷேகம் – ஹரி
ஓம் என்று சந்தனத்தில் அபிஷேகம்

என்று விபூதி, சந்தன அபிஷேகங்களையும் விளக்குகின்றது.

## அரகரோகரா

அரகரோகரா என்னும் கோசம் முருகனுக்குரிய கோசம். அதுவே, ஐயப்பனுக்கும் உரிமையாகின்றது.

அரகரோகரா – சுவாமி அரகரோகரா
அரிகரன் மைந்தனுக்கு அரகரோகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தொடங்கி.

அச்சன்கோயில் அரசனுக்கு அரகரோகரா
அச்சுதன் புதல்வனுக்கு அரகரோகரா
ஆரியங்காவையனுக்கு அரகரோகரா
ஆனந்த தேவனுக்கு அரகரோகரா.....

என்று நீள்கிறது பாடல்.

## வரவேற்கும் பாடல்

ஐயப்பனை 'வா' என்று அழைக்கும் பாடல்கள் பல.

மணிகண்டனே மணிகண்டனே வா வா
நாங்கள்
மகரஜோதி கண்டிடவே வா வா

என்று தொடங்குகிறது ஒரு பாடல் அச்சங்கோயில், ஆரியங் காவு, குளத்துப் புழை, பம்பை நதி, சபரி மலை – என்று ஒவ்வொரு இடத்தோடும் இணைந்து அழைத்து இறுதியில்,

காந்தமலை ஜோதியே நீ வா வா
கண் கண்ட ஜோதியே நீ வா வா என்று பாடுகின்றது.

## யார் கொலோ சதுரர்?

முத்திரைத் தேங்காய் – உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா
பொற்பத மலர்கள் எமக்கப்பா
நெய்யபிஷேகம் உனக்கப்பா – உன்
திவ்யா தரிசனம் எமக்கப்பா என்னும் கொடுக்கல் – வாங்கல் பாடலும் உண்டு. 'தந்ததுஉன்றனை கொண்டது என்றனை யார் கொலோ சதுரர்' எனும் மணிவாசக நயம் இதிலும் உண்டு.

## அனுபவப் புத்தாக்கம்

இருமுடி தாங்கி ஒருமனதாகி குருவெனவே வந்தோம்
இருவினை தீர்க்கும் – யமனையும் வெல்லும்
திருவடி காண வந்தோம்

என்று தொடக்கத்திலேயே உச்ச ஸ்தாயியில் கணிரென்ற குரலில் ஒலித்துப் பிரபலமான பாடல் எல்லாருக்கும் இனிமை தரும் பாடல். சபரிமலைப் பயணத்தையே அது அழகாகக் கண்முன் கொணர்வது. கார்த்திகை மாதம் விரதமிருப்பதலிருந்தே தொடங்கி அப்பாடல் ஒவ்வொன்றாக விவரித்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும்.

அழுதை ஏற்றும் ஏறும்போது
அரிஹரன் மகனைத் துதித்துச் செல்வார்
வழிகாட்டிடவே வந்திடுவார் – ஐயன்
வன்புலி ஏறி வந்திடுவார்
– என்றும்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணைவருவார்
கரிமலை இறக்கம் வந்தவுடனே
பெரு நதி பம்பை கண்டிடுவார்

–என்றும் பாடல் ஒலிக்க ஒலிக்க சபரிமலைப் பாதை மனக் கண்ணில் விரியும். அனுபவம் புத்தாக்கம் பெறும்.

## வீசும் வாசங்கள்

உயிரின் மீதேறிப் பிறப்பிற்குக் காரணமாகும். 'வாசனை'களை அறுக்கும் வாசம் கொண்ட திருத்தலம் ஐயனின் சபரிமலை. அங்கு வீசும் வாசங்களை நாவாரப் புகழ்கிறது ஒரு பாடல்.

'கற்பூர வாசமது எங்கே மணக்குது?
காந்தமலை வாசன் அவன் மேலே மணக்குது!
சந்தன வாசமது அவன் மேலே மணக்குது!
சபரிகிரி ஈசனவன் மேலே மணக்குது!
குங்குமப்பூ ஜவ்வாது எங்கே மணக்குது!
குளத்துப்புழை பாலகனின் மேலே மணக்குது!
விபூதியும் பன்னீரும் எங்கே மணக்குது?
வீரமணி கண்ட சுவாமி மேலே மணக்குது !

## ஆலயங்கள் பத்து

ஆன்மா லயப்பதற்குரிய இடம் ஆலயம் என்று விளக்குவர். கோயில் என்பது தலைவன் உறையும் இடமெனப் பொருள்படும். நாமரூபமற்ற ஆதார சக்தி பக்தியின் குளிர்ச்சியில் அர்ச்சாவதாரமாகிறது. இதனை நீராவி குளிர்ந்து நீராகி பின் பனிக்கட்டியும் ஆவதுபோல் என விளக்குவர் ஆன்மீகர். அந்த அச்சா அவதாரம் பக்தனுக்கு பிரார்த்தனை வழி அருள் வழங்கும் இடமே ஆலயம் அல்லது கோயில். ஆலயங்களின் அழகில் திளைத்து ஆன்ம இலாபம் பெறும் வாய்ப்பு சபரி யாத்திரையில் நன்றாகவே அமைகிறது.

## சபரிமலை சந்நிதானம்

இதுவே இரு சுமக்கும் ஐயப்ப பக்தர்களின் இலக்கு. வேட்டுவ குல பக்தை சபரியின் தவபூமியது. பந்தள அரசன் வேண்டியபடி அம்பு எய்து ஆலயத் தலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தான் ஐயன். அரசன் ஆலயம் எழுப்பினான். பரசுராமரை பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம். பதினெட்டுப் படிகளும் இருமுடிக் கட்டும் நெய் அபிஷேகமும் மகர விளக்கும் கோடான கோடி பக்தர்களின் விரதயாத்திரையும், சரண ஒலியும் - ஆன்ம உலக அதிசயங்களில் ஒன்று. இச்சந்நிதானம் கருதி வருவோருக்கு வரும் வழிகளில் பல ஆலய தரிசனங்கள், மீண்டு செல்கையிலும் மனம் விரும்பும் ஆலயங்கள்.

## குளத்துப்புழை

பால சாஸ்தாவின் அருட்தலம். அவன் குளத்துப்புழைப் பாலகன். குழந்தை வடிவில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் கொட்டாரக்கரை அரசனால் நதிக்கரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஐதீகம். உடைந்த சிலா ரூபத்தின் ஏழுதுண்டுகளாலான பீடம் வழிபடப்படுகிறது என்பர். இங்கு ஆற்று மீன்களுக்குப் பொரியிடல் விசேஷம். சர்ப்பக்காவில் பாலபிஷேக, சித்திரைப் புத்தாண்டில் கனி காணும் நிகழ்ச்சி சிறப்பு மிக்கது. குழந்தைகளுக்குக் கல்வியும் ஞானமும் அருளும் தெய்வம்.

## அச்சங்கோவில்

அச்சங்கோவிலில் அருள்பாலிப்பவர் ராஜசாஸ்தா. இமயத்துக் கல்லால் செதுக்கிய விக்கிரகம் என்பர். பரசுராமப் பிரதிஷ்டை அப்படியே இருப்பது இங்கு மட்டுமே என்பர். சாஸ்தாவின் வலக்கையில் வழிந்திடும் சந்தனமும் தீர்த்தமும் பாம்பின் நஞ்சினை முறிக்கும் அருமருந்தாகப் போற்றப்படுகிறது. சுவாமி எதிரில் கருப்பசாமி (மந்திரி) பிரதிஷ்டை. சிவனும் பிற பரிவாரத் தெய்வங்களும் உண்டு. திருவிழாவில் தேரோட்டம், கருப்பன் வேட்டை, புஷ்பாஞ்சலி விஷேசம்.

## ஆரியங்காவு

ஆரியங்காவில் மத்கஜவாகன ரூபனா ஐயன் அருள்பாலிக்கிறார். பூர்ணா-புஷ்பகலா சமேதர். இடக்கால் மடித்து வலக்கால் தொங்கவிட்டு யானை மீது எழுந்தருளிய திருக்கோலம் மண்டல பூசையின் போது பெருங்கூட்டம் திகழும். ஐயப்பனின் வலப்புறம் சிவன் சந்நிதியும், இடப்புறம் தேவி சந்நிதியும் உள்ளன. நாலம்பலத்தின் உள்ளே மலையாள ஆசாரமும் திருவிழாக் காலத்தில் தமிழ் ஆசாரமும் பேணப்படுகிறது. மார்கழி உற்சவம் 11 நாட்கள். திருக்கல்யாணமும் மறுநாள் காலை நிகழும். இளநீர் அபிஷேகமும் விஷேசம். கார்த்திகை கடைசி நாளில் திருவாபரணம் அணிதல் விஷேசம்.

## பந்தளம்

ஐயப்பன் வளர்ந்த இடம், கோயில் அரண்மனைப் பூஜா மண்டபமாகவே காணப்படும். தேவாரபுரை என்பர். திருவுருவத்திற்கான கூடம் ஆலய மரத்தடியில் உள்ளது. ஆலயத்தில் சாளக்கிராம வழிபாடு உள்ளது. வெள்ளி அங்கி உண்டு. வில்லும் அம்பும் ஏந்திய தோற்றம் தென்மேற்கு மூலையில் தலப்பாற மலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கொண்டுவந்த கல்லும், அதைச் சுற்றிச் சாலக் கிராமங்களும் உள்ளன. அச்சங்கோயில் ஆறு அருகில் ஓடுகிறது. ஆற்றின் மறு கரையிலுள்ள நீர் நிலையில் ஐயப்பன் குளித்ததாக மேன்மை போற்றுவர்.

## காந்தமலை

"காந்த மலை ஜோதியே சரணம் ஐயப்பா" என்பது சரணம் விழி பம்பை ஆற்றின் கரையிலிருந்து பத்துக்கல் தொலைவில் உள்ள நீலி மலை உச்சியில் தேவரும் முனிவரும் தம்மாற்றலால் சுவர்ணாலயம் நிறுவினர். அங்கு ஐயப்பனை அழைத்துச் சென்று நவரத்தின சிம்மாசனத்தில் அமர்த்தி வழிபட்டனர். அது இன்று பொன்னம்பல மேடு எனப்படுகிறது. சிதம்பரம் சிவனுக்கும், பொன்னம்பலம் காந்தமலை மகனுக்கும் பொன்னம்பலமேடு மகரஜோதி தெரியும் இடம்.

## எரிமேலி

எரிமேலியில் தரிசிக்கும் இடங்கள் மூன்று. 1. கொச்சம்பலம் என்னும் சிறி கோயில். 2. வலியம்பலம் என்னும் பெரிய கோயில். 3. வாவர் மசூதி.

## காளகட்டி

இங்கு அழகிய சிவாலயம் உள்ளது. ஐயப்பமன்மார் தேங்காய் அமைந்த ஆலயம். கரிமலை கடினமலை. மஞ்சள் பொடி தூவியும், கற்பூரம் ஏற்றியும் வழிபடுவர். வனதுர்கைக்கும், கொச்சு கடுத்தைக்கும் இங்கு கோயில்கள் உள்ளன.

## பம்பை கணபதி கோயில்

பம்பை நதிக்கரையிலிருந்து சபரிமலை நோக்கித் தொடங்கும் யாத்திரையின் ஆரம்பம் பம்பைக் க ண பதி கோயில். தம் பயணம் இடையூறின்றி அமைய இங்கு வழிபாடு செய்வர். கற்பூரம் ஏற்றியும், தேங்காய் உடைத்தும், படி தொட்டும் வணங்கியும் வழிபடுவர். இங்கு ஸ்ரீ ராமன், ஹனுமான், நாகராஜா, பார்வதி தேவி ஆகிய சந்நிதிகளும் உள.

## மந்திரமொழி பத்து

மந்திரம் என்பது காக்கும் தன்மையது. "நிறைமொழி, மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப" என்பது தொல்காப்பியம். முறையாகக் குருவழிப் பெறும் உபா சனா மந்திரங்கள் ஆற்றல் மிக்கவை. பக்தியுடன் ஓதுபவை பிரார்த்தனை நலம் தருபவை. சித்த சுத்திக்கு உ தவுபவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீசாஸ்தா காயத்ரி

ஸ்ரீ பூ தநாதாய வித்மஹே
பவுபுத்ராய தீமஹி
தந்தோ சாஸ்தா; ப்ரச்சோதயாத்

## சபரிமலை மூல மந்திரம்

ஓம் க்ரும் நம: பராய
கோப்த்ரே நம:

## த்யான சுலோகம்

ஆச் யாம கோமல விசாலத நும் விசித்ர
வாஸே வாஸத மருணோத் பல தாமஹஸ்தம்
உத்துங்க ரத்ன மகுடம் குடிலாக்ர கேசம்
சாஸ்தாரம் இஷ்ட வரதம் சரணம் பிரபத்யே.

## த்யான சுலோகம்

தேஜோ மண்டல மத்யகம் த்ரிநயனம் திவ்யாம்பராலங்க்ருதம்
தேவம் புஷ்ப சரேக்ஷு கார்முக வனம் மாணிக்ய பாத்ராபயம்
பிப்ராணம் கர பங்கஜை: மத கஜ ஸ்கந்தாதிரூடம் விபும்
தாஸ்தாரம் சரமம் நமாமிஸததம் த்ரைலோக்ய ஸம்மோஹனம்.

## ஸ்தோத்திரம்

சபரிகிரி நிவாஸ சர்வலோகைக பூஜ்ய:
நதஜன ஸூகாகாரீ நம்ர ஹ்ருத்தாப ஹாரீ
த்ரிசத திதிஜ ஸேவ்ய: ஸ்வர்கமோக்ஷ ப்ரதாதா
ஹரிஹர ஸூத தேவ: ஸந்தகம் சம் தநோது

## ஸ்தோத்திரம்

ஜகத் ப்திஷ்டா ஹேதுர் யா: தர்ம: ச்ருத்யந்த கீர்த்திக:
தஸ் யாபி சாஸ்தா யோ தேவ: தம் ஸதா ஸமு பாச்ரயே

## மாலையிடும் போது சொல்லும் மந்திரம்

ஞானமுத்ராம் சாஸ்த்ருமுத்ராம் குருமுத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்தமுத்ராம் ருத்ரமுத்ராம் நமாம்யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமுத்ராம் ஸத்யமுத்ராம் வ்ரதமுத்ராம் நமாம்யஹம்
சபர் யாச்ரம ஸத்யேனமுத்ராம் பாது ஸதாபிமே
குருதக்ஷிண்யா பூர்வம், தஸ் யாநுகர்ரஹகாரிணினே
சரணாகத முத்ராக்யம் த்வந்முத்ராம் தாரா யாம்யஹம்
சின்முத்ராம் கேசரிமுத்ராம் பத்ரமுத்ராம் நமாம்யஹம்
ஸபர்யாசல முத்ராயை, நமஸ்துப்யம் நமோ நம.

## மாலை கழற்றும்போது சொல்லும் மந்திரம்

அபூர்வமசலா ரோஹ திவ்ய தர்சன காரண
ஸாஸ்த்று முத்ராத் மஹாதேவ தேஹிமே
வர்த மோசனம்
ஸ்ரீபூதநாத பஞ்சரத்னம்
லோகவீரம் மஹா பூஜ்யம் சர்வரக்ஷ ாகரம்விபும்
பார்வதி ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
விப்ர பூஜ்யம் விச்ச வந்த்யம் விஷ்ணு சம்போ.
பிரியம் ஸூதம்
க்ஷிப்ரப்ரஸாத நிரதம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
மத்த மாதங்க கமனம் காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம் தேவம் சொஸ்தாரம் ப்ரணமாம் யஹம்
பக்த ரக்ஷா கரம் தேவம் ஆச்ரிதாரிவிநாசனம்
பக்த பீஷ்ட ப்ரதாதாரம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்
பாண்டயேச திலகம் கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராணபரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்
பஞ்ச ரத்தாக்ய மேதத்யோ நித்யம் சுத்த: படேன் நர:
தஸ்யப்ரஸன் னோ பகவான் சாஸ்தா வஸதி மானஸே.

## ஹரிவ ராஸனம்

சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா

ஹரிவ ராஸனம் ஸ்வாமி விஸ்வமோஹனம்
ஹரிததீஸ்வரா ஸ்வாமி ராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

சரணகீர்த்தனம் ஸ்வாமி சக்தமானசம்
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருணபாஸுரம் ஸ்வாமி பூத்நாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ப்ரணயஸத்யகா ஸ்வாமி ப்ராணநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரண தகல்பம் ஸ்வாமி ஸூந்தரானனம்
ப்ரணவமந்திரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

துரகவாஹனம் ஸ்வாமி ஸூந்தரானனம்
வரகதாயுதம் ஸ்வாமி வேதவர்ணிதம்
குருக்குபாகரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிணயணம்பிரபும் ஸ்வாமி திவ்யதேனகம்
த்ரித பூஜிதம் ஸ்வாமி சிந்தி தப்பிரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

பவபயாவஹம் ஸ்வாமி பாபுகாவுகம்
புவன மோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்
தவள வாரணம் ஸ்வாமி திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

களமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்
களப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்
களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ச்ரிதஜனப்பிரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
சுருதி விபூசணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்
சுருதி மனோகரம் ஸ்வாமி கீதவாசகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

## தரிசனம் பத்து

தரிசனம், புண்ணியம், தரிசன மையத்தைப் பற்றிச் சுழல்வது தான் பக்தி. தரிசனத்துக்காக ஏங்கும் பக்தி ஆழம் பெறும். தரிசனத்தை விதவிதமாய்ப் பருகும் பக்தி பரவசம் பெறும். தரிசனத்தை மனத்தகத்தே விதவிதமாய் அசைபோடும் பக்தி செழுமை பெறும். ஐயன் கோயிலின் அன்றாட தரிசனங்களிலும் விதம் விதமான சவுந்தர்யங்கள் விசேஷ தரிசனங்களிலும் விதவிதமான குதூகலங்கள். பக்தியின் வளமையே தரிசன கோலங்களில் பெறும் அனுபவங்கள் தான்.

## அன்றாட பூஜைகளில் இனிய தரிசனம்

எல்லா மலையாள மாதங்களில் முதல் ஐந்து நாட்களிலும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் கோயிலில் பக்தர்கள் தரிசனத்துக்காக மாத நடைத்திறப்பு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட பூஜையில் மூன்று முக்கியமானவை. 1. உஷ பூஜை என்னும் காலை நேர பூஜை. 2. உச்சிபூஜை என்னும் நண்பகல் பூஜை 3. அத்தாழ பூஜை என்னும் இரவு பூஜை நிர்மாலய தரிசனம், அபிஷேக தரிசனம் , தீபாராதனை என்பவை அன்றாட பூஜையில் இனியதரிசனங்கள் ஆகும்.

## மண்டல மகோத்ஸவத்தில் இனிய தரிசனங்கள்

கார்த்திக மண்டல அஸ்தம என்றும் ஸ்ரீ ஐயப்பன் சந்நிதானத்தில் பத்து நாள் உற்சவம் தொடங்கும். தினமும் பகல் உற்சவ பலியும், உற்சவ பலி தரிசனமும் உண்டு. இரவு ஸ்ரீ ஐயப்பன் யானை மீது அமர்ந்து உலாவர ஸ்ரீ பூத பலி நிகழும். பள்ளி வேட்டையன்று ஐயன் இரவு 11 மணிக்கு சரங்குத்தி சென்று வரும் தரிசனம் சிறப்பானது. அன்று ஹரிவராஸனம் பாடி நடையடைதல் இல்லை. சோபன அறையில் தான் சயனம். மறுநாள் ஆராட்டு

## ஆராட்டு

சபரி மலை விழா ஆராட்டுடன் நிறைவு பெறும். நெற்றிப்பட்டம் அணிந்த யானை ஊர்வலம் கம்பீரமானது. காண இனியது. பம்பைக் கோயிலின் முன்பு பெரும் வரவேற்பு நிகழும். நில விளக்கும் நிறை நெல்லும் மங்கலம் பெருக்கும். தலைமை அச்சகர் ஐயப்பனை ஏந்திய வண்ணம் நீரில் மும்முறை மூழ்கி எழுவார். அப்புனித நீரில் பக்தர்கள் நீராடி புத்துணர்ச்சி பெறுவர். ஆராட்டு முடிந்து ஊர் வலம் ஆலயம் திரும்பும்.

## மண்டல பூஜை

சபரி மலை விரத விழா மண்டல பூஜை. கார்த்திகை முதல் நாள் தொடங்கி 48 நாட்கள் இவ்விழா அமையும். முதல் நாள் தீபம் ஏற்றி 48 நாட்கள் முடிந்து மண்டல பூஜை நிறைவுற்ற பின்னரே தீபத்திற்கு விடை கொடுப்பர். பெருந்திர ளாக விரதம் மேற்கொண்ட பக்தர்கள் சன்னிதானத்திற்கு வந்து தரிசனம் பெறும் நாட்கள் இவை. எல்லா பூஜைகளின் தரிசனங்களிலும் இவ்விரத பக்தர்கள் நெகிழ்ந்து நின்றாலும் உச்சிக்கால தரிசனமே இவர்களுக்கு மிகவும் உவப்பானது.

## திருவாபரண தரிசனம்

மகர சங்கிரம தினத்தன்று, சந்தியா நேரத்தில் நிகழ்த்தப்பெறும் தீபாரத னைக்கு மட்டுமே இத்திருவாபரணங்கள் சாத்தப்படும். இந் நகைகள் பந்தளத் திலிருந்து கொண்டு வரப்படும். திருவாபரணப் பெட்டியை சரங்குத்தி ஆலிலிருந்து பதினெட்டாம்படி வரை கண்டு தொழ காத்திருக்கும்பக்தர் வெள்ளம் கண்கொள்ளாக் காட்சியாகும். சரண கோஷம் முழங்க வாத்திய இசை ஒலிக்க கருடன் வானில் பறக்க பெட்டியைச் சுமந்து வருவோர் துள்ளித் துள்ளி ஆடி வந்துவேகமாக பதினெட்டாம் படியிலேறி விரைய ஐயப்பன்மார் பெட்டியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலொற்றிட துடிக்க – பக்தி உணர்வு பொங்கி ததும்பி பூரணமாய் அகம் நிரம்பும். இவ்வணிகள் சாத்திய திருக்கோலம் ஓர் உன்னத தரிசனமாகும்.

## மகரஜோதி

மகரஜோதி தரிசனம் மற்றுமொரு சிரமம், மகரசங்கிராந்தி என்னும் தைமாத முதல் நாளில் இந்த ஜோதி தரிசனம் நிகழும் பொன்னம்பல மேட்டில் சிறிது நேரம் தோன்றி மறையும். இது இலட்சோபலட்சம் பக்தர்களின் கண்ணுக்கும், சிந்தைக்கும் பெருவிருந்து, மனம் நெகிழ்ந்த சரண ஒலிமலை எங்கும் ஒலிக்கும்.

## சித்திரை விஷூ தரிசனம்

மலையாள நாட்டில் சித்திரை விஷூ ஆண்டுப் பிறப்பாகும். அதனைக் கனிகாணும் விழாவாக நாடே மகிழ்ந்து கொண்டாடும். அன்று காலையில் கனிகளும், மலர்களும், மங்கலப் பொருட்களும் கண்விழித்தவுடன் முதலில் காணுமாறு கொண்டாடுவர். கொன்றை மலரும் கை நீட்டமும் முக்கியம். இந்நாள் சபரிமலையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படும். முன்னிரவில் பிம்ப சுத்தி முடிந்ததும் சுவாமியின் முன் கனிகளும், வெள்ளிப்பாத்திரம் நிறைய நாணயங்களும் வைத்து அலங்கரித்து நடை அடைப்பர். அதிகாலையில் நடை திறந்து, விளக்கேற்றி மங்கலமாக விஷூக்கனி காண்பர். பக்தர்கள் தரிசனத்தின் போது கைநீட்டம் பெறுவர். கைநீட்டல் பெற்ற நாணயங்கள் பக்தர்களால் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாக்கப்படும். அது அந்த ஆண்டின் செல்வ வளம் பெருக்கும் நல்லடையாளமாகப் பேணப்படும்.

## பிரதிஷ்டை தினம்

வைகாசி மாதம் அஸ்த நட்சத்திரத்தில் சபரிமலை பிரதிஷ்டை நிகழ்ந்ததாக ஐதீகம். ஒரு நாள் மட்டும் நடை திறந்து தரிசனம் கிட்டும். ஐயப்பன் வரலாற்றுப் புனிதத்தில் ஆழ்ந்துணரவல்லார்க்கு இந்நாள் பக்தி நெகிழ்வூட்டும் ஒரு முக்கிய தினம்.

## திருவோண விழா

கேரளத்தின் தேசிய விழா திருவோண விழா. ஆவணி மாதத்தில் ஐந்து நாட்கள் நடைதிறந்து தரிசனம் பெறுவர். திருவோண விருந்து விமரிசையாக அமையும்.

## அபிஷேகத் சிறப்பு

தரிசனம் ஐயப்பன் 'அபிஷேகப் பிரியன்' சுவாமிக்கு பிரியமானவையே பகதர்களுக்கு பிரியமானது. பக்தர்களுக்குப் பிரியமானதே சுவாமிக்கும் பிரியமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது. பகலில் அஸ்த அபிஷேகம், சந்தன அபிஷேகம், கலச அபிஷேகம், நெய் அபிஷேகம் எனப் பல அபிஷேகங்கள் தரிசனமாகும். இரவில் புஷ்பாபிஷேகம் நிகழும். அனைத்திலும் மகோன்னத தரிசனமாக திகழ்வது நெய் அபிஷேகம்.

## பல்சுவை பத்து

அள்ள அள்ளக் குறையாத அழகிய விஷயங்கள். பல ஸ்ரீ ஐயப்ப மண்டத்தில் உள்ளன. அறிய வேண்டியவை: அருந்த வேண்டியவை. ஆழந்து சிந்திக்க வேண்டியவை. நினைந்து நெகிழவேண்டியவை: புரிந்துகொண்டு புனமுறுவல் காட்டவேண்டியவை: அனுபவித்து ஆழ வேண்டியவை. என அவை ஆனந்தம். அந்த அற்புதச் சுரங்கத்திலிருந்து சுவைக்கச் சில.

### ஆச்சர்ய சாஸ்தா

ஸ்ரீ சாஸ்தா கோயில் ஒன்றில் தர்மசாஸ்தா மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சர்யம் கொண்ட தோற்றத்தில் ஒரு சிலை இருந்தது. அரசன் நரசிம்ம பூபாலன் ஸ்ரீ அப்பைய தீட்சிதருடன் அங்கு சென்றான். இதற்குரிய சரியான காரணம் கற்பித்துக் கவி பாடினால் திருவுருவும் மூக்கிலிருந்து விரலை எடுத்துவிடும் என்பது ஐதீகம் என்றனர் அங்கிருந்தோர். தீட்சிதர் வாக்கில் ஓர் சுவையான கவி பிறந்தது.

அம்பேதி கௌரீ மஹாமாஹ் வயாமி
பத்ந்ய: பிதுர் மாதர ஏவஸர்வா:
கதன்னு லக்ஷ்மி மிதி சிந்தயத்ததம்
சாஸ்தரா மீடே ஸகலார்த்த ஸித்யை

இச்சுவைமிக கவி கேட்ட ஐயன் கை விரல் மூக்கினின்று நீங்கியது. திருவுருவம் இயல்பாயிற்று.

கவிபொருள் சாஸ்தாவே சொல்வதாக உளது: "சிவபிரான் தந்தை: ஆகவே கௌரியை அம்மா என்று அழைப்பேன். விஷ்ணு மோகினியாய் இருந்தபோது நாம் சிவனுக்குப் பிறந்தோம். ஆகவே விஷ்ணுவை அம்மா என்றழைத்தால் தவறில்லை. ஆனால் மகா லெக்ஷ்மி என் அம்மாவான விஷ்ணுவுக்கு மனைவி. தந்தைக்கு மனைவி என்பது சரி. ஆனால் அம்மாவுக்கு மனைவி என்பது அதிசய உறவு முறையாயிற்றே!" - இவ்வரலாறு தீட்சிதேந்திர விஜயம் என்னும் நூலில் உள்ளது என்பர்.

### கொடிமரக் குதிரை

பெருங்கோயில்களில் கொடி மரம் உண்டு. விழாக்களின் போது அதில் கொடியேற்றுவர். சபரிமலைக் கோயிலில் அமைந்த கொடி மரத்தின் உச்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குதிரை உள்ளது. அக்குதிரை ஐயப்பனை நோக்கிய வண்ணம் உள்ளது.

## வளர்பதிவுகள்

'ஏகம்ஸத்; விப்ரா பஹூதா வதந்தி' ஒரே பரம்பொருளை ஞானிகள் பலவாகக் காண்கின்றார்கள் என்று சொல்லி பரம் பொருளைப் பல திருவுருங்களில் வழிபடுவதை வேதமாதா அனுமதிக்கின்றாள். அவ்வாறு வழிபடும் திருவுருவை யும் அன்புமிகுதியாலும் தேவை கருதியும் பக்தன் பலகோலங்களில் அருந்தி ஆன்மருசி பெறுகிறான். ஸ்ரீஐயப்பனைக் குளத்துப்புழையில் பாலனாகவும், அச்சன் கோயிலில் அரசனாகவும், ஆரியங்காவில் கிரஹஸ்தானாகவும், சபரிமலையில் தவ சீலனாகவும், காந்த மலையில் ஜோதி சொரூபனாகவும் பக்தர்கள் தரிசனம் செய்கின்றார்கள்.

## வாள் விஷயம்

அச்சன்கோயிலில் அரசனாக வீற்றிருக்கும் ஐயப்பனுக்குத் தங்கவாள் ஒன்று உண்டு. அது காந்த மலையில் கொடுக்கப்பட்டது என்பது ஐதீகம். எருமேலியில் மகிஷியை வதம்செய்ய ஐயன் பயன்படுத்திய வாள் ஒரு வயோதிக மாதிடம் கொடுக்கப்பட்டுத் தலைமுறை தலைமுறையாக இன்றும் பேணப்பட்டு வருகிறது.

## தமிழகத்திலும்

தமிழகத்தில் சாஸ்தா வழிபாடு தொன்மையானது. ஐயனார் கோயில்கள் அனைத்துமே சாஸ்தா வழிபாடு நிகழும் இடங்களே. குடும்பத்துக் கோயில்களா கப் பலகோயில்கள் குளக்கரைகளில் பேணப்படுகின்றன. பங்குனி உத்தர விஷேமாகக் கொண்டாடப்படுகிறது. மலையாள நாட்டு ஐயப்ப வழிபாட்டின் உத் வேகத்தால் தமிழகத்தில் எழுந்த ஐயப்பன் கோயில்களும் பல. சென்னை, திருச்சி, நாகர்கோயில் முதலிய இடங்களிலுள்ள ஆலயங்கள் குறிப்பிடத்தக்கன.

## கருடன் பறப்பு

புனிதமான நேரங்களிலும், யக்ஞங்கள் நிகழ்த்தும் வேளைகளிலும் கருடன் வானில் வட்டமிடுதலைப் பக்தர்கள் தெய்வீக நிகழ்ச்சியின் சகுனமாகப் போற்று வர். பேட்டை துள்ளலின் முன்பும், திருவாபரணப் பெட்டி வரும் வேளைகளிலும் ஐயப்பன் மார்க்குக் கருட தரிசனம் கிடைக்கிறது.

## தேரோட்டம்

கேரளத்தில் திருவிழாக் காலங்களில் ஆலயங்களில் தேரோட்டம் நிகழும் கோயில்கள் இரண்டு. ஒன்று அச்சன்கோயில். மற்றொன்று கல்பாத்தி கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருநாட்டுப் பெருமை

சபரிமலையில் மகர சங்கராந்தி தினத்தன்று ஐயப்பன் சந்நிதியில், பந்தளத்துத் திரு ஆபரணங்கள் அணிந்த இனிய தரிசனம் பக்தர்களுக்குக் கிட்டும் பெரு நாடு சாஸ்தாவுக்கும் அத்திருவாபரணங்கள் ஆண்டில் ஒருநாள் அணிவிக்கப்படுகின்றன. சபரிமலை தரிசனம் காண இயலாத பெண்கள் இங்கு இத்தரிசனம் பெற்று மகிழ்வர்.

## பெயர்ச் சுவை

ஐயப்பன், ஹரிஹரசுதன் போலும் பெயர்கள் ஆன்ம தத்துவங்கள் ஊற்றப்பெற்ற நெய்த் தேங்காய்கள், காளகட்டி, சரங்குத்தி முதலியவை ஆன்ம ருசி கலந்த காரணப் பெயர்கள், சபரிமலை வட்டத்தில், ஐயப்ப மண்டலத்தில் எழுந்துள்ள பெயர்கள் அனைத்துமே ஆராய்தல் சுவை தருவன. சில சிறு புன் முறுவலும் தரும்

ஒரு பாறையின் பெயர் - இஞ்சிப் பாறை
ஒரு பாலத்தின் பெயர் - சுக்குப் பாலம்

## சபரி

பக்தி மண்டலத்தில் சபரியின் பெயர் சாசுவதமானது. அவள் வேட்டுவப் பெண். விலங்கினக் கொலை கண்டு வருந்தி வீட்டினின்று வெளியேறிவள். மதங்கர் ஆச்சிரமத்தில் மறைந்து மறைந்து வாழ்ந்தாள். பின்பு முனிவர்க்கு ஆசிரமப் பணிகள் செய்து அங்கு வாழிடம் பெற்றாள். முனிவர் மதங்கர் அவளுக்கு இராம தரிசனம் கிடைக்கும் என்றார். காத்திருந்த சபரி இராம தரிசனம் பெற்றாள். ருசி பார்த்துத் தேர்ந்தெடுத்த இலந்தைக் கனிகள் கொடுத்து இராமன் அருள் பெற்றாள். அவள் நினைவினை உணர்த்துமிடம் சபரிமலை; இத்தகைய சபரிமலையைத் தன் அருட்சரப்புக்கு ஆலயமாகத் தேர்ந்து கொண்டான் ஐயப்பன்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

## மணிகண்டனின் அற்புதம்

இன்னொரு கோணத்திலும் ஐயப்பன் கதை கூறப்படுகின்றது. அதில் மாமூன்று அகத்தியரும் இடம்பெறுகிறார். அகத்தியர் சம்பந்தப்படாத ஆன்மீக வரலாறுகளே இல்லை எனலாம். அந்த வகையில் இதையும் நாம் அறிந்து கொள்வது நல்லது.

பம்பையாற்றங்கரைக் காட்டிலே அவதரித்த பந்தள நாட்டு அரசனின் அரண் மனையிலே எழுந்தருளிய மணிகண்டனின் அருமை, பெருமைகளை அங்கிருந்தவர்கள் பெரிதும் புகழ்ந்து பேசியதோடு அரசனுக்கு நீண்ட காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையில்லாத குறையை நீக்க இப்படியும் ஒரு தெய்வத் திருமகன் கிடைத்த அதிசயத்தை கருதியும் அவர்கள் வியர்ந்தனர். மணிகண்டன் காப்புப் பருவம், செங்கீரர் பருவம், தலாப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம் போன்ற பிள்ளைப் பருவ விளையாட்டுக்களையெல்லாம் செய்துகொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாய் வளர்ந்து வந்தான். அந்தத் தெய்வத் திருக் குழந்தைக்கு அழகுத் திருக்குமாரனுக்கு விதவிதமான அலங்காரங்களைச் செய்து, அழகு பார்த்து "பிள்ளைக் கலிதீர்க்க வந்த பெருமானே" என்று கொஞ்சினர், சீராட்டினர், பாராட்டினர்.

அவனது திருமுடியிலே வைரச் சுட்டியும், அழகுத் திருமார்பிலே நவரத்தின மணி மாலைகளையும் சின்னஞ் சிறிய பிஞ்சுக் கால்களுக்கு கொஞ்சும் பொன் மணிச் சதங்கைகளும் திருவரைக்கு செம்பொன் அரைஞாணும் அணிவித்து அவனைத் தன் கண்ணின் கருமணியைப் போல் வளர்த்து வந்தால் அரசி. இத் தகைய அழகுத் திருமகன் சிறுதேர் உருட்டி தளிர் நடை பயின்று விளையாடும் காட்சியைக் கண்டு, பந்தள நாட்டு மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். பூவுலகத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகத் தோன்றிய ஐயப்பன் வளர்பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து வந்தான். அரச குல முறைப்படி அவ னுக்கு ஐந்தாவது வயதில் முப்புரி நூல் அணிவித்து கல்வி கற்பதற்கு தக்கதோர் குருவிடத்தில் அவனை ஒப்படைத்து வித்தியாரம்பம் செய்து வைத்தார்கள்.

மணிகண்டன் குருகுலத்தில் வேத சாஸ்திரம் புராணங்கள் யாவையும் கற்றுத் தேர்ந்தான். அரசர்களுக்குரிய வில்வித்தை, வாள் வித்தை, கம்பு, சிலம்பு, குதிரையேற்றம், போர் முறைகள் ஆகிய அனைத்தையும் கற்றான்.

மணிகண்டனின் சூட்சும புத்திக்கூர்மையைக் கண்ட அவனது ஆசான் இத்தகைய மதிநுட்பம் மனிதப் பிறவியாகப் பிறந்த மற்றக் குழந்தைகளுக்கு அமைந்திராமல், மணிகண்டனுக்கு மட்டுமே அமைந்திருப்பதைக் கண்டு வியந்து அவனை ஒரு தெய்வத்தின் திரு அவதாரமென்றே கருதினர்.

குருகுல வாசம் முடித்ததும் மணிகண்டன் தனது குருநாதரிடம் விடை பெற்றுச் செல்லவேண்டிய நாள் வந்தது. மணிகண்டனை தன்னருகே அழைத்து "மணிகண்டா! வேதங்களையும், வித்தைகளையும் கற்றுத் தேர்ந்த உன்னை எனது மாணவனாக பெற்றதற்கு நான் பெரிதும் பாக்கியம் செய்தவன் தான். எனது குருகுலத்தில் இன்று வரை உன்னைப் போன்ற புத்திசாதுரியம் உடையவனை நான் மாணவனாகப் பெற்றதில்லை. சகல கலைகளிலும் வல் வனாக விளங்கும் நீ சாதாரண அரச குமாரனாக இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். பகவானின் சக்தி சொரூபமாகத் தான் நீ இருக்க வேண்டும். சிவனின் சாந்தமும், விஷ்ணுவின் ராஜசகுணமும் உன்னிடத்தில் ஒருங்கே காணப்படுவதால் உன்னைக் காணும்போது நீ என் கண்களுக்கு ஹரிஹர சொரூபமாகத்தான் தெரிகிறாய். ஆகையால் நீ வணங்கத்தக்கவன். எனது மாணவனாக இருந்து சிறப்பான முறையில் கல்வி கற்றுத்தேர்ந்து வித்தை கற்பித்த ஆசானுக்கு நல்ல பெயரையும், நல்ல புகழையும் தேடிக் கொடுக்கும் நீ அரச குமரனாக இருந்தாலும் ஞான பண்டிதனாக இருக்கிறாய். உலகோர் வணக்கத்தக்க பெருமைக்குரியவனாய் வாழ்வாயாக" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தனக்கு கல்வி கற்பித்த ஆசான் இவ்விதம் தன்னிடம் கூறியதைக் கேட்ட மணிகண்டன் "ஐயா அடியேன் கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு, இந்தக் கல்வியைப் போதிப்பது, என்னை ஆளாக்கிய பெருமைக்குரியவர் நீங்கள் தான் ஐயா" என்றான்.

அப்போது அந்த ஆசிரியனின் மகன் ஒருவன் செவிடாகவும், ஊமையாகவும் இருந்தான். அந்தப் பிள்ளை எப்படியாயினும் குணப்படுத்தி விடவேண்டும் என்பதற்காக எத்தனையோ வகையான சிகிச்சை முறைகளையெல்லாம் செய்து பார்த்து பயனில்லாததால் மணிகண்டனின் அருட்சக்தியில் நம்பிக்கை கொண்ட அவர் மணிகண்டனைப் பார்த்து "மணிகண்டா பிறவியிலிருந்தே ஊமையாகவும், செவிடாகவும் உள்ள என் மகனின் இருளடைந்த வாழ்வை பிரகாசமடையச் செய்ய வேண்டும். அதுவே நீயெனக்கு அளிக்கும் குருதட்சணை" என்று கூறினார்.

குருநாதரின் விருப்பத்திற்கு இசைந்த மணிகண்டன், தனது தெய்வீக அருள் சக்தியால் குருநாதரின் ஊமை மகனைப் பேச வைத்தான். கேட்க வைத்தான். ஆடிப்பாடி மகிழ வைத்தான்.

அதைக் கண்ட குருநாதர் தன் மாணவனின் தெய்வீக சக்தியை உணர்ந்து அவனைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டினார். குருவின் மகனும் மணிகண்டனை வழிபட்டான். வணங்கினான். தனக்கு செவிச் செல்வத்தையும், பேசும் திறனையும் வழங்கிய மணிகண்டனை தெய்வமாகவே பாவித்தான். குருநாதரும் அவரது மகனுமே இவ்வாறு பாராட்டியதும் அவ்வூர் முழுவதும் மணிகண்டனின் அருள் வல்லபம் பற்றிய செய்தி காட்டுத்தீ போல் பரவியது.

•

மணிகண்டன் வளர வளர பந்தள நாடும் செழிமையடைந்தது. பருவ கால மழை ஒருபோதும் தவறவேயில்லை. எங்கு பார்த்தாலும் அமைதியும், ஆனந்தமும் அழகும் செழுமையுமாகத் திகழ்ந்தன. மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

## கும்ப தல தீர்த்தம்

மணிகண்டனின் வீர வரலாற்றுச் சம்பவங்கள் அனைத்தும் நிகழ்ந்து முடிந்து மணிகண்டனும் ஜோதி வடிவாய் மறைந்த பிறகு, மன்னன் ராஜசேகரன் அவரது பிரிவாற்றாமையால் மனம் வருந்தினான். அரண்மனையில் மணிகண்டன் வசித்திருந்த காலங்களைப் பற்றியும், அவனது கனிமொழிகளையும், அவனது இனிமையான குணங்களைப் பற்றியும் நினைத்து நினைத்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். அரசாங்க கடமைகளிலும் அக்கறையில்லாமல் பற்றற்றவனாக இருந்தான்.

இப்படியிருக்கும்போது அரசனது மனக்கவலையைத் தீர்ப்பதற்காக அகஸ்திய முனிவர் அரசன் ராஜசேகரனது மாளிகைக்கு விஜயம் செய்தார். அவரை நல்ல முறையில் மரியாதை மதிப்புடன் வரவேற்ற மன்னன் ராஜசேகரன் அகஸ்திய முனிவரிடத்தில் மணிகண்டனைப் பிரிந்த சோகக் கதையைக் கூறி "முனிவர் பெருமானே என் அன்பு மணிகண்டன் இப்போது எங்கே இருக்கிறான்?" அவன் எனது அரண்மனையிலிருந்து வந்த காலத்தையும், என் மகனைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் வளர்ந்து எனது அரசு நிர்வாகத்தின் அவன் எனக்கு உதவி செய்து வந்த வழிவகைகளையும் என்னால் கொஞ்சம் கூட மறந்திருக்க முடியவில்லை. நான் எப்படி அவனை மறந்துவாழ முடியும். அவனிருந்த போது, நடந்து வந்த சம்பவங்கள் இப்போது என் கண் எதிரே நடப்பதுபோல் உள்ளன. நொந்து போன எனது இதயத்திற்கு ஆறுதல் மொழி கூறுவதற்கு உங்களைத் தவிர யாராலும் முடியாது என் ஐயனே" என்று வேண்டினான்.

அதற்கு அகஸ்திய முனிவர் மன்னனை நோக்கி, "மன்னவனே, மணிகண்டனின் விருப்பப்படி தான் நான் இங்கு வந்திருக்கிறேன். அவன் உங்களுக்குச் சொன்ன அறிவுரைகளை நீங்கள் மறந்து விட்டீர்களா? இவையெல்லாம் மனிதப் பிறவிகளுக்கு புரிந்துகொள்ள முடியாத மாயையின் திருவிளையாடல்கள். மணிகண்டன் மாயைகளைக் கடந்தவன், காலங்களைக் கடந்தவன், தேசிய எல்லைகளைக் கடந்தவன், பெரிய ஞானி, தீர்க்கதரிசி, தெய்வீகப் பிறவி, பூர்வ ஜென்ம கர்ம வசத்தினால் தான் உங்களால் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, நீங்கள் உங்கள் மனதை ஒருநிலைப்படுத்தி, தாரகைப் பிரமத்திலே நிலைத்து நினைவில் இருத்திக் கொண்டால் தான் இந்தக் கர்ம விதிவசத்திலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ள முடியும். கர்ம பந்தத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால் நீங்கள் ஆசையற்று பற்றில்லாமல் தாரக பிரமத்தை தியானித்துக் கொண்டிருக்க வேண்டும். நான் இப்போது பூதநாதனுக்காகக் கட்ட வேண்டிய திருக்கோயிலை எப்படித் தீர்மானிக்க வேண்டுமென்பதை உங்களுக்குத் தெளிவாகச் செல்வதற்குத்தான் வந்திருக்கிறேன். எனவே, இந்த வேலையை உடனடியாகத் தொடங்கிவிடுங்கள். காலதாமதம் செய்ய வேண்டாம்" என்றார்.

பிறகு அகஸ்திய முனிவர் இராமயண காலத்திலிருந்தே பம்பா நதி தீர்த்தத்திற்கும், கும்ப தல தீர்த்தத்திற்கும் இருந்து வரும் அருமைபெருமைகளையும் எல்லாம் அரசன் ராஜசேகரனுக்கு எடுத்துச் சொன்னார். அரசன் கும்பதல தீர்த்தம் என்பது எங்கே இருக்கிறது என்பதையும், அது ஏன் அவ்வளவு முக்கியத்துவமுடையது என்றும் அகஸ்தியரை விசாரித்தான்.

அந்த புனித நன்னீரானது ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்த புனிதத் தண்ணீர் ஆகையால் கும்ப தல தீர்த்தத்தையே பூதநாதர் சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்கு தேவர்களே பயன் படுத்தி வந்திருந்தார்கள். பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் ஐயப்பா சாமிக்கு கும்பல தீர்த்தமே அபிஷேகம் செய்வதற்குரிய புனிதமான நல்ல நீராகும் என்று சொன்னார்.

## தீட்டகற்றல்

**பசுவின் ஐந்து பொருட்கள் ஒன்றாக சேர்வது பஞ்சகௌவ்வியம் எனப்படும். பிரச தீட்டு முடிந்தவுடன் பெண்கள் இதை சாப்பிட்ட பின்பே குடும்ப வாழ்வில் ஈடுபட வேண்டும். அளவு கோசலம் ஒரு பலம். கட்டை விரல் அளவு சாணம் ஒரு பலம். பால் ஏழு பலம். தயிர் மூன்று பலம், நெய் ஒரு பலம் இவற்றுடன் நீர் ஒரு பலம் சேர்த்துக் கொள்ளவேண்டும். பஞ்சகௌவ்வியத்தை சாப்பிடும்போது சொல்லவேண்டிய மந்திரம்:**

***யத் த்வக் அஸ்திகம் பாபம் தேஹே திஷ்டதி மாமகே!***

***ப்ராசனம் பஞ்சகௌவ்வியஸ்ய தஹது அக்னிரிவ இந்தனம்!!***

**எனது உடலில் தோல், எலும்பு இவைகளை அண்டி எனது உடலில் உள்ள பாவத்தை தீ ஆனது கட்டையை எரிப்பது போல் பஞ்சகௌவ்வியம் அகற்றட்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பனின் அரிதான செய்திகள்
## '18' படிகளின் அம்சங்கள்

சபரிமலை ஐயப்பன் கோயிலுள்ள 18 படிகளும் மிகவும் சிறப்பு மிக்கது ஆகும். இந்த ஒவ்வொரு படியம் இறைவனின் அம்சம் ஆகும். அவை:

| | | |
|---|---|---|
| ஒன்றாம் படி | - | சூரியன் |
| இரண்டாம் படி | - | சிவன் |
| மூன்றாம் படி | - | சந்திரன் |
| நான்காம் படி | - | பராசக்தி |
| ஐந்தாம் படி | - | செவ்வாய் |
| ஆறாம் படி | - | முருகப்பெருமான் |
| ஏழாம் படி | - | புதன் |
| எட்டாம் படி | - | விஷ்ணு |
| ஒன்பதாம் படி | - | குரு பகவான் |
| பத்தாம் படி | - | பிரம்மா |
| பதினொராம் படி | - | சுக்கிரன் |
| பன்னிரெண்டாம் படி | - | ரங்கநாதன் |
| பதின்மூன்றாம்படி | - | சனீஸ்வரர் |
| பதினான்காம் படி | - | யமன் |
| பதினைந்தாம்படி | - | ராகு |
| பதினாறாம்படி | - | காளி |
| பதினேழாம் படி | - | கேது |
| பதினெட்டாம் படி | - | விநாயகர் |

## 18 படிகளில் அமர்ந்துள்ள ஐயப்பனின் திருநாமங்கள்

| | | |
|---|---|---|
| ஒன்றாம் படி | - | குளத்தூர்பாலன் |
| இரண்டாம் படி | - | ஆரியங்காவு ஆனந்தரூபன் |
| மூன்றாம் படி | - | எரிமேலி ஏழைப்பங்காளன் |
| நான்காம் படி | - | ஐந்து மலைத்தேவன் |
| ஐந்தாம் படி | - | ஐங்கரன் சோதரன் |
| ஆறாம் படி | - | கலியுகவரதன் |
| ஏழாம் படி | - | கருணாகரத்தேவன் |
| எட்டாம் படி | - | சத்யபரிபாலகன் |
| ஒன்பதாம் படி | - | சற்குண சீலன் |
| பத்தாம் படி | - | சபரிமலைவாசன் |
| பதினொராம் படி | - | வீரமணிகண்டன் |
| பன்னிரெண்டாம் படி | - | விண்ணவர்தேவர் |
| பதின்மூன்றாம்படி | - | மோகினிபாலன் |
| பதினான்காம் படி | - | சாந்தஸ்ரூபன் |
| பதினைந்தாம்படி | - | சற்குருநாதன் |
| பதினாறாம்படி | - | நற்குணக்கொழுந்தன் |
| பதினேழாம் படி | - | உள்ளத்தமர்வோன் |
| பதினெட்டாம் படி | - | ஐயப்பன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றெட்டுச் சரணங்கள்

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதிபகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹரசுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சகோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச்சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாதத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்தமூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப்பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைஷ்ணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோயில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | பம்பையில் பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறை தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இருமுடிப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தி தரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேருத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காளைகட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப்பரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு கஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பை நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்ரீஇராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள்செய்தவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | தீபஜோதித் திருஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பை விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறையுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சங்குரத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கறுத்தசாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராசப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்கினி குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பஸ்மக்குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சற்குருநாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மகரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்வாமியே | சரணம் ஐயப்பா |

## மன்னிப்பு

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து காத்து ரக்ஷிக்க வேணும் ஓம் ஸ்ரீ சத்தியமான பொன்று பதினெட்டாம் படிமேல் வாழும் ஓம் ஹரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா காசி ராமேஸ்வரம் பாண்டி மலையாளம் இலங்காபுரி யாழ்நகர் கோண்டாவில் பதியெங்கும் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ ஹரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பன் கவசம் காலை மாலை பாராயணம் பண்ணினால் ஐயன் வாழ்க்கை துயர் களைந்து இன்னருள் புரிவார்

# ஐயப்பன் கவசம்

## காப்பு

1. அரிஹரபுத்ரனை, ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை,
ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை, சாந்த ஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப்
பணிந்திடுவோமே

2. ஐயப்ப தேவன் கவசமிதனை
அநுதினம் சொல்ல அல்லல்கள்
ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும்
வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் நல்குமே

## நூல்

1. மண்ணுலகெல்லாம் காத்தருள்செய்
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

2. புலி வாஹனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணியமூர்த்தியே வருக வருக

3. பூதநாயக வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

4. வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீர மணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக

5. ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்
கொள்ள
இரு மூர்த்தி மைந்தா வருக வருக

6. பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப்
பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே

7. சபரிகிரீசனை நினைத்தே நீறிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

8. பம்பையின் பாலன் பெயர்
சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே
வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம்
நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்
துவர்

9. சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

## வேண்டுதல்

10. சிவனார் மகன் என் சிரசைக்
காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக்
காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக்
காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. திருமூர்த்தி மைந்தன் இரு செவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகப் பூஜ்யன் நாவினைக் காக்க

12. கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க

13. வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க

14. முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்மாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்மசாஸ்தா என் தொடைதனைக் காக்க

15. முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூரஜோதி என் கணுக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன் விரல்களைக் காக்க

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்காவ்(வு) ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்ரஹ நாதன் நடுப்பகல் காக்க
மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க
காக்கக் காக்கக் கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என் பயம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லா தொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர்சொல் லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய்

வாதம், பித்தம், சிலேட்டுமத்துடனே
வாந்தியும், பேதியும், வலிப்பும், சளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா

கல்வியும், செல்வமும், கள்ளமில்லாத மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனைநான் துதிக்க
நித்தியமும் அருள்வாய்சபரி கிரிசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம், குரோதம், லோபம், மோகம்
மாதமாச்சர்யமென்னும் ஐம்பெரும்
பேய்கள்
என்றுமே என்னை அணுக விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்

சூது, பொறாமை, பொய்
கோபமில்லாமல்
சோரம், லோபம் துன்மார்க்கம்
கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணி கண்டா வரமெனக்
கருள்வாய்

மூப்பும், பிணியும், வறுமையும், பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய்யாமல்
உள்ளன் புடனே உன்திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள்
தருவாயே!

## வணக்கம்

அரிஹரபுத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ்பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ

பொன்னம் பலத்துறை புண்ணியா
நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா
நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா
நமோ நமோ
மஹிஷீ மர்த்தன மணிகண்டா
நமோ நமோ

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்!

## தியாகத்தின் தன்மை

தியாகத்தை சிறப்பிப்பது கனியங்கள் அல்ல. தரமே ஒரு பேரரசனுக்கு வழங்குவது என்பது ஒரு சுபாவமாயிருக்கும். ஆயினும், ஒரு வறிய பெண் தன் வறுமையையும் பொருட்படுத்தாது தன் குருவிற்கு மாதுளம்பழம் ஒன்றை வழங்குவாள் ஆனால் அந்த தியாகத்தின் பெருமையை என் என்பது! அவள் தன் வாழ்வையும் பொருட்படுத்தாது அந்தக் கனியை வழங்கினாள். இதனிலும் பெரிய தியாகம் வேறு எது இருக்க முடியும். உங்களிடம் மிதமிஞ்சியிருப்பது தியாகம் அல்ல. உண்மையாக தியாகம் என்பது உங்களுக்கு மிகவும் பிரியமான ஒன்றை – நீங்கள் பெறுமதியாக கருதும் ஒன்றை வழங்குவதே தியாகம் ஆகும்.

பிச்சைக்காரர் கைநீட்டும்போது காசை எறியாதீர்கள். அவர்கள் தம்மில் தாமே தங்கியிருக்க உதவுங்கள். நோயாளிகளுக்கும் வயோதிபர்களுக்கும் உணவு, இருப்பிடம், அன்பு, ஆதரவு அளியுங்கள்.

## இந்துசமயம்

உங்கள் இதயத்திலும், பிரபஞ்சத்தின் இதயத்திலும் முழங்கிக் கொண்டிருக்கும் 'ஓம்' என்னும் மூலாதார பிரணவ ஒலியை அவதானமாக செவிமடுங்கள்.

## ஆன்மா

ஆன்மா இறப்பதில்லை. உடல் மட்டுமே அழிகின்றது. மனிதன் இதை அறிந்து கொள்ளும்போது இறப்பு, தன் கடுகடுப்பை இழக்கின்றது. இறப்பு அஞ்சப்படுவதில்லை. மேலும், இறப்பானது தெரிந்த துறைமுகத்திற்கான வரவேற்புக்குரிய பயணமாகின்றது.

## பக்தி

மணலில் விழும் மழை நீர் கீழே ஊடுருவுகின்றது. சிவந்த மண்ணில் மழை நீர் தேங்குகின்றது. சிப்பியில் மழை நீர் வீழும்போது முத்து பிறக்கின்றது. இவை போலவே ஒவ்வொருவரும் பெறுமதிக்கு ஏற்ப பக்தி வளர்கின்றது.

– பாபா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கருணை மழை பொழியும்

கருணை மழை பொழியும் எங்கள் கணபதியே
ஜெகராஜனே கரிமுகனே விழியால் எமைக் காப்பவனே!
வானகம் மேவிய காவிய கணநாத கற்பகமே
பாதம் நடக்க பாதபலமும் தேகபலமும் தருபவனே! (கருணை...)

தனியாய் வரும் அடியார்களின் துணையென வழிகளில் வருவான்
அருள் ஐயனின் முகம் காணவே கனிவாய் திருவருள் தருவான்
அருள் ஆரியங்காவினிலே அரசாளும் நாதா
அரிகரசுதன் அருகிருக்கும் ஆண்டவனே தேவா (கருணை...)

துயர் நீக்கிடும் தெய்வமனைத் துதித்திட உருகிடும் மனமே
விதிமாறிட வினை ஓடிடும் விக்னேஷ்வரன் அருள் வருமே!
ஞானப் பொருளான எங்கள் குருவே கணநாதா
துளசி மணிகண்டன் அருளை அடையும் கருணை நீ தா! (கருணை...)

## எல்லோருக்கும் மூத்தவரப்பா

எல்லோருக்கும் மூத்தவரப்பா – நம்ம
பிள்ளையார்பட்டி செல்லப் பிள்ளையார் (2)
நெனைச்சது நடக்கணும் நேந்துக்கிட்டா முடியணும்
மஞ்ச நிற கல்லு பிள்ளையார் – நம்ம
பிள்ளையார் பட்டி வாழும் பிள்ளையார்
வேழ முக நாயகா கடவுளப்பா எங்க பிள்ளையார் (2)
(எல்லோருக்கும்)

ஆதி சிவனுக்கு மூணு கண்ணு நெற்றியில்
இவருக்கு அதுபோல பிள்ளையாரு பட்டியில்
தொப்பைது பெரி தப்பா
முன்னே பொறந்தார் – அவர்
உலகத்துக்கா முன்னே பொறந்தார்
வேழ முக நாயக கடவுளப்பா எங்க பிள்ளையார் (2)
(எல்லோருக்கும்)

தொங்கும் காதுகளும் மிருகஜாதி போலதான்
விழிகளும் புருவங்களும் மனிதஜாதி போலதான்
தொப்பைய்து பெரிது அப்பா
அதிசயமா வடிவுங் கொண்டாரு – நம்ம
பிள்ளையாரு பட்டி வந்தாரு (2)
வேழ முக நாயக கடவுளப்பா கணேசா
(எல்லோருக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவின் பாடல்கள்

1. ஓம் குரு நாதா ஓம் குரு நாதா
ஓம் குரு நாதா சிவ குரு நாதா
சிவ குரு நாதா அரி குரு நாதா
அரி குரு நாதா அரஹரகுரு நாதா
2. அரஹர சிவ சிவ குருநாதா
சிவ சிவ அரஹர குருநாதா
ஹரிசிவ ஹரிசிவ குருநாதா
சிவஹரி சிவஹரி குருநாதா
3. எங்கள் குருசாமி எங்க குருசாமி
எங்க குருசாமி தங்க குருசாமி
தங்க குருசாமி அரிஹரசுதசாமி
அரிஹரசுதசாமி ஐயப்பா
4. அரிஹர சாமி ஐயப்பா அரிஹரசுதசாமி
ஓம் ஓம் ஐயப்பா ஓங்குருநாதா ஐயப்பா
ஓம் குரு நாத ஐயப்பா எம் குரு நாதா ஐயப்பா
எங்குரு நாத ஐயப்பா எங்கும் நிறைந்தவர் ஐயப்பா
5. எங்கும் நிறைந்தவர் ஐயப்பா எங்கள் நாதா ஐயப்பா
ஓம் குருநாதா பத்திபுரிசா
ஓத் குருநாதா சபரிகிரிசா
ஓம் குருநாத ஜெயகுரு நாதா
ஜெயகுருநாத ஸ்ரீகுரு நாதா
6. வாரார் அப்பா வாரார் அப்பா எங்க குருசாமி
வாரார் ஐயா வாரார் ஐயா எங்க குருசாமி
நல்வழியை காட்டித் தருவார் எங்க குருசாமி
நற்கதியே சேற்பிப்பார்எங்க குருசாமி
சரணகோசம் சொல்லித் தந்தார் எங்க குருசாமி
சபரிசன்நாமம் சொன்னார் எங்க குருசாமி
சாஸ்தாநாமம் சொல்லித்தந்தார் எங்க குருசாமி
எங்ககுரு சாமி தங்க குருசாமி அரிஹரசுதசாமி
குருசாமி நாமம் சொன்னால் துயரம் எல்லாம் பறந்து விடும்
துயரங்கள் பொக்கவே தூய்மையாக இருக்கச் சொன்னார் – எங்க குருசாமி
ஐயப்பன் நாம் சொன்னாலே அல்லல் எல்லாம் தீரும் என்றார்
சரண கோசம் சொன்னால் சபரிசன் வருவான் என்றார்,
சபரிசன் அருளாலே துன்பம் எல்லாம் திரும் என்றார்
சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா

### குரு மங்களம்

7. குருவான தெய்வத்துக்கு குறைவிலா மங்களம்
ஞானமதில் உறைபவர்க்கு நாள்தோறும் மங்களம்
சபரியில் உறைபவருக்கு சர்வ மங்களம்
சபரிகிரி நாதனுக்கு சர்வசுக மங்களம் மங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவன்

1. சம்போ சங்கர கௌரியதே - சிவ
சாம்ப சங்கர உமாபதே
சம்போ சங்கர கௌரிபதே - சிவ
சாம்ப சங்கர உமாபதே

2. சிவ சிவ சிவ சிவ சபாபதே - சிவ
சிவகாமி ஸூந்தர உமாபதே
சிவ சிவ சிவ சிவ சபாபதே - சிவ
சிவகாமி ஸூந்தர உமாபதே

3. சம்போ சங்கர கௌரீசா - சிவ
சாம்ப சங்கர கௌரீசா
சம்போ சங்கர கௌரீசா - சிவ
சமபோ சங்கர கௌரீசா

4. கைலாசபதியே கௌரீசா - சிவ
கேசவ சேவித கௌரீசா
கைலாசபதியே கௌரீசா - சிவ
கேசவ சேவித கௌரீசா

5. ஸாமகானப்பிரிய கௌரீசா - சிவ
ஸோம கலாதர கௌரீசா
ஸாமகானப்பிரிய கௌரீசா - சிவ
ஸோமகலாதர கௌரீசா - சம்போ
(சம்போ சங்கர - கௌரீ சங்கர)

## ஓம் நமசிவாய

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
உலகை ஆளும் இனிய நாமம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
உணர்வை ஆளும் இனிய கீதம் ஓம் நமசிவாய
அனல் ஏந்து நாதனே தினம் உன்னைப் போற்றிடும்
அருள் நிறை மந்திரம் ஓம் நமசிவாய

அரசிவயோகமாய் தினம் உன்னை காட்டிடும்
அருள் நிறை மந்திரம் ஓம் நமசிவாய
சிவாய நமசிவாய எனும் நாமம் அது
விடாத வினை தொடாதபடி காட்டும் (ஓம் நமசிவாய)

ஐந்தெழுத்தில் அவதரிக்கும் ஓம் நமசிவாய
அதிசயத்தை மனம் நிறுத்தும் ஓம் நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரி ஈசனே சிவமலை வாசனே
அமுதென ஆகுமே உன் திருநாமமே
அண்டமாழும் உந்தன் நாமம் சொல்லவே
அஷ்டசித்தியோகம் வந்து சேருமே
ஓம் நமஹ சிவனே நமஹ (ஓம் நமசிவாய)

எந்த துன்பம் வந்தபோதும் ஓம் நமசிவாய
என்று சொல்ல துயரம் போக்கும் ஓம் நமசிவாய
மந்திரகீதமாய் வந்தொலி செய்யுமே
மாமலை உன்னையும் வணங்கிட சொல்லுமே
பஞ்சபூதம் எந்தநாளும் பேசுமே
உந்தன் நாமம் புனிதமள்ளி வீசுமே
ஓம் நமஹ சிவனே நமஹ (ஓம் நமசிவாய)



## அன்னை உருவமம்மா

அன்னை உருவமம்மா ஆதிபராசக்தியம்மா
அய்யப்பனை கண்டுவர அருள்வரம் தாருமம்மா
காசியிலே வீற்றிருக்கும் விசாலாட்சி தாயேயம்மா
காந்தமலை நாதனையே காணவரம் தாருமம்மா
காஞ்சியிலே வீற்றிருக்கும் காமாட்சி தாயேயம்மா
கண்கண்ட தெய்வத்தையே காணவரம் தாருமம்மா
மதுரையிலே வீற்றிருக்கும் மீனாட்சி தாயேயம்மா
மணிகண்ட தேவனையே காணவரம் தாருமம்மா
சோட்டாணிக் கரை வாழும் பகவதியே தாயேயம்மா
சண்முகசோதரனை காணவரம் தாருமம்மா
இருக்கன்குடி மாரியம்மா இன்னல்களை தீருமம்மா
இருமுடிகள் தாங்கிவர அருள்வரம் தாருமம்மா
சமயபுரம் மாரியம்மா சடுதியில் வாருமம்மா
சங்கரன் மைந்தனையே காணவரம் தாருமம்மா
பாளையிலே வீற்றிருக்கும் ஆயிரத்தாள் தாயேயம்மா
பம்பையின் பாலனையே காணவரம் தாருமம்மா
யாழ் வண்ணை நகர் வீற்றிருக்கும் பேராட்சி தாயேயம்மா
வன்புலி வாகனனை காணவரம் தாருமம்மா
நெல்லையிலே வீற்றிருக்கும் காந்திமதி தாயேயம்மா
நெய்யபிஷேகம் செய்ய அருள்வரம் தாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சாத செஞ்சடைச்சி

அஞ்சாத செஞ்சடைச்சி மாகாளி அம்மா
ஆதி சிவன் பத்தினியே திரிசூலி

(அஞ்சாத)

கொஞ்சும் சதங்கை ஒலி கேட்குதம்மா – உன்
கெண்டை கூத்துக்கண்டு மனம் குளிருதம்மா

(அஞ்சாத)

செஞ்சடையை அலங்கரிக்கும் நாகம்மா – உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகம்மா

(அஞ்சாத)

பாலாபிஷேகம் செய்து மாகாளி – உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி

(அஞ்சாத)

தேனாபிஷேகம் செய்து மாகாளி – உன்
சேவடியை சேவித்திடுவோம் திரிசூலி

(அஞ்சாத)

செவ்வலரி மாலை போட்டு மாகாளி – உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி

(அஞ்சாத)

மல்லிகைப் பூ சரம் தொடுத்து மாகாளி – உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

## கரகம் வருது கரகம் வருது

கரகம் வருது கரகம் வருது பாளையத்துகாரி எங்க
சிரமமெல்லாம் களையவேணும் தங்கமுத்துமாரி
எட்டு வானம், மண் எடுத்து
நெத்தியில, செலுத்திகிட்டு
காஞ்சிபுரத்து, வேதியரை
மந்திரங்க, ஓதவிட்டு
கரகம் வருது கரகம்வருது மாங்காடு மாங்காடு பார்த்து

விரதமிருந்த பலனை எல்லாம் தாயே உன்னைகேட்டு
வைகை ஆத்து, மண்ணில் இறங்கி
மாமதுரை, கோயில் வணங்கி
பச்சை கிளியை, உச்சியில் வாங்கி
பக்தியோட, ஏங்கி ஏங்கி

தாயமங்கல கரகம் வருது மாரி புரத்தாயே உன்
தயவெல்லாம் எடுத்து செலுத்து எங்களின் கைகளிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சையிலே, மஞ்சள் வச்சு
பூத்த கிழங்கு, அரைச்சு எடுத்து
தஞ்சையிலே தாய் உனக்கு
தந்து வரம் பெறுவதற்கு

கரகம் வருது கரகம் வருது புன்னை வனத்தாளே
அம்மா புண்ணியமா போகும்படி பலன் கொடுப்பாயே
வெள்ளி செம்பு, விளக்கு எடுத்து
வேப்பங்கொழுந்து, பறிச்சி எடுத்து
காசி தீர்த்தம், நிரப்பி நிரப்பி
மேளதாளம், அடிச்சி கிளப்பி

கரகம் வருது கரகம் வருது கண்ணப்புரத்தாளே
கெட்ட கிரகமெல்லாம் விலகவேணும் அருள் புரிவாயே
மஞ்சநூலு, காப்பு கட்டி
மாரிநோன்பில், மனசைக்கட்டி
ஆறுவார, விரதமிட்டு
ஆத்தா உன்னை நெனைச்சுகிட்டு

கரகம் வருது கரகம் வருது பாளையத்துக்காரி எங்க
சிரமமெல்லாம் களையவேணும் தங்கமுத்துமாரி
சிலம்பு இரண்டு, சல சலக்க
சிவப்பு கச்ச, மினுமினுக்க
பம்பை உடுக்க, பரபரக்க
படமேடு அது சிலுக்க

## வருகிறாள்......

வருகிறாள் வருகிறாள் அன்னை சக்தி வருகிறாள்
வருகிறாள் வருகிறாள் ஆதி சக்தி வருகிறாள்

பாவம் எல்லாம் தீர்ப்பதற்கு பராசக்தி வருகிறாள்
பக்தர்களைக் காப்பதற்கு பத்ரகாளி வருகிறாள்

இன்னல் எல்லாம் தீர்ப்பதற்கு இச்சாசக்தி வருகிறாள்
கீர்த்தியோடு புகழ் வழங்கிட கிரியா சக்தி வருகிறாள்
ஞானமழையைப் பொழிவதற்கு ஞான சக்தி வருகிறாள்
நம்பும் நம்மைக் காப்பதற்கு தேவி ஓடி வருகிறாள்

சமயபுரத்தில் வாழும் அம்மை சாந்தி வழங்க வருகிறாள்
சஞ்சலங்கள் தீர்ப்பதற்கு சாம்பவியும் வருகிறாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோட்டாணிக்கரை பகவதியும் சோகம் தீர்க்க வருகிறாள்
சொர்க்க போக வாழ்வை வழங்க தேவி ஆடி வருகிறாள்

மாயைவிலகி மனம் திருந்த மஹாதேவி வருகிறாள்
மாதுளம்பூ மேனிகொண்ட மஹாகாளி வருகிறாள்

மோகம் எல்லாம் மறைவதற்கு மூகாம்பிகை வருகிறாள்
முக்திநலம் தந்திடவே சக்தி ஓடி வருகிறாள்

பஞ்சம் ஓட பாவம் ஓட பஞ்சபாணி வருகிறாள்
பாம்பணிந்த பரமனோடு பார்வதியாள் வருகிறாள்

மகிடன் தலையின் மீதிலேறி துர்க்கையாக வருகிறாள்
மலைமகளாய் கலைமகளாய் அலைமகளாய் வருகிறாள்

## முத்தான முத்துக்குமரி

1. முத்தான முத்துக்குமரி துர்க்கையே நீ வா வா
சிரித்தாடும் செல்வக் குமரி சிந்தை மகிழ வா வா
நீயாடும் அழகைக் கண்டு சூலம் ஆடி வருகுதம்மா
சூலம் ஆடும் அழகைக்கண்டு சிம்மம் ஆடி வருகுதம்மா
சிம்மம் ஆடும் அழகைக்கண்டு மனம் ஆடி வருகுதம்மா
மனம் ஆடும் அழகைக்கண்டு மக்கள் கூட்டம் பெருகுதம்மா
(முத்தான முத்துக்குமரி)

2. மஞ்சளிலே குளிக்வைத்து பட்டாடை உடுத்திவைத்து
குங்குமத்தால் சாந்தெடுத்துன் அங்கமெல்லாம் பொட்டுவைத்து
செந்தூர திலகம் வைத்து நெஞ்சத்திலே உனைவைத்து
மஞ்சள் குங்குமத்தால் உன்னை அர்ச்சிப்பேன் வருவாய்
(முத்தான முத்துக்குமரி)

3. முடிசூட்டிக் கொண்டையிட்டு துர்க்கையே உந்தனுக்கு
மணமுள்ள மலர்சூடி மையிட்டுப் பொட்டிட்டு
கம்மலுடன் ஜிமிக்கியை காதுகளிலே மாட்டி
முன்னழகும் பின்னழகும் நான் பார்த்து மகிழ்ந்திடுவேன்
(முத்தான முத்துக்குமரி)

4. கல்வைத்த மோதிரமும் கைகளிலே வளையல் இட்டு
கழுத்திலே அணிவதற்கு புஸ்பராக மாலையோடு
தங்கத்தால் செய்ததோடு நவரத்தின கீரிடம் வைத்து
சிவப்பு வண்ணப்பட்டுத்தி நான்கண்டு மகிழ்ந்திடுவேன்
(முத்தான முத்துக்குமரி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 . இடுப்பிலே உன்னைத் தூக்கித் தேரோட்டம் காட்டிடுவேன்
கால்கொலுசு சிலுசிலுக்க கையெடுத்து நடந்திடுவேன்
தவழ்ந்து விளையாடிய பின்னர் தள்ளாடி நடக்கையிலே
தூளியிலே தூங்கவைத்து தாலாட்டுப் பாடிடுவேன்
ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

(முத்தான முத்துக்குமரி)

**மஞ்சமாதா**

ஐயப்பன் அருகினிலே மஞ்சமாதா (2)
அழகாகக் கோயில் கொண்டாய் மஞ்ச மாதா
அழகான தெய்வம் நீயே மஞ்சமாதா
ஆனந்த தேவியளே நீ மஞ்சமாதா
திருவருளைத் தருவாயே மஞ்சமாதா

மகரிசியை வதைத்ததும் மஞ்சமாதா ஆனவளே தாயே தாயே
மஞ்சமாதா நாமம் கொண்டவளே தாயே மஞ்சமாதா
சபரியிலே கோயில் கொண்டாய் தாயே மஞ்சமாதா
கன்னிச்சாமி பூசையிலே தாயே மஞ்சமாதா
கலங்காமல் நிற்கிறாயோ தாயே தாயே மஞ்சமாதா

## பழனி வேலா



பாலனைப்போல் தோன்றுகின்றாய் பழனிவேலா! – நீயும்
பண்டாரம் போல் நிற்பதேனோ? – பழனிவேலா!
வேலை ஏந்துங்கைதனிலே பழனிவேலா!
வேறுதண்டு ஒன்று இருப்பதேனோ? பழனிவேலா!

கூடவரும் மயிலுமெங்கே? பழனிவேலா! உந்தன்
கோபத்தினால் ஓடியதோ? பழனிவேலா!
தேடிப்பிடித்து வந்திடுவோம் பழனிவேலா! – நீயும்
தீரத்துடன் ஏறிடுவாய் பழனிவேலா!
அப்பா உன்னைத் திட்டினாரோ? பழனிவேலா – உந்தன்
அண்ணன் வம்பு செய்தனரோ? பழனிவேலா!
எப்பொழுது வீடு செல்வாய்! பழனிவேலா! – நாங்கள்
வேண்டும் வரம் தந்தருள்வாய் பழனிவேலா!

உலகம் முழுவதும் சுற்றினதில் பழனிவேலா! – உனக்கு
உகந்த பழம் கிடைக்கலையோ பழனிவேலா ! அந்தக்
கோபத்தினால் நீயுமெங்கள் பழனிவேலா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிவேடம் பூண்டனையோ பழனிவேலா!

உண்டியலிற் பணமிருக்குப் பழனிவேலா! – நல்ல
உடைகள் தரித்து நின்றாலென்ன? பழனிவேலா!
துண்டுகட்டி நிற்பதேனோ? பழனிவேலா! பட்டுத்
துணிகள் கட்டி நின்றாலென்ன? பழனிவேலா!
காணவரும் பக்தரெல்லாம் பழனிவேலா!
போடுகின்றார் மொட்டையவர் உம்மைப்போல
ஏனோ? இந்தக் கோலமெல்லாம் பழனிவேலா!
நீயும் கீழிறங்கி வந்திடுவாய் பழனிவேலா
பழனிமலை ஆண்டவனே! பழனிவேலா! – உந்தன்
பத்தர்களுக் கருள் புரிவாய் பழனிவேலா!
கலியுகத்தின் தெய்வமே நீ பழனிவேலா! – எங்கள்
கவலைகளைத் தீர்த்தருள்வாய் பழனிவேலா!

## பழநியிலே சந்நியாசி

பழநியிலே, சந்நியாசி, தணிகையிலே சம்சாரி உன் கணக்கு
புரியலையே முருகா //
ஆறுபடை மீதிலே நூறுமுகம் காட்டுறே ஆறுதலைத் தேடுகிறேன்
எந்தமுகம் காட்டுவே
அறியாமல் தவிக்கிறனே முருகா உன்தன் அப்பாவி கேட்பதென்ன தவறா
ஆறுபடை முருகனுக்கு அரோகரா நாங்கள் ஆறுதலைத் தேடுகிறோம்
அரோகரா
கந்தவேளு குமரவேலு அரோகரா உனைக்கண்டு வந்தால் நிம்மதிதான்
அரோகரா
(பழநியிலே....)
குழந்தைபோல நடப்பதென்ன சுவாமிமலையிலே நீ கொழுந்து போல
சிவப்பதென்ன திருச்செந்தூரிலே
முருகா முருகா முருகா முருகா
குழந்தை வேலனை கொஞ்சி விளையாடலாம் கோபக்காரக் குமரனை
குமரனை எப்படித்தான் நாடலாம்
குளத்தைப் போல மனசு கலங்குது குமரா தெளிய வைத்தால்
ரெம்ப நல்லது
ஆறுபடை முருகனுக்கு அரோகரா நாங்கள் ஆறுதலைத்
தேடுகின்றோம் அரோகரா
கந்தவேளு குமரவேலு அரோகரா உனைக்கண்டு வந்தால்
நிம்மதிதான் அரோகரா
(பழநியிலே...)
குடும்பம் நடத்தச் சொல்வதென்ன குன்றின் மீதிலே அதைக் காவி
உடுத்து மறுப்பதென்ன ஆண்டி உருவிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா முருகா......

வாழ்க்கை ஒரு நாடகம் வடிவங்க மாறிடும் சொல்லாமல்
சொல்லுதோ வடிவேல் திருமுகம்
கணிச்சகணிப்பு உண்மையாகுமோ குமரா இன்னும் உன்னே என்ன
மாயமோ
ஆறுபடை முருகனுக்கு அரோகரா நாங்கள் ஆறுதலைத்
தேடுகிறோம் அரோகரா
கந்தவேளு, குமரவேலு அரோகரா உனைக்கண்டு வந்தால்
நிம்மதிதான் அரோகரா (பழநியிலே...)



## ராமர்/நாகராஜா/கண்ணன்

ஆடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பெயரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பெயரைச் சொல்லி பாடுராஜா
(குழு: ஆடுராஜா)

சரண கோஷம் போட்டு வரும் பக்தர் பாரு
சன்நிதியை நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயப்பன் பாடும் கன்னி சாமியைப் பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுத்திடு பாரு



இருமுடி தரித்தோம், வந்தோம்
இரு ஒன்பது படி யுயர்ந்தோம்
இருள்பிடி இளகிடக் கண்டோம்
இகபர சுகமுறை யடைந்தோம்
அருள்வடிவான ஐயப்பா
எம்மன முருகிட ஒளிர்ந்தோம்
மருள்பிடி ஓடிட வேண்டும்
மண்ணில் மக்கள் உயர்வாய்
தெருள்குடி கொண்டு எங்கும்
அருள் பெற்றிடல் வேண்டும்
ஐயப்ப சுவாமியே சரணம்
சரணம் ஐயப்ப சுவாமியே

- பண்டிதர் திருவருள் வை.ஆ.- தங்கமணிசேகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமரசம் அளித்திடும்

சமரசம் அளித்திடும் சத்தியம் உணர்த்திடும் சபரிமலைத் தெய்வம்
சகோதரத்துவம் தந்து சிறப்பிக்கும் சபரிமலைத் தெய்வம்
சச்சிதானந்த சங்குமுழங்கும் சபரிமலைத் தெய்வம்
சமத்துவ மார்க்கம் அருள்தரும் சுவாமி ஐயப்பா

அறிவே உருவாய் குணநிதியாய் அருளாய் பழுத்த பழமாய்
அகில பயங்களில் அபயம் நல்கும் பரம தயாநிதியாய்
ஆதாரமாகவே பந்தமும் சொந்தமும் நீயே அருள்புரிவாய்
சதாசிவன் மகனே சரணம் சரணம் சரணம் ஐயப்பா

ஜாதி மத சமுதாய பேதங்கள் மறந்தோமே
புண்ணியனே உன்னைக் காணும் ஆவலிலே திளைத்தோமே
நாம் பொன்னம்பல மலையிலே சங்கமிக்க நாடுவோம்
மானிட நெஞ்சின் பற்றுகள் போக்கும் மார்க்கம் உனதன்றோ
ஹரிகரன் மகனே சரணம் சரணம் சரணம் ஐயப்பா!



## ஐயப்பன் வருகை

அந்தாவாறார் ஐயப்பா இந்தாவாறார் ஐயப்பா
ஐந்துமலை தான்கடந்து ஓடிவாறார் ஐயப்பா

1. சந்நிதியை விட்டிறங்கி சாஸ்தா வாறார் ஐயப்பா
பதினெட்டாம் படியிறங்கி பார்க்க வாறார் ஐயப்பா
சரங்குத்தி எல்லைவிட்டு சாஸ்தாவாறார் ஐயப்பா
சக்தி உமை பாலனாக காட்சிதாறார் ஐயப்பா (அந்தா)

2. சபரியின் பீடம் விட்டு சாஸ்தா வாறார் ஐயப்பா
சாந்த சொரூபனாக காட்சி தாறார் ஐயப்பா
நீலிமலை தான் கடந்து நேரேவாறார் ஐயப்பா
நித்திய பிரமச் சாரியாக காட்சிதாறார் ஐயப்பா (அந்தா)

3. பாம்பநதி தான் கடந்து பார்க்கறவாறர் ஐயப்பா
பம்பையின் பாலனாக காட்சிதாறார் ஐயப்பா
கரிமலை உச்சிதாண்டி ஓடிவாறார் ஐயப்பா
காவலுக்கு கறுப்பனையும் கூட்டிவாறார் ஐயப்பா (அந்தா)

4. அமுதமலை தான் கடந்து ஆடிவாறார் ஐயப்பா
அரிகர புத்திரனாக காட்சிதாறார் ஐயப்பா
காளைகட்டி தான்கடந்து ஆடிவாறார் ஐயப்பா
காந்தமலை ஜோதியாக காட்சிதாறார் ஐயப்பா (அந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எருமேலி பேட்டை துள்ளி அங்கேவாறார் ஐயப்பா
ஏகாந்த மூர்த்தியாக காட்சிதாறார் ஐயப்பா
பந்தளத்து தேசம் விட்டு பார்க்கவாறார் ஐயப்பா
பக்தருக்கு பக்தனாக காட்சிதாறார் ஐயப்பா (அந்தா)

6. இருமூர்த்தி மைந்தனாக காட்சிதாறார் ஐயப்பா
இந்துமகா சமுத்திரத்தை தாண்டுகிறார் ஐயப்பா
இலங்கை மாநகரத்திற்குள் நுழைந்துவிட்டார் ஐயப்பா
இன்முகமாய் இவ்விடத்திற் கோடிவாறார் ஐயப்பா (அந்தா)

7. கொழும்பு மாநகரதைத்தையும் பார்த்துவிட்டார் ஐயப்பா
செட்டித்தெரு வழியாக ஓடிவாறார் ஐயப்பா
காளி அம்மன் கோவிலுக்குள் நுழைந்துவிட்டார் ஐயப்பா
காருண்ய மூர்த்தியாக காட்சிதாறார் ஐயப்பா
மயூராபதி தன்னையும் பார்த்துவிட்டார் ஐயப்பா (அந்தா)

8. யாழப்பாண நகரத்தையும் பார்த்துவிட்டார் ஐயப்பா
கோண்டாவில் ஸ்ரீ சபரீஷ பதிக்கும் வந்துவிட்டார் ஐயப்பா
தென்மராட்சி பதிக்கும் வந்துவிட்டார் ஐயப்பா
சாமி சாமி ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

9. குருசாமி கூடவே ஓடிவாரார் ஐயப்பா
சாவகச்சேரி சபரீஷ வாசத்திற்கு வந்துவிட்டார் ஐயப்பா
ஒலிக்குதய்யா ஒலிக்குதய்யா சரணகோசம் ஒலிக்குதய்யா
சுவாமியே ஐயப்பா ஐயப்பா சுவாமியே சரணம் சரணம்.....

10. எங்கள் குல தெய்வமாக ஓடிவாறார் ஐயப்பா
அழகான பதினெட்டு படியேறி அமர்ந்து விட்டார் ஐயப்பா
பக்தர்களின் குறைகளை தீர்க்க வாறார் ஐயப்பா
சாமிக்கு சாமியாக காட்சிதாறார் ஐயப்பா

11. சாமிக்கு சாமியாக காட்சிதாறார் ஐயப்பா
வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தந்திடுவார் ஐயப்பா
துத்தியில் ஐயனாக காட்சி தாறார் ஐயப்பா
துன்பங்கள் துடைத்திடவே ஆடி வாறார் ஐயப்பா

12. சொல்லுங்கோ சொல்லுங்கோ சாமி நாமம் சொல்லுங்கோ
சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
அந்தாவாறார் ஐயப்பா இந்தாவாறார் ஐயப்பா
ஐந்துமலை தான் கடந்து ஓடி வாறார் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திம்திக்கத்தோம்

திம்திக்கத்தோம் திம்திக்கத்தோம் ஐயப்பா
சித்திக்கும் தெய்வத்தில் மெய்யான தெய்வமப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உன்னை நாடினோம் சாமி அப்பா ஐயப்பா

மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டை துள்ளுவோம்
மலைமீது ஏறி வந்து உன்னைப் பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாவரெனும் துணைவனையும் வணங்கக் கூடுவோம்

மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா – நாங்க
மகர ஜோதி காண வேண்டும் சாமி ஐயப்பா
சாமி திம் தக்கத்தோம் – ஐயப்பா திம் தக்கத்தோம் (சாமி)
சாமியே ஐயப்பா சரணம் ஐயப்பா சாமியே ஐயப்பா சரணம் ஐயப்பா

கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே
உடலின் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே
கன்னிபுரத்து மாதேவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே ஐயப்ப பக்தர்கள் உன்னோடே
வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வைத் தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா
சாமி திம் திகத்தோம் – தோம் ஐயப்ப திம் தகத்தோம் தோம்
சாமியே ஐயப்பா சரணம் ஐயப்பா (சாமி)

## அருளாமை இருள் நீக்கி உலகாளும் ஐயன்

உலகாளும் ஐயன் ஐயப்பா என் மனக்கோயில் தீபம் நீயப்பா
உலகாளும் ஐயன் ஐயப்பா என் மனக்கோயில் தீபம் நீயப்பா

அருள் நிறைந்திட இருள் மறைந்திட
கலை மலர்ந்திட நிலை உயர்ந்திட
வளம் வளர்ந்திட நலம் விளங்கிட
வினை அகன்றிட வழி பிறந்திட
சபரிமலைக்குச் செல்லுவோம்
சந்நிதியில் கூடுவோம் சரண கீதம் பாடுவோம் உலகாளும் (2 முறை)

அறியாமை இருள் நீங்க அறிவென்னும் சுடர் ஏந்தும்
அணையாத அருள்ஜோதி நீயல்லவா
தெரியாமல் நான் செய்த பிழைதன்னை மன்னித்து
அன்போடு அருள் சிந்தும் தாயல்லவா
இசையோடு உன் புகழை எடுத்துச் சொல்லவா
அருள் நிறைந்திட..... (1 முறை)
உலகாளும் (2 முறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினையாத பொழுதில்லை நீயின்றி கதியில்லை
மனதோடு மணிமாலை மணிகண்டனே
திசையேதும் தெரியாது மொழிபேதம் கிடையாது
பலகோடி மனம்பாடும் ஒரே மந்திரம்
பந்தளத்து சாஸ்தாவின் திருமந்திரம்
அருள் நிறைந்திட.... (1 முறை)
உலகாளும் (2 முறை)

திறக்கின்ற வழியோரம் திருமுகமே வரவேண்டும்
ஒலிக்கின்ற சொல்லெல்லாம் உன் திருநாமமே
மறையாத ஒளி நீயே நால் வேதப் பொருள் நீயே
மனம் நாடும் பரிகாரம் உன் பாதமே
உனை நாளும் மறவாத மனம் போதுமே
அருள் நிறைந்திட.... (1 முறை)
உலகாளும் (2 முறை)

## ஐயப்ப விரதம் இருக்கும் சாமிகள் *(சாமி சரணம்......)*

1. விரதம் இருக்கும் சாமிகளே உங்கள்
வீடுகள் ஐயப்பன் கோவில்களே
உருகி வணங்கும் சாமிகளே உங்கள்
உள்ளங்கள் தெய்வ இல்லங்களே
(சாமி .....)

2. சாமி சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் சாமி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா (சாமி .....)

3. இருமுடி சுமக்கும் சாமிகளே உங்கள்
திருவடி பணிந்தோம் வாழ்த்துங்களே
கருங்காவி உடுத்திய சாமிகளே
உங்கள் கண்கள் மகர ஜோதிகளே
(சாமி .....)

4. சரணம்ஒலிக்கும் சாமிகளே உங்கள்
திருவடி பணிந்தோம் வாழ்த்துங்களே
கருங் காவி உடுத்திய சாமிகளே
உங்கள் கடவுளின் சொந்தம் நீங்களே
(சாமி .....)

5. மாலை கொடுத்தவர் குருசாமி அதை
மகிழ்வுடன் அணிபவர் கன்னிச்சாமி
அணிபவர் வாழ்வில் துணையாகும்
ஸ்ரீ ஐயப்பன் தானே நம் தெய்வம்
(சாமி .....)

6. பணிந்தோம் பணிந்தோம் குரு பாதம்
குருவே துணையென பணிந்தோமே
சரணம் சரணம் என்று சொல்லி
சாமியே உம்மைச் சரணடைந்தோம்

## மகரஜோதி காணப்றோம்

1. சன்னதியில் கட்டும்கட்டி தன்னானேனானே நாங்க
சபரிமலை பயணமுங்கோ தில்லாலே லேலோ
கார்த்திகையில் மாலை போட்டு தன்னானேனானே நாங்க
கடும் பயணம் போறோமுங்கோ தில்லாலோ லேலோ

2. மார்கழியில் கட்டும் கட்டி தன்னானேனானே நாங்க
மணிகண்டனைப் பார்க்கப்போறோம் தில்லாலே லேலோ
எருமேலி பேட்டை துள்ளி தன்னானேனானே நாங்க
ஏறிடுவோம் சபரிமலை தில்லாலேலேலேலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பேரூர்த்தோட்டில் பொரிபோட்டு தன்னாேனனானே நாங்க
பெருவழியே சென்றிடுவோம் தில்லாலே லேலோ
காளைகட்டி கடந்து நாமும் தன்னானேனானே நாங்க
களைப்பாறிச் செல்வோமே தில்லாலே லேலோ
4. அழுதையில் ஸ்நானம் செய்து தன்னானேனானே நாங்க
அன்னதானம் பண்ணிடுவோம் தில்லாலே லேலோ
கரிமலையைக் கடந்து நாமும் தன்னானேனானே நாங்க
ஹரிகரனைக் காணப்போவோம் தில்லாலே லேலோ
5. பம்பையில் குளிச்சுப்புட்டு தன்னானேனானே நாங்க
பாவங்களைத் தீர்க்கப் போறோம் தில்லாலே லேலோ
நீலிமலை ஏறிநாமும் தன்னானேனானே நாங்க
நின்று ஆறிப்போவோமே தில்லாலே லேலோ
6.அப்பாச்சி மேடு தாண்டி தன்னானேனானே நாங்க
இப்பாச்சிக் குழி அடைவோம் தில்லாலே லேலோ
சபரிபீடம் தாண்டி நாமும் தன்னானேனானே நாங்க
சரங்குத்தயில் சரம் இடுவோம் தில்லாலே லேலோ
7. பதினெட்டாம் படியேறி தன்னானேனானே நாங்க
பகவானைக் கண்டிடுவோம் தில்லாலே லேலோ
மலையாம் மலை கடந்து தன்னானேனானே நாங்க
மகர ஜோதி காணப்போறோம் தில்லாலே லேலோ

## நெஞ்சங்கள் மகிழ பந்தளம் தந்திட்ட நேசன்

பந்தளம் தந்திட்ட நேசனையா – என்றும்
பக்தர்கள் உள்ளத்தில் வாசனய்யா
விந்தைகள் செய்திடும் பிள்ளையப்பா – அவன்
செந்திலாதிபனின் தம்பியப்பா – அவன் (பந்தளம்)

தேவாதி தேவரும் கூடி வந்து – எங்கள்
தேவன் ஐயப்பனை நாடி வந்து
தேவர்கள் யாவரும் பாடி வந்து – எங்கள்
தேவனாம் ஐயனை வாழ்த்துகின்றார் (பந்தளம்)

முத்தொழில் நாதரும் ஓடிவந்து – எங்கள்
முத்தான பிள்ளையைக் காணவந்து
தத்துவங்கள் பதினெட்டுப் படிகளில்
சத்தியபாலனைக் கண்டு சென்றார் (பந்தளம்)

எட்டு திசைகளும் கூடி வந்து ஐயன்
கூட்டம் இருமுடி தாங்கி வந்து
திட்டமிட்டபடி பம்பை நதி வந்து
கூட்டமாகப் பூஜை செய்திடுவார் (பந்தளம்)
கற்பகதருவும் நாடி வந்து எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூர நாதனைக் காண வந்து
அற்புதங்கள் பல செய்தவராம் அவன்
பொற்பாதம் கண்டு பணிவோமையா (பந்தளம்)

ஜாதியும் பேதமும் இல்லையப்பா – எங்கள்
ஜோதி வடிவான பிள்ளையிடம்
பாதிப்பிறை தொழும் வாவர் அங்கு – அந்த
பள்ளியும் பக்கத்தில் பாருங்கய்யா (பந்தளம்)

வையகம் போற்றிடும் ஐயனைக் கண்டதும்
ஐயங்கள் யாவும் மறையுதய்யா
நெய்யில் குளித்திடும் ஐயனைக் கண்டதும்
நெஞ்சங்கள் யாவும் மகிழுதய்யா (பந்தளம்)

## உன் சன்னதி ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா உன் சன்னதி வரணும் ஐயப்பா
மாலை அணிந்து விரதமும் இருந்து நெய்த் தேங்காய் எடுத்து வந்தோம்
எருமேலி நாங்கள் வந்தடைந்து எங்கள் அகமும் குளிரவே மனமகிழ்ந்து
பேட்டை துள்ளி ஆடிப்பாடி வாபரை நாங்கள் தொழுது சென்றோம்
அந்த வாபரை நாங்கள் தொழுது சென்றோம், (சரணம்.....)
பேரூர்த்தோட்டில் பொரி போட்டு பெரும் பாதை நடைபோட்டு
காளைகட்டி கடந்து வந்து அழுதா நதியில்கல் எடுத்தோம்,
அந்த அழுதா நதியில் கல் எடுத்தோம் (சரணம் ....)

அழுத மேடு ஏறிச்சென்று இஞ்சிப்பாரைக் கோட்டை சென்று
கல்லிடும் குன்றில் கல் இட்டு கரிமலை நாங்கள் வந்தடைந்தோம்
அந்த கரிமலை நாதரைக் கும்பிட்டோம் (சரணம் ....)
பம்பை நதியில் நீராடி சாமி பம்பா விளக்கை ஏற்றிவிட்டு
நீலிமலையில் ஏறிவந்து சபரி பீடத்தில் தேங்காய் உடைத்து
அந்த சரம்குத்தி தன்னில் சரம் இட்டோம் (சரணம் ....)
சரணம் சரணம் என்றே சொல்லி பதினெட்டுபடியை கடந்து வந்தோம்
மெய்யப்பனே பார்த்ததுமே ஐயப்பா எம் கர்வம் எல்லாம் கரைந்துவே ஐயப்பா
உன் உருவத்தைப் பார்த்ததும் மெய்யப்பனே (சரணம் ....)
நெய் முத்திரைத் தேங்காய் அபிஷேகம் செய்தே நாங்கள்
பேரானந்தம் கொண்டோம் ஐயப்பா (சரணம் ஐயப்பா ....)

## நிலாவில் ஒளிவீசும்

1. நீல வானில் ஒளி வீசும் ஐயப்பா
மகரஜோதி தெரியுதப்பா – இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும்
நாமம் சரணம் ஐயப்பா (நிலா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மலைகள் கடந்து வந்தோம் ஐயப்பா
மனமிரங்கி வருவாய் ஐயப்பா
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ ஐயப்பா (நிலா)

3. வனங்கள் கடந்து வந்தோம் ஐயப்பா
எமக்கோர் மார்க்கம் அருளப்பா
இருளை அகற்றியே ஐயப்பா
இன்னருள் தருவாய் ஐயப்பா (நிலா)

4. நியமம் ஒன்றறியேன் நின்னடியார்
நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா
கருணை புரியாயோ ஐயப்பா (நிலா)

5. மதுராபுரி வதனா ஐயப்பா
மதன மோகன ஐயப்பா - வணங்கும்
குறுமுனிவன் நன் மொழியால்
மகிழும் சிவமணியே குருமணியே
(நிலா)

## ஐயம் அகற்ற கானகத்தில் வாழுகின்றான் ஐயப்பன்

கானகத்தில் வாழுகின்ற ஐயனப்பா - சபரி
காடு மலை கடந்து வரச் சொன்னானப்பா
ஞான மொழி பேசுகின்ற பாலனப்பா - எங்கும்
கானமழை பொழிகின்ற சீலனப்பா (கானகத்தில்)

காவியத்தில் பம்பை புகழ் பாலனப்பா - நல்ல
ஓவியத்தில் காந்தமலை ஜோதியப்பா
மானிலத்தை ஆளவந்த மன்னனப்பா - கண்ணன்
மாயவனார் பெற்றெடுத்த மைந்தனப்பா (கானகத்தில்)

அம்பும் வில்லும் ஏந்தி வரும் வீரனப்பா - எங்கும்
அமரர் குலம் காக்க வரும் மெய்யனப்பா
ஐம்புலனை அடக்கி ஆளும் ஐயனப்பா - எங்கள்
ஐயம் எல்லாம் தீர்த்திடவே வந்தானப்பா (கானகத்தில்)

## கண்கண்ட தெய்வத்துக்கு தாலாட்டுப் பாட வாருங்கள்

தாலாட்டுப் பாடவா தாளம் பல போடவா
கோலாட்டம் அடிக்கவா கும்பி பல கொட்டவா

1. அச்சங் கோவில் அரசனாம்
அச்சம் தீர்க்கும் தெய்வமாம்
ஆரியங்காவு ஐயனாம்
ஆதரிக்கும் தெய்வமாம் (தாலாட்டு)
வாருங்கள் வாருங்கள் சாமிகளே
ஐயன் தாலாட்டு பாட வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே
தாலாட்டுப் பாடுங்களே (தாலாட்டு)

2. குளத்தூரின் பாலகனாம்
குறைகளைத் தீர்ப்பவனாம்
எருமேலி நாதனாம்
எங்கள் குல தெய்வமாம் (தாலாட்டு)

3. வாபர் சுவாமி தோழனாம்
வன்புலி வாகனனாம்
காளை கட்டி நாதனாம்
காத்தருளும் தெய்வமாம்

4. அழுதை மலை ஏற்றமாம்
அழுதை மலை இறக்கமாம்
சபரிமலை ஏற்றமாம்
சபரிமலை இறக்கமாம்

5. பம்பையில் ஜோதியாம்
பந்தள ராஜனாம்
நீலிமலை ஏற்றமாம்
நித்திய பிரம்மச்சாரியாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.சின்ன கருப்ப சாமியாம்
பெரிய கருப்ப சாமியாம்
பதினெட்டாம் படி பாலகனாம்
பக்தர் குறை தீர்ப்பவனாம்
7. நெய்யபிஷேகப் பிரியனாம்
நீல வஸ்திர தாரியாம்
மாளிகை புரத்து அம்மையாம்
மஞ்சள் மாதா தேவியாம்
8. காந்தமலை ஜோதியாம்
காத்தருளும் தெய்வமாம்
கருணாகர மூர்த்தியாம்
கண்கண்ட தெய்வமாம்

## மலையாள நாட்டுக்குள்ளே சமத்துவம் காண்போம்

மலையாள நாட்டுக்குள்ளே மலைசூழும் காட்டுக்குள்ளே
குதிரையின் குழம்படி ஓசைதானுங்கோ ஓஓஓ கேளுங்கோ ஓஓஓ
முகமூடி கொள்ளைக்காரன் கொடுவாளு மீசைக்காரன் கேளுங்க
பேருங்க வாபார்தானுங்கோ ஓஓ கேளுங்கோ ஓஓ

அவன் அரபு நாட்டு மரபில் வந்த மாபெரும் வீரனுங்கோ
ஓஓ கேளுங்கோ ஓஓ
எங்க ஹரிஹரசுதனின் முன்னே வந்து கொஞ்சம்
நில்லுங்கோ ஓஓ கேளுங்கோ ஓஓ
சபரீசன் நாட்டுக்குள்ளே சாஸ்தாவின் காட்டுக்குள்ளே
குதிரையின் குழம்படி ஓசைதானுங்கோ ஓஓ
வில்லேந்தி வீரன் வந்தாரு ஓஓ ஓஓஓ ஓஓ ஓஓ
வீரமணிகண்டன் என்றாரு ஓஓ ஓஓஓ
காடெல்லாம் தேடிவந்தாரு ஓஓ ஓஓஓ ஓஓ ஓஓ
காணாமல் கோபம் கொண்டாரு ஓஓ ஓஓ
வாளுடன் வந்த வாபரைக் கண்டு வாவா போரிட என்றாரு
வில்லு அம்புடன் வெற்றித் திருமகன் எதிரே வந்து நின்றாரு
இருமாமலை மோதிடும் மாபெருங் காட்சியை
கண்டவர் யாருங்கோ ஓஓ ஓஓ ஓஓ
அந்தக் காட்சியின் முடிவில் மாட்சிமை தங்கிய
நட்பினைப் பாருங்கோ ஓஓ ஓஓ ஓஓ

(மலையாள நாட்டுக்குள்ளே)

உறவுக்கு கைகள் தந்தாரு ஓஓ ஓஓஓ ஓஓ
உரிமைக்கு உள்ளம் தந்தாரு ஓஓ ஓஓஓ
தோளுக்கு துணைவா என்றாரு ஓஓ ஓஓஓ ஓஓ
தோழமை நீதான் என்றாரு ஓஓ ஓஓஓ
மார்க்கம் ஒன்று மதங்கள் வேறு மனிதன் ஒன்றே என்றாரு
இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம் எல்லாம் சகோதரர் இங்கே என்றாரு
உடல் கெட்டதும் மண்ணில் போவது என்பதில் மாறுதல் இல்லைங்கோ
அட சந்தனம் பூக்கும் சத்தியக் காட்டில் சமத்துவம் பாருங்க

(மலையாள நாட்டுக்குள்ளே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒண்ணாம் மலை ஏறிடும்

ஒண்ணாம் மலை ஏறிடும் கன்னி சாமிமார்களே
நீங்கள் எல்லாம் சபரியின் மணிகண்டன் அவன்ரூபமே
பொய் சொல்லக்கூடாது படியெண்ணக் கூடாது
சபரிமலை ஏறப்போகும் கன்னி சாமியே
உன் சத்தியத்தின் பாதையினை தவறவிடாதே
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
நாற்பது நாள் நோன்பிலே நீ இரண்டு வேளை குளிக்கணும்
கறுப்பு, நீல ஆடையோடு மேலே துண்டு இருக்கணும்
மார்கழி மாதத்திலே கடும்குளிர் வீசிடும்
இருந்தாலும் வெறும் தரையில் மேலே படுக்கணும்
உன் கனவில் கூட ஐயப்பன் பூசை நடக்கணும்
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
ஐயா கன்னிசாமியே நீ கவனமாக இருக்கணும்
மயக்கும் மது, மாதினை நீ அடியோடு மறக்கணும்
சோதனையாகவே தடை பல சூழ்ந்திடும்
விரதத்திலே கொஞ்சம் கூடத் தவறக்கூடாது
நீ தவறிவிட்டால் புண்ணியமோ கணக்கில் வராது
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
இருமுடியைக் கட்டணும் பெற்றவரை வணங்கணும்
குருசாமி துணையிலே சபரிநோக்கி நடக்கனும்
பிரார்த்தனை ஒன்றுதான் மனதில் இருக்கணும்
இருமுடியை நீயாக இறக்கக் கூடாது
நம்குருசாமி அவரை விட்டு பிரியக்கூடாது
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா //

## அரியும் அரனும்

அரியும் அரனும் சங்கமித்து செல்வனாம்
ஆதிபராசக்தி மகிழ் மைந்தனாம் அவன்
இணையில்லாத தெய்வமகன் இன்பமளிப்பவன்
ஈடில்லாத சபரிமலை வாழும் எங்கள் ஐயப்பன்
உள்ளமெனும் கோவிலிலே வாழ்பவன் அவன்
எருமேலிதனில் வாழும் எங்கள் ஈஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் வேலவனின் அருமை சோதரன் எங்கள் ஐயப்பன்
ஐங்கரனின் தம்பியவன் எங்கள் ஐயப்பன்
ஐந்து மலைக்கரசன் அவன் எங்கள் ஐயப்பன்
ஓம்காரப் பொருளென்னும் வேதநாயகன் எங்கள் ஐயப்பன்
ஔவைக்கு அருள் புரிந்த முருக சோதரன்
அம்பும் வில்லும் கையிலேந்தும் அழகு பாலகன் எங்கள் ஐயப்பன்

## பொன்னூஞ்சல் ஆடுகின்றார்

பொன்னூஞ்சல் ஆடுகிறார் – ஐயப்பன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார் (பொன்னூஞ்சல்)

அரிஹர சுதனாக ஆனந்த மூர்த்தியாக
அடியாரைக் காக்க வேண்டி (பொன்னூஞ்சல்)
பம்பைநதி பாலகனாக பார்புகழும் சீலனாக
பந்தள நாட்டில் வந்து (பொன்னூஞ்சல்)
வில்லாளி வீரனாக வீரமணி கண்டனாக
வேங்கை மீது அமர்ந்த தேவன் (பொன்னூஞ்சல்)

எரிமேலி சாஸ்தாவாக எல்லாம் வல்ல தீரனாக
எங்கள் குலதெய்வம் ஐயன் (பொன்னூஞ்சல்)

வாபரின் தோழனாக வல்லமை தேவனாக
வரம் யாவும் தந்த ஐயன் (பொன்னூஞ்சல்)

ஐந்து மலை அரசனாக ஆரியங்காவு ஈசனாக
அவனி போற்றும் தேவன் வந்து (பொன்னூஞ்சல்)

மணிகண்ட தெய்வமாக மஞ்சமாதா நேசனாக
மகிமையுள்ள தேவன் வந்து (பொன்னூஞ்சல்)

## கண் திறந்து பாரய்யா

கண் திறந்து பாரப்பா கவலைகளைத் தீரப்பா ஐயப்பா
காவினிலே கிடைத்தவனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
கஜமுக சோதரனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
கந்தனுக் கிளையவனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
கலியுக விரதனே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
கனதவ விரதனே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
காந்தமலை நாதனே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
காருண்ய மூர்த்தியே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனத்திலிருப்பவனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
தனித்து இருப்பவனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
தவக்கோலம் கொண்டவனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
சங்கட நாசனனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
சபகிரீசனே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
சஞ்சலம் தீர்ப்பவனே கண் திறந்து பாரப்பா ஐயப்பா
அன்புள்ள அப்பனே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
அழகான தெய்வமே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
அம்பிகையின் மகனே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா
ஆதரிக்கும் தெய்வமே நீ கண் திறந்து பாரப்பா ஐயப்பா

## ஶ்ரீதர்ம சாஸ்தாபாஹிமாம்

ஶ்ரீதர்ம சாஸ்தா பாஹிமாம்
ஶ்ரீ சபரிகிரீசா பாஹிமாம்
மாமாலை வாசா பாஹிமாம்
ஶ்ரீ மணிகண்ட தேவனே பாஹிமாம் (ஶ்ரீதர்ம)

மோஹினி சுதனே மோஹனரூபா பாஹிமாம்
மோகா மதச்சுதா பாலனே பாஹிமாம்
மண்டல காலமிது வந்தல்லோ பாஹிமாம்
மணிமாலையும் கழுத்தில் போட்டல்லோ பாஹிமாம்

சாமி அப்பா ஐயப்பா

தேகபலந்தா பாதபலந்தா பாஹிமாம்
பாதபலந்தா தேகபலந்தா பாஹிமாம்
ஏற்றி விடய்யா தூக்கி விடய்யா பாஹிமாம்
தூக்கி விடய்யா ஏற்றி விடய்யா பாஹிமாம்
சுவாமி மாரே ஐயப்பன் மாரே பாஹிமாம்
ஐயப்பன்மாரே சுவாமிமாரே பாஹிமாம்
சுவாமி ஐயப்போ
ஐயப்போ சுவாமியே (மண்டல காலமிது)

மாசுமனம் அழிஞ்சுபோகவல்லோ பாஹிமாம்
என்னைக் காத்திடும் சுவாமி ஐயப்பா பாஹிமாம் (ஶ்ரீ தர்மசாஸ்தர)

பம்பையில் பிறந்தும் பந்தளத்தில் வளர்ந்தும் பாஹிமாம்
சபரிபீடந்தன்னில் குடிகொண்டு .....(பம்மையயில்) பாஹிமாம்

நின் சுய ரூபத்தை கண்டு கூத்தாடுவேன் பாஹிமாம்
மலையாக நடந்துதான் வந்தல்லோ பாஹிமாம்
மணி பீடத்தில் வாழும் ஐயனே பாஹிமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைக் காத்திடும் சுவாமி ஐயப்போ பாஹிமாம்
எங்கள் குரு சாமியே ஐயப்போ சாமியே ஐயப்போ (குருபீடத்தில்)
(ஸ்ரீ தர்மசாஸ்தர பாஹிமாம்)

## மோட்சம் பெறல்

1. கன்னிமலை, பொன்னிமலை, புண்ணியமலை, சபரிமலை
மணிகண்டன் வாழும் மலை பல நாட்டு பக்தர் கூடும் மலை
பல கோடியால் சரணங்கள் முழங்கும் மலை
(என் ஐயா)

2. கௌரீசன் தன்மகனாம் கலிகால தெய்வமவன்
பம்பா நதிக்கரையில் பிறந்தானே ஐயனவன்
வேட்டையாடும் மன்னன் அவன்
காட்டினிலே சென்றநேரம் – கண்டெடுத்து ஐயனை வளர்த்தனனே

3. என் ஐயா பொன் ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் சாமியே

4. வில்லாளி வீரனாகி வீரமணி கண்டனாகி
புலிவாகனனாகி சுவாமி மகிஷி மார்த்தனனாகி
எழுமலை தாண்டி ஐயன் சபரிமலை மேல் அமர்ந்தான்
சாமி அவனைப் போற்றியே நலம் பெறுவோம் ......
(என் ஐயா)

5. கன்னிக்கட்டு நிறைவு செய்தவர்
சபரிமலை நீலிமலை கடந்து வருபவர்
பதினெட்டாம்படி ஏறி வருபவர் சாமி சரணம் முழங்குபவர்
சரணம் முழங்கி ஆடிபாடி வருபவர் வருபவர்
மோட்சம் பெற மூத்திபெற பாட்டுப் பாடி வருபவர்
(என் ஐயா)

ஸ்வாமியே சரணம் ஐயப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பை நதிக்கரையில்

பம்பை நதி கரையினிலே அந்தி வரும் நேரத்திலே
சின்னஞ்சிறு குழந்தை ஒன்று கழுத்தில் மணிமாலையோடு – பூப்போல
சின்னஞ்சிறு விரலசைத்து விழியுருட்டிப் பார்த்ததே
இந்த உலகத்தையே அழகாக்கி வைத்ததே
யாரும் இல்லையே அருகில் தாயுமில்லையே
தேவனைக் காக்க யாரும் தேவையுமில்லையே

தாயவளும் பாற்கடலில் உருமாறி நின்றாளோ
தந்தையவன் தெருக் கூத்தில் உலகாளச் சென்றாளே
ஆதரவு யாருமின்றி எனை போல நின்றாயோ
கொடும்பனிக் காட்டுக்குள்ளே தனியாக வந்தாயோ
கங்கை வந்து நீராட்ட நந்தவனம் பூப்பூக்க ஆலவிழு துஞ்சலிலே
தொட்டில் கட்டி குயில்பாட பசியுமின்றி பயமுமின்றி
துயில்பவனே எம் மன்னவனே கண்மணியே தாலேலோ
யாருமில்லையே அருகில் தாயுமில்லையே
தேவனைக் காக்க யாரும் தேவையுமில்லையே (யாரும் இல்லை....)

பந்தளத்து மன்னவனும் கனவோடு வந்தானே
ஏழு ஜென்மம் தவம் செய்து உனைக் கண்டு கொண்டானோ
பந்தளத்து மன்னவனும் கனவோடு வந்தானே
ஏழு ஜென்மம் தவம் செய்து உனைக் கண்டு கொண்டானோ
நானும் தினம் ஏங்குகிறேன் என் வீடு வாராயோ
போதும் உந்தன் பிறவி என்று எனையாள மாட்டாயோ
பம்பை நதிக் கரையோரமெல்லாம் நித்தம் கொண்டு தேடுகின்றேன்
உனைக் கொஞ்சி ஆதரவாய் முத்தம் தர ஏங்குகிறேன்
கலிகாலம் கரை சேர வந்தவனே தாலேலோ
எனைக் கொள்ளையிடும் நல்லழகே சாலேலோ
யாருமில்லையே அருகில் தாயுமில்லையே
தேவனைக் காக்க யாரும் தேவையில்லையே (பம்பை நதிக் கரை..)

## தட்சிணாமூர்த்தி காயத்திரி மந்திரம்

ஓம் தட்சிணாமூர்த்தியே வித்மஹே
த்யானஸ் தாய தீமஹி
தன்னோ தீச ப்ரசோதயாத்

## ஸ்ரீ சண்டேஸ்வரர் காயத்திரி மந்திரம்

ஓம் சண்ட சண்டாய வித்மஹே
சண்டேஸ்வராய தீமஹி
தன்னோ சண்ட ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐயா ஆஞ்சநேயா

ஐயா ஆஞ்சநேயா
என்னை ஆதரிப்பாரில்லையையா
கையா உந்தன் கையா
என்னைக் காப்பது உன்னிரு கையா (ஐயா)

ஊருக்குள் எனக்கொரு பேர் கொடுத்தாய் - நல்ல
உத்தமனாகவே வாழ வைத்தாய்
நித்தம் என் பாட்டில் குடியிருந்தாய் - ஏழை
நெஞ்சினில் மட்டும் ஏன் தீ வளர்த்தாய் (ஐயா)

நான் சிரித்தால் பெற்ற தாய் சிரிப்பாள் - நொந்து
நான் அழுதால் அன்புத்தாய் அணைப்பாள்
தாய் அடித்தால் என்னை நீ அணைப்பாய் - என்னை
நீ அடித்தால் மண்ணில யார் அணைப்பர் (ஐயா)

சத்தியம் என்பது சோதனையா - நல்ல
பக்தருக் கென்னாளும் வேதனையா
கண்கொண்டு என்நிலை பாருமய்யா - நல்ல
காவலின் தெய்வமே ஆஞ்சநேயா (ஐயா)

மண்டியிட்டேன் உந்தன் காலடியில் - நான்
மாலையிட்டேன் பொங்கும் கண்ணீரில்
வேறென்ன பாவங்கள் நான் புரிந்தேன் - இன்று
வேரறுந்த கொடியாய் விழுந்தேன் (ஐயா)

## அஞ்சனை திருக்குமரா

அஞ்சனை திருக்குமரா வாருமய்யா
பிஞ்சுக் குழந்தை முகம் பாருமய்யா
உன்னடி சரணடைந்தோம் ஆஞ்சநேயா
பச்சைப் பசுந்தளிரைக் காருமய்யா (அஞ்சனை)
சௌகந்திகா மலரை தேடி உன் தம்பி சென்றான்
சௌந்தர்யன் உன் அழகு வாலிடம் தோற்று நின்றான்
தோற்ற உன் சோதரனை தேற்றிய ஆஞ்சநேயா
மார்புடன் சேர்த்தணைத்து வாழ்த்திய கைகளய்யா
உன்னிரு கைகளினால் பிள்ளையை ஏத்திடய்யா
பெற்றவள் கண் வழியும் நீரினை மாற்றிடய்யா (அஞ்சனை)

யார் செய்த பாவமிது பூந்தளிராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனிந்தக் கோலமென்று சொல்லிடு நீ முடிவாய்
உந்தனின் சக்தி எல்லாம் நித்தமும் நாமறிந்தோம்
எங்களின் உயிரினையே உன்னிடம் நாம் கொடுத்தோம்
வஜ்ஜிர வாலுடனே வந்திடு ஆஞ்சநேயா
கெஞ்சிடும் எம் குலத்தை காத்திடு ஆஞ்சநேயா (அஞ்சனை)

நல்லிரு விழிகள் தந்து நல்லருள் காட்டுமய்யா
இருவிழி ஒளி பெறவே உன் விழி மலர்ந்திடய்யா
கண்களின் நீர் சுமந்து உன்னடி போற்றுகின்றோம்
பொன்னடி பாதத்திலே பூஜைகள் நாம் புரிந்தோம்
கற்புடை காவலனே காற்றென வாருமய்யா
பூங்கொடி பூத்திடவே பூமழை தூவிடய்யா (அஞ்சனை)

## ராமஜெயம் ஸ்ரீ ராமஜெயம்

ராமஜெயம் ஸ்ரீராமஜெயம் ஸ்ரீராமஜெயம் ஸ்ரீராமஜெயம்
ஏது பயம் இனி ஏது பயம் ஸ்ரீராமஜெயம் சொல்ல ஏது பயம்
காவல் தரும் ஸ்ரீராமஜெயம் அந்த மாருதிக்கு சொல்லு ராமஜெயம்
ஏது பயம் இனி ஏது பயம் ஸ்ரீராமஜெயம் சொல்ல ஏது பயம்
(ராமஜெயம்)

துன்பமெல்லாம் அவன் வேரறுப்பான் – துணை
தோள் கொடுத்தே உனை தாங்கிடுவான்
காற்று மழை புயல் யாவினிலும் – உயிர்
காவலென நின்று காத்திடுவான் (ராமஜெயம்)

வெற்றிலையால் ஒரு மாலை கட்டி – குளிர்
வெண்ணையினால் அவர் மார்பைத் தொட்டு
பூஜை செய்தால் வரும் புண்ணியமே – நீ
காத்திருப்பாய் என்றும் கண்ணியமே (ராமஜெயம்)

கொடுப்பதிலே அவன் வள்ளலம்மா – ராமன்
குடியிருக்கும் திருக் கோயிலம்மா
தங்கமம்மா அவன் தங்கமம்மா – மனத்
தைரியமே தரும் கோலமம்மா (ராமஜெயம்)

அஞ்சனையின் தவப் புத்திரனாம் – அந்த
ஆதி சிவன் கனியானவனாம்
வீசி வரும் குளிர் சந்திரனாம் – தமிழ்
காண்டத்திலே அவன் சுந்தரனாம் (ராமஜெயம்)
வாயுவென வரும் தெய்வமடி – அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் மழையே தரும் மேகமடி
மஞ்சள் நிறம் அவன் கண்களடி – அந்த
மாதவ ராமனின் தூதனடி (ராமஜெயம்)

சந்தனமே அவன் வாசனையாம் – ராம
நாமமொன்றே அவன் யோசனையாம்
வெற்றிகளே அவன் வேதங்களாம்
சித்தி தரும் திருப்பாதங்களாம் (ராமஜெயம்)

பஞ்சமும் தனைப் பார்த்திருப்போம் – அவன்
பாதம் சரண் என வாழ்ந்திருப்போம்
தீமைகளை அது தீயிலிடும் – நல்ல
தேன் சுவையாய் மண்ணில் வாழ்வு தரும் (ராமஜெயம்)

வாலிருக்கும் மணி தானிருக்கும் – அவன்
பேருரைத்தால் பிணியே பறக்கும்
ஆழ்கடலும் அவன் ஏவல் செய்யும் – அந்த
ஏழுலகும் அவன் பேர் புகழும் (ராமஜெயம்)

## ராமதூதனே

ராம தூதனே ராம தூதனே — ராம ராம ராம் ராம்
உன்னைக் காணவே உள்ளம் ஏங்குதே — ராம ராம ராம் ராம்
சித்தம் யாவிலும் நித்தம் வாழுதே — ராம ராம ராம் ராம்
வெள்ளம் போலவே உள்ளம் பொங்குதே — ராம ராம ராம் ராம்
(ராம)

பெற்ற அன்னைக்கும் பெரிய பாரமாய் — ராம ராம ராம் ராம்
வாழலாகினேன் வாடலாகினேன் — ராம ராம ராம் ராம்
கொட்டும் மழையிலும் கோடைப் பனியிலும் — ராம ராம ராம் ராம்
உந்தன் கோயிலே தஞ்சமாகினேன் — ராம ராம ராம் ராம்
எங்கும் உன்னையே எதிலும் உன்னையே — ராம ராம ராம் ராம்
கண்டு கொண்ட பின் மனிதனாகினேன் — ராம ராம ராம் ராம்
(ராம)

அன்னை தந்தை நீ ஆக்கும் தெய்வம் நீ — ராம ராம ராம் ராம்
வெண்ணெய் சாற்றியே உன்னைப் பாடினேன் — ராம ராம ராம் ராம்
பொய்யை நீக்கினேன் மெய்யைப் போற்றினேன் — ராம ராம ராம் ராம்
ஐயன் உன்னருள் ஐயம் நீங்கினேன் — ராம ராம ராம் ராம்
நல்லிராவிலும் ஞானதீபமே — ராம ராம ராம் ராம்
வாயு தேவனே ஆஞ்சநேயனே — ராம ராம ராம் ராம்
(ராம)

நோயுமின்றியே நொடியுமின்றியே — ராம ராம ராம் ராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சுவாமியை காக்க வேண்டும் ராம ராம ராம் ராம்
உந்தன் பக்தனை உண்மை தொண்டனை ராம ராம ராம் ராம்
காக்க வேண்டும் காவல் தெய்வமே ராம ராம ராம் ராம்
(ராம)

## ராமராம ஜெயம் ராமராம ஜெயம்

ராம ராம ஜெயம் ராம ராம ஜெயம்
ராம ராம ஜெயமே
ராம ராம ஜெயம் ராம ராம ஜெயம்
ராம ராம ஜெயமே
ராம ராமன் புகழ் பாடப்பாட அவன்
நெஞ்சம் இனித்திடுமே
கேட்க கேட்க அந்த ராமதூதன் மனம்
நெய்யாய் உருகிடுமே (ராம ராம)

சேவை சேவை என்று ராம சேவை என்று
சேவை செய்து மகிழ்வான்
காலை மாலை என்று வேளை ஏதுமின்றி
நாமம் பாடி வருவான்
மாடி ஏழை என்று வேளை ஏதுமின்றி
உண்மை அன்பில் குளிர்வான்
போற்றி போற்றி அவன் பாதம் போற்றி நில்லு
உன்னை ஏற்று அருள்வான் (ராம ராம)

பற்றி பற்றி அவன் வேதம் பற்றி செல்ல
வெற்றி மாலை தருவான்
சக்தி சக்தி உடல் சக்தி யாவும் அவன்
பக்தியோடு அருள்வான்
சாட்சி சாட்சி மன சாட்சியோடு நட
சாட்சியாகி தெரிவான்
மீட்சி மீட்சி துன்ப மீட்சி யாவும் தந்து
சாட்சியாக இருப்பான் (ராம் ராம

## பொன்னொடு பொருள்

பொன்னொடு பொருள் கேட்கவில்லை – என்னை
உன்னோடு ஏன் சேர்க்கவில்லை
மண்ணோடு தினம் வாடும் முல்லை – இன்னும்
என் வாசல் ஏன் சோரவில்லை (பொன்னோடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்தூவி துதித்தேனே திருப்பாதமே – அதில்
மறைந்தோடி குறையாதோ இவள் பாவமே
மகனாடும் வரம் வேண்டும் மடி மீதிலே – இவள்
மன வீணை சுரம் பாடும் புவி மீதிலே
எழிலான பூவை சருகாகி வாட
விழி மீதில் நீரும் நதியாகி பாய
வழி ஒன்று நீ கூறவா – ஐயனே
பழி கூறும் ஊரல்லவா (பொன்னோடு)

திருமாலின் திருக்கோயில் தனின் சந்நிதி
தொழுகின்ற அடியார்க்கு மன நிம்மதி
தரும் பக்த ஹனுமானுன் நிழல் தேடினேன் – என்னை
கரை சேர்த்து துயர்நீக்க அருள் வேண்டினேன்
குயிலான போதும் கூவாமல் போனால்
அதைக் காகமாக நினைக்கின்ற பூமி
உனை ஈன்ற தாயாகவே – என்னை நீ
வினை நீக்கி சீராட்டய்யா (பொன்னோடு)

## கண்டேனய்யா கண்டேனய்யா

கண்டேனய்யா கண்டேனய்யா சஞ்சீவி மலையை – ஐயன்
கரங்களிலே சுமந்து வரும் சஞ்சீவி மலையை
தீர்ந்ததைய்யா தீர்ந்ததையா நோய் கொண்ட கொடுமை சுகம்
கிடைத்ததய்யா மலர்ந்ததய்யா என் வாழ்வின் நிலைமை
(கண்டேனய்யா)

தெட்டேனய்யா தெட்டேனய்யா மணி கொண்டவாலை – நவக்
கிரகங்களை சுமந்து நிற்கும் மணி கொண்ட வாலை
தொலைந்ததய்யா தொலைந்ததய்யா கிரகத்தின் பார்வை – சனி
தோஷமெல்லாம் தொலைந்ததய்யா பொன்னான வேளை
(கண்டேனய்யா)

பார்த்தேனய்யா பார்த்தேனய்யா மாருதி மார்பை – ராமன்
கோயில் கொண்டு குடியிருக்கும் மாருதி மார்பை
குவிந்ததம்மா குவிந்ததம்மா என் கைகள் ரெண்டும் – ஸ்ரீ
ராமஜெயம் ஒலித்ததம்மா என் தேகம் எங்கும் (கண்டேனய்யா)

வீழ்ந்தேனய்யா வீழ்ந்தேனய்யா பொன்னான பாதம் – அந்த
துளசி இலை மார்பழகன் பொன்னான பாதம்
விட்டேனய்யா விட்டேனய்யா கண்ணீரை நானும் – அவன்
காலடியை கழுவி நின்றேன் கண்ணீரில் நானும் (கண்டேனய்யா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டேனய்யா போட்டேனய்யா வெற்றிலை மாலை – சீதை
ஆசியுடன் கிள்ளி தந்த வெற்றிலை மாலை
பெற்றேனய்யா பெற்றேனய்யா வெற்றிலை மாலை – வீர
மாருதியாம் ஆஞ்சநேயன் பக்தியின் லீலை (கண்டேனய்யா)

சொன்னேனய்யா சொன்னேனய்யா ஸ்ரீராம நாமம் – ஜயன்
சொன்ன உடன் வந்து நிற்கும் ஸ்ரீ ராம வேதம்
வந்தானய்யா வந்தானய்யா சஞ்சீவிராஜன் – வந்து
தந்தானய்யா தந்தானய்யா நான் பாட ராகம் (கண்டேனய்யா)

கேட்டேனய்யா கேட்டேனய்யா மாருதி கவசம் – அவன்
மகிமைகளை எடுத்துரைக்கும் மாருதி கவசம்
கொண்டேனய்யா கொண்டேனய்யா பாதத்தில் சரணம் – என்
பாவமெல்லாம் தீர்த்தருளும் மாருதி சரணம் (கண்டேனய்யா)

பணிந்து நின்றான் பணிந்து நின்றான் ராமனின் பாதம் – அதை
பார்த்தீபனாம் ராகவனாம் ரகுபதி பாதம்
பணிந்திடுவோம் பணிந்திடுவோம் மாருதி பாதம் – அவன்
மனமுருகி அளித்திடுவான் வாழ்வினில் ஷேமம் (கண்டேனய்யா)

## ஹரி ஹரி ஹரி ராமராம்

ஹரி ஹரி ஹரி ராம ராம் ஆஞ்சநேய ராமராம்
ஜெய ஜெய ஜெய ராம ராம் ராமநாதன் தூதனானம்
ஹரி ஹரி

அஞ்சாவின் செல்வனாம் ஆழி கடந்த வீரனாம்
ஆயுள் தந்து எம்மையே காக்கும் ஆஞ்சநேயனாம்
ஹரி ஹரி

வடையின் மாலைப் பிரியனாம் தடைகள் நீக்கும் இறைவனாம்
தஞ்சமென்று வந்தவர் நெஞ்சம் வாழும் தெய்வமாம்
ஹரி ஹரி

ராமனுக்குத் தொண்டனாம் பீமனுக்கு அண்ணனாம்
பாண்டவர்க்குத் தோழனாம் போர் ஜெயித்தவீரனாம்
ஹரி ஹரி

தாயென அவன் சீதையின் தாழ் வணங்கும் பக்தனாம்
சேயென அவன் எம்மையே காத்திட வரும் வல்லனாம்
ஹரி ஹரி

வான் கதிரினைத் தீண்டவே வானில் பறந்த பாலனாம்
தேன் கனிகளை உண்ணவே ஆசைகொண்ட தெய்வமாம்
ஹரி ஹரி

வாலில் வைத்த தீயினால் வஞ்சம் தீர்த்து போனவன்
வண்ண லங்கைத் தீவையே நாசம் செய்து நின்றவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரி ஹரி

ராம நாமம் ஒன்றையே வேதமாகக் கொண்டவன்
காவல் காக்கும் தெய்வமாய் வாழும் வாயு புத்திரன்
ஹரி ஹரி

இருளில் ஜோதியானவன் இடரை நீக்கும் காவலன்
இதயம் தன்னில் ராமனை இருத்தி வாழும் சேவகன்
ஹரி ஹரி

மலை சுமந்தவன் தோளிலே மணி இருக்குது வாலிலே
தினம் தொழுதிடும் போதிலே சுகம் மலர்ந்திடும் வாழ்விலே
ஹரி ஹரி

திருவடிதனை போற்றுவோம் திருவருளினைக் காணுவோம்
மறுபிறவியும் ராமனின் தூதுவன் புகழ் பாடுவோம் ஹரி ஹரி

## ஆஞ்சநேய சுவாமி

| | | |
|---|---|---|
| ஆஞ்சநேய சுவாமி | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ஆடிப்பாடி வாருமையா | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| அஞ்சனையின் புத்திரனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ஆதி சிவ ருத்திரனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| மாருதியின் மாருதியே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| மார்கழி மூலம் பிறந்தாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| சூரியனின் மாணவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| சுருதி நெறிப் பூரணனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| பவள மணி நிறமுடையாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| பருதி மணி முடியுடையாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| தவமணி பூணுடையாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| தழுவு குடைக் காதுடையாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| சொல்லின் செல்வன் ஆனவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| தொண்டருக்கு காவலனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| வெல்லும் தண்டுகொண்டவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| வீர வெற்றி கண்டவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| அண்டம் மூடி நின்றவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| அசுர குலம் கொன்றவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| வீர வெற்றி கண்டவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| அண்டம் மூடி நின்றவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| அசுர குலம் கொன்றவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| பண்டிலங்கை எரித்தவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| பரவு கடல் அடைத்தவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| சீதை ராம தூதுவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| கீத ஞான வல்லவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கிரிதூக்கி வந்தவனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| வஞ்சனை நோய் போக்கிடுவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| வறுமை துயர் நீக்கிடுவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| அஞ்சலிலா வாழ்வருள்வாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| கிரக பயம் தீர்த்திடுவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| கேடின்றிக் காத்திடுவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| பரகதிக்கு வழிவிடுவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| பாரினிலே சுகந்தருவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ராமஜெயம் ராமஜெயம் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ராம நாம வாசகனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ராம ஜெயம் ராம ஜெயம் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ராம நாம பூசகனே | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| கல்வி செல்வம் பதி தருவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| கடமை பேணும் மதி தருவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| நல்வழியின் துதி தருவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |
| ஞான யோகக் கதி தருவாய் | ஐயா | ஆஞ்சநேய சுவாமி |

## எங்க கருப்பசாமி

1. எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பசாமி //
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ண சாமி //

அக்கினியில் பிறந்தவராம் அரனாரின் மைந்தனவன்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பசாமி
முன்கொண்டைக்காரன் அவர் முன்கோபக்காரன் அவன்
சந்தனப் பொட்டுக்காரன் சபரிமலைக் காவல்காரன்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ண சாமி //

சடைமுடிக்காரன் அவர் சாமிகளைக் காத்திடுவார்
சல்லடையைக் கட்டிவாரான் சாய்ந்து சாய்ந்து ஆடிவாரான்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ண சாமி //

2. வில்லுப்பாட்டு பாடிவாரான் விதவிதமாய் ஆடிவாரான்
பந்தம் கையில் பிடித்து வாரான் பாரிவேட்டை ஆடிவாரான்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ண சாமி //
அச்சங் கோயில் ஆண்டவர்க்கு எதிராக இருப்பவராம்
பதினெட்டுப் படிகளுக்கு காவலாக இருப்பவராம்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ண சாமி //
கச்சையைக் கட்டிவாரான் கை அரிவாள் காட்டி வாரான்
ஏய் மீசையை முறுக்கிவாரான் முச்சந்தியில் நடந்துவாரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி ||
கற்பூர ஆழிமுன்னே கடவுளாக நின்றிடுவார்
ஏய் கறுப்பு வேட்டி கட்டிக்கிட்டு பாவங்களைப் போக்கிடுவார்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி ||

3. பம்பையிலே குளித்து வாரான் கருப்பசாமி
பாங்காக வாரான் ஐயா கருப்பசாமி
அந்தாவாரான் இந்தாவாரான் கருப்பசாமி
பெரியானை வட்டம் வாரான் கருப்பசாமி
சிறியானை வட்டம் வாரான் கருப்பசாமி
கரிமலையில் ஏறிவாரான் கருப்பசாமி
பகவதியை வணங்கி வாரான் கருப்பசாமி
கரியிலந்தோடு வாரான் கருப்பசாமி
இலவந்தாவளம் கடந்து வாரான் கருப்பசாமி
சாமி முக்குழியை தாண்டி வாரான் கருப்பசாமி
அழுதாமேடு உச்சிவாரான் கருப்பசாமி
சாமி அழுதையிலே குளிச்சு வாரான் கருப்பசாமி
காளைகட்டி தொட்டு வாரான் கருப்பசாமி
சாமி பூங்காவனம் புகுந்து வாரான் கருப்பசாமி
எருமேலி வாரான் ஐயா கருப்பசாமி

4. எடுத்து வைக்கும் கால்களுக்கு சாமந்தி சல்லடையாம்
முன்னே வைக்கும் கால்களுக்கு முல்லைப்பூ சல்லடையாம்
பின்னே வைக்கும் கால்களுக்கு பிச்சுப்பூ சல்லடையாம்
அகலவைக்கும் கால்களுக்கு அலரிப்பூ சல்லடையாம்
துள்ளிவைக்கும் கால்களுக்கு துளசியாலே சல்லடையாம்
வீசிவைக்கும் கால்களுக்கு வில்வத்தாலே சல்லடையாம்
உள்ளே வைக்கும் கால்களுக்கு அறுகம் பூ சல்லடையாம்
உச்சந்தலை காட்டி வாரான் கருப்பசாமி
புலிமாட்ட ராஜா வாரான் கருப்பசாமி
சபரிமலைக் காவல்காரன் கருப்பசாமி

## கருத்தசாமி பூசைப் பாட்டு

எல்லோருக்கும் காவல் காரன் கருத்தசாமி
எண்ணற்ற சட்டநாதா சாமியே
திருமகாலிங்க சுவாமியரே ஐயப்போ
தட்சிணாமூர்த்தி சாமியரே சாமியே
ஏங் சங்கிலி பூதத்தாரே ஐயப்போ
மேல் வாசல் பூதத்தாரே சாமியே
சுடர்மாடன் சாமியாரே ஐயப்போ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவைமாடன் சாமியாரே சாமியே
தூண்டில் மாடன் சாமியாரே ஐயப்போ
பள்ளிமாடன் சாமியாரே சாமியே
எல்லோருக்கும் தாயாக ஐயப்போ
உக்ரகாளித் தாயாரே ஐயப்போ
பேச்சியம்மன் தாயாரே சாமியே
இசக்கியம்மன் தாயாரே ஐயப்போ
வனப்பேச்சி தாயாரே சாமியே
சக்கம்மா தாயாரே ஐயப்போ
வண்டி மடைச்சி தாயாரே சாமியே
கட்டைராஜன் சாமியாரே ஐயப்போ
ஏய் கரடிமாடன் சாமியாரே சாமியே
அகஸ்திய மாமுனியும் ஐயப்போ
அகங்காரமாய் காட்சி தந்தார் சாமியே
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பசாமி

## வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமிசரணம் | ஐயப்பசரணம் |
| ஐயப்பசரணம் | சாமிசரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குன்றும் குழியும் |
| ஏத்திவிடப்பா | தூக்கிவிடப்பா |
| தூக்கிவிடப்பா | ஏத்திவிடப்பா |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| வில்லாளி வீரனே | வீரமணிகண்டனே |
| வீரமணிகண்டனே | வில்லாளி கண்டனே |
| ராஜாதிராஜனே | ராஜகுமாரனே |
| ராஜகுமாரனே | ராஜாதிராஜனே |
| பூலோகநாதனே | பூமிப்பிரபஞ்சனே |
| பூமிப்பிரபஞ்சனே | பூலோகநாதனே |
| யாரைக்காண | சாமியைக் காண |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சாமியைக் கண்டால் | மோட்சம் கிட்டும் |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| தேவன் பாதம் | தேவி பாதம் |
| தேவி சரணம் | தேவி சரணம் |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| பகவான் சரணம் | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| ஈஸ்வரன் பாதம் | ஈஸ்வரிபாதம் |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| வாறார் | ஐயாவாறாரு |
| வாபரோடு | வாறாரு |
| வாறார் | ஐயாவாறாரு |
| பேட்டைத் | துள்ளி வாறாரு |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |
| நெய் அபிஷேகம் | சாமிக்கே |
| சாமிக்கே | நெய் அபிஷேகம் |
| பால் அபிஷேகம் | சாமிக்கே |
| சாமிக்கே | பால் அபிஷேகம் |
| தேன் அபிஷேகம் | சாமிக்கே |
| சாமிக்கே | தேன் அபிஷேகம் |
| கற்பூரதீபம் | சாமிக்கே |
| சாமிக்கே | கற்பூரதீபம |
| மணிகண்டா | ஐயப்பா |
| மாமலை வாசா | ஐயப்பா |
| மோகினிசுதனே | ஐயப்பா |
| மோகனரூபா | ஐயப்பா |
| ஹரிஹரபுத்ரா | ஐயப்பா |
| எங்களைக் காப்பாய் | ஐயப்பா |
| முன்னும் பின்னும் | ஐயப்பா |
| பின்னும் முன்னும் | ஐயப்பா |
| இடமும் வலமும் | ஐயப்பா |
| வலமும் இடமும் | ஐயப்பா |
| ரக்ஷிகனும் | ஐயப்பா |
| காடுமலை கடினம் | ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கடினம் கடினம் | ஐயப்பா |
| பம்பையின் பாலா | ஐயப்பா |
| பந்தள வேந்தா | ஐயப்பா |
| பாவவிநாசா | ஐயப்பா |
| ஜகத் ரக்ஷாகா | ஐயப்பா |
| சாமியே | ஐயப்பா |
| ஐயப்பா | சாமியே |
| சாமியே சரணம் | ஐயப்பா |

# பதினெட்டாம் பழப்பாடல்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஒம்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதின்னொராம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதின்னான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா
பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

சத்தியத் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

படிதொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா - என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் ஐயப்பா

ஓம் சக்தியான பொண்ணு பதினெட்டு
படிகளே சரணம் ஐயப்பா

## 18 படிதத்துவப் பாடல்

முதலாம் படியிலே தே கம் சிலிர்த்தது
2ஆம் படியிலே மோகம் அழிந்தது
3ஆம் படி யிலே மூர்க்கம் ஒழிந்தது
4ஆம் படியிலே நாகம் பிறந்தது
5ஆம் படியிலே அச்சம் நகர்ந்தது
6ஆம் படியிலே ஞானம் பிறந்தது
7 ஆம் படியிலே ஏற்றம் முடிந்தது
8ஆம் படியிலே எங்கும் ஒளிர்ந்தது
9ஆம் படி யிலே நெஞ்சம் நிறைந்தது
10ஆம் படியிலே சித்தம் முடிந்தது
11ஆம் படியிலே பந்தம் மறைந்தது
12 ஆம் படியிலே பாசம் மறைந்தது
13ஆம் படியிலே பக்தி பெருகுது
14 ஆம் படியிலே பாவம் மறையுது
15 ஆம் படியிலே சங்கம் ஒலிக்குது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16ஆம் படியிலே அங்கம் சிலிர்க்குது

17ஆம் படியிலே சர்வம் அடங்குது

18ஆம் படியிலே ஜீவன் கிளர்ந்தது

ஐயன் தரிசினம் கண்ணில் தெரிகிறது ஐயன் தரிசினம் கண்ணில் தெரிகிறது

சுவாமியே......... சரணம் ஐயப்பா சுவாமியே ........................ சரணம் ஐயப்பா

(தொடர்ந்து சொல்லவும்)

## கற்பூர ஆராதனையின் போது ஜெபிக்க வேண்டிய தீப மந்திரம்

தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய சபரி சாஸ்தா நமோ நமோ
பூரணை புஸ்கலை நாதா நமோ நமோ
அருள் தாராய் நமோ நமோ

## மங்களம்

சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவ முனிவர் போற்றும் அந்த சந்நிதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனி வரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள் புரியும் ஐயப்பனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்
வெற்றி தரும் வில்லெடுத்த எங்கள் வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன் பெயர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்

## ஆரார்த்தி மங்களம்

மணிகண்ட வாசனுக்கும் மாலையேறும் தாசருக்கு
மாளிகை புறத்து மஞ்சமாதா தேவியருக்கும்
பந்த ளத்தை ஆண்டு வந்த பார் போற்றும் மன்னனுக்கும்
மணிகண்ட கோபால கிருஷ்ணருக்கும், ஜெய மங்களம்
நித்திய சுப மங்களம் ஜெய மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்பு (58 ஆம் பக்கம் பார்க்க)

ஹரிவ ராஸனம் (45 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாம ரகர்ண விளம்பித ஸூத்ர
வாமனரூப மகேஷ்வர புத்தர
விக்ன விநாயக பாத நமஷ்தே
ஓம் கன்னி மூல கணபதி
பாகவானே சரணம் ஐயப்பா

லோக வீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரஷாகரம் விபும்
பார்வதி ஹ்ரதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ் வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம் ஸீதம்
ஷிப்ர ப்ரசா 'த நிரதம்"
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமனம்
காருண்யமாம் ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம் தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பஞ்சரத்னாத்யம் ஏதத்யோ
நித்ய சுத்தப்படேன் நரஹோ!
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சாஸ்தா வசதிமானசே!!
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாத சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்சரட்ச மஹோ பாகு
சாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ!
சுவாமியே சரணம் ஐயப்பா

### எங்கள் ஐயப்பன்

எங்கள் ஐயப்பன் அவன் எங்கள் ஐயப்பன்
எங்கும் நிறைந்தவனாம் எங்கள் ஐயப்பன் [எங்கள் ஐயப்பன்..]

எரிமேலி நாதனவன் எங்கள் ஐயப்பன்
எங்கள் குலநாயகனாம் எங்கள் ஐயப்பன் [எங்கள் ஐயப்பன்..]

ஏற்றமானூரப்பன் மகன் எங்கள் ஐயப்பன்
எங்க குலதேவன் எங்கள் ஐயப்பன் [எங்கள் ஐயப்பன்..]

ஏழை பங்காளி எங்கள் ஐயப்பன்
ஏகாந்த மூர்த்தியவன் எங்கள் ஐயப்பன் [எங்கள் ஐயப்பன்..]

விண்ணவர் காவலனாம் எங்கள் ஐயப்பன்
வெம்புலி வாகனனாம் எங்கள் ஐயப்பன் [எங்கள் ஐயப்பன்..]

வேலாயுதம் தம்பியவன் எங்கள் ஐயப்பன்
வேதனைகள் தீர்த்திடுவான் எங்கள் ஐயப்பன் [எங்கள் ஐயப்பன்..]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
சாமியே சரணம் ஐயப்பா
அருள்மிகு பூர்ணா புஷ்கலா சமேத
ஹரிஹர புத்திர (ஐயனார் ஆலயம்), விளைவேலி

# ஐயனார் வழிபாடு





ஐயனார் வழிபாடு பழமையானது என்பதை புராணங்கள் வெளிக்காட்டு கின்றன. மேற்படி ஆலயம் பல நூறாண்டு காலம் பழமையானது. கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் நடைபெறுகின்ற மகரஜோதி பெருவிழாவில் ஐயப்ப சுவாமிகளும் ஐயப்பன் அடியார்களும் ஐயப்ப வழிபாட்டின் மகிமையை உணர்ந்து பண்புள்ள சமுதாயமாக வாழவும் வளரவும் ஹரிஹரானந்தம் வழிகாட்ட வேண்டுமென பூர்ணா புஸ்கலா சமேத விளைவேலி ஐயனார் திருப்பாதங்களை வழுத்தி இறைஞ்சுகின்றேன்.

## ஐயனார் துதி

பூரணைக் கிறைவா போற்றி
புட்கலை கணவா போற்றி
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் கலைவாய் போற்றி
ஆரணச் சுருதி எல்லாம்
அடல் உருத்திர அண்ணலென்று
காரணங் கருதி ஏத்தும்
கடவுளே போற்றி போற்றி

அரியன் புதல்வா போற்றி
ஐங்கரன் துணைவா போற்றி
சபரிமலையில் வந்தே
தன்னருள் பொழிவாய் போற்றி
உரிமையாய் விளைவேலியில் உறைந்து
எமக்கு அருள்வாய் போற்றி
திரிபுரம் எரித்த எங்கள்
சிவன் திருமகனே போற்றி

வெள்ளை வாரணத்து அமர்ந்து
வினையெலாம் களைவாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளத்தை மனத்து அகற்றி
கருணையைப் பொழிவாய் போற்றி
உள்ளத்துள் உண்மை என்ற
ஒளியினைத் தருவாய் போற்றி
பள்ளத்தில் வீழ்ந்திடா தென்னையும்
பாதத்திற் சேர்ப்பாய் போற்றி

ஐயப்ப சுவாமியே சரணம்
சரணம் ஐயப்ப சுவாமியே

சிவஸ்ரீ சுப்பிரமணியம் சிவானந்தம் ஐயா
ஆலய தர்மகத்தா.

## தீட்சையின் வகைகள் (7)

1. நயனதீட்சை: கண்ணால் பார்த்தல். குரு அருட்பார்வையால், மாணாக்கனைப் பார்த்து, ஆணவ மலத்தை நீக்கல். இது, கருடதியானி தன் பார்வையால் விஷம் ஏறப் பெற்றவனுக்கு நீக்கல் போன்றது.
2. பரிஷதீட்சை: கைகளால் தொடுதல். குரு வலது கரத்தை சிவகரமாகப் பாவித்து, சீடன் சிரசில் வைத்து மந்திரத்தால் உடம்பு முழுவதும் தடவி அவன் மாயா வலியை அடக்கல். இது பறவை முட்டையைத் தீண்டி குஞ்சாக்குவது போன்றது .
3. வாசகதீட்சை: உபதேசம் செய்தல். குரு மந்திரங்களை சீடனுக்கு உபதேசித்து, அவனை ஆசீர் வதித்தல்.
4. பாவனை தீட்சை :[மானச தீட்சை]: குரு சீடனை அருள் உருவாய் பாவித்து, யோக மார்க்கத்தால் அவன் மனதில் பிரவேசித்து ஆன்ம போதத்தை நீக்கல். இது ஆமை கரையிலிருந்த முட்டையை மனோபாவனையால் குஞ்சாக்குவது போன்றது.
5. யோக தீட்சை : குரு சீடனுடைய இதயத்தில் பிரவேசித்து ஆன்மா சிவத்தோடு சேர்த்தல். சிவயோகத்தை அப்பியாசிக்கும்படி உபதேசித்தல்.
6. சாஸ்திர தீட்சை: சைவ சமய உண்மைகளை, ஆசார அனுட்டானங்களையும் சுருக்கி அறியச் செய்தல்.
7. ஔத்திரி தீட்சை: ஓமம் சம்பந்தமானது. குண்டம், மண்டலம் அமைத்து, அக்கினி வளர்த்து செய்யப்படுவது. இது கிரியாவதி என்றும் ஞானவதி என்றும் இரண்டு வகைப்படும். ஔத்திரிக்கு அருகரல்லாதருக்கு நயனம் முதலிய தீட்சைகள் செய்யப்படும்.

அ. கிரியாவதி: குண்டம், மண்டலம், வேண்டிய பொருட்கள் யாவையும் வெளியில் கொண்டு ஓமக் கிரியை செய்வது.

ஆ. ஞானாவதி : குண்டம், மண்டலம் மற்றும் பொருட்கள் யாவையும் உள்ளத்தில் [மனதில்] கற்பித்துக் கொண்டு கிரியைகளை ஞான மார்க்கமாக செய்வது.

ஔத்திரி தீட்சை கொடுக்கும்போது அதற்கு அங்கமாக முன் சொன்ன ஆறு தீட்சை கைக்கொள்ளப் படும். ஒன்று கிரியா குரு: அதாவது சாதாரண கிரியைகளைச் செய்யும் ஆசாரியர்கள், ஞான அருள் பெற்ற ஞானாசாரிகள்: இவர்களே தீட்சைகள் கொடுக்க யோக்கியராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாரஜோதி - 2008 மண்டல பூசையில் சாமிமாரிகள்.







குருசாமி கொள்ளிடம்
என்னுமிடத்தில்
இருமுடிகட்டுகிறார்
(இந்தியா) (2007)



2007 - ஹரிஹர சங்கம் ஐயப்பன்
நூல் வெளியீட்டுவிழா



குருசாமி ஸ்ரீ சிவபூாவராயர்
தேவஸ்தானத்தில் இருமுடி
கட்டுகிறார். 2007)



பேட்டை துள்ளல்
ஸ்ரீ சிவபூாவராயர்
தேவஸ்தானம்
கோண்டாவில்(2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிச் சாமிமார்களுக்கு மூத்த சாமிகள், ஐயப்பன் அடியார்கள் வழிகாட்டிகளாவார்கள்





குருசாமி வழியே ஐயப்ப வழிபாடு ஆற்றிவரும் மூத்த சாமிகளும் ஐயப்ப அடியார்களும் ஐயப்பன் ஆலயத்திலே அரியதொண்டாற்றி வருவது, என்போன்ற இளம் சாமிமார்கள் மனித நேயத்தை மதிக்கும் பண்பை உணர்த்துவதாக என்னுள்ளத்தில் உதிக் கின்றது. ராஜன் சாமியாகிய நான் ஐயப்ப பாதங்கள் பணிந்து எல்லா ஐயப்பசாமிமார்களும் சபரிமலை சென்றுவர ஐயன் அருள்பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். சென்ற ஆண்டிலே ஆலய உதவியுடன் சபரிமலை சென்று வந்த சாமிகள் இந்த ஆண்டிலே வேறு சாமிகளுக்கு அதே உதவியைச் செய்து அனுப்புகின்ற பாக்கியத்தை எம்பெருமான் வழங்கியதை என் மனதார ஐயனை வாழ்த்து கின்றேன். ந.பி.சுபிகரன் என்னும் மாஸ்ரர் சாமி 5.1.2008 கொழும்பிலே முச்சக்கரவண்டியிலே பாஸ்போட், விசா, ரிக்கெற் இந்தியப் பணம் ஆகியவற்றை தவறவிட்டார். இதனை மாலையில் பார்த்தபோது காணாது தவித்து ஐயப்பனை பிரார்த்தித்துக் கொண்டிருந்த போது முச்சக்கரவண்டி உரிமையாளர் விடப்பட்ட பொருள்கள் அத்தனையும் கொண்டுவந்து ஒப்படைத்தார். இவ்வாறு ஐயப்பனின் மகிமையை எழுத்தில் வடிக்கமுடியாது. ஓம் சாமியே சரணம் ஐயப்பா! என்ற சரண கோஷம் உலகெல்லாம் முழங்க வேண்டும். ஐயன் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து குருசாமி பாதம் பணிந்து அமைகின்றேன்.

த.நித்தியானந்தம் சாமி (மீசாலை).

*1.நந்தகோபால் சாமி*
*2. செல்வன் சாமி*
*3. வாகீசர் சாமி*
*4. சிவகுமார் மாஸ்ரர் சாமி*
*5. மூத்தசாமிகள்*
*6. பரணீதரன் சாமி*
*7. கிளி சாமி*
*8. சு.தெய்வேந்திரம் ஐயப்பன் அடியார்*
*9. இ.புஸ்பராஜா (ஜே.பி.) ஐயப்பன் அடியார்*
*10. சிவஸ்ரீ விஜயதாச ஐயா சாமி*
*11. குணாகரன் சாமி*
*12. நித்தியானந்தம் சாமி (ராஜன் சாமி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# குடையிற் சுவாமிகள் அற்புதம்

(நேர்முகத் திருவருள்)



சுதுமலை தெற்கு மானிப்பாய் நடேசு லோகநாதன் ஆகிய எனக்கு (1970-13 வயது) தொடர்ந்து நித்திரைத் தூக்கம் இருந்து வந்தது. பல வைத்தியரிடமும் பல வகை வைத்தியம் செய்தும் தூக்கம் மாறவில்லை. தந்தையாருடன் ஓர் நாள் இணுவில் வைத்தியசாலை சென்று மருந்து எடுத்துவிட்டு வீதிக்கு வந்தோம். என்னை நிறுத்திவிட்டு தந்தையார் கடைக்குச் சென்றுவிட்டார். கையில் ஒரு குடையுடன் வீதிவழியாக வந்த வயோதிபர் ஒருவர் எனக்கு கையில் இருந்த குடையால் அடித்துவிட்டு "போடா" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நான் அழுது கொண்டு நிற்கும்போது வந்த தந்தையிடம் "அங்கே போகின்ற வயோதிபர் குடையால் அடித்துவிட்டு செல்கிறார்" என்று கூறி அழுதேன். தந்தை "அவர் ஒரு கடவுள்", "அவர் தான் கந்தையா சுவாமியடா", "அவரைக் கும்பிடு" என்று கூறினார். "அடித்தவரை நான் கும்பிடுவதா?" என்று கூறி மறுத் தேன்.

அவ்வேளை தந்தை "அவர் கடவுளடா", " உன் மீதிருந்த பேயைப் போக்கி யுள்ளார், நீ அவரைக் கும்பிடு" என்று வற்புறுத்தினார். நானும் வீழ்ந்து வணங் கினேன். கந்தைய சுவாமி அவர்கள் தலையைச் சரித்துக் கொண்டு என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு "போடா" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அன்று தொடங்கி என்னில் இருந்த வருத்தம் மாறியது. இதற்கு சுவாமியின் திருவருளே அன்றி வேறென்றும் இல்லை என்பதை உணர்ந்தேன்.

சுமுகலிங்கம் மாஸ்டர் சாமியின் வேண்டுதலால் கல்வயல் ஸ்ரீ விளைவேலி ஐயனார் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து வந்ததன் பயனாக, இப்போது கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் மாலை அணிந்து லோகநாதன் சாமி எனும் பெயரைப் பெறும் பொழுது குடையிற் சுவாமிகளின் கை என்மீது பட்டதும், அவரின் அருட்பார்வை என்மீது பட்டதுமே என்னை இந்நிலைக்கு உயர்த்தியது. இன்று குருசாமி யாக வந்து ஐயன் ஐயப்ப சாமியாக என்னை குருவழி செல்லவழிகாட்டிய அரிஹரசுத குருக்கள் குருசாமி பாதங்களைப் பணிந்து சரணடைகின்றேன். ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா! குடையிற் சுவாமிகள் திருவடிகளே சரணம்!! சரணம் குருசாமி திருவடிகளே சரணம்.

- ந.லோகநாதன் சாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை வழிபாட்டின் பூசை, விரதம், தவம், யோகம் கைவரப்பெற்ற ஞானிகள்
















1. கடையிற் சுவாமிகள்
2. செல்லப்பா சுவாமிகள்
3. யோகர் சுவாமிகள்
4. சத்திரத்து சுவாமிகள்
5. குரு பாபா
6. தாளையன் பாபா
7. செல்லத்துரை சுவாமிகள்
8. ஜோதி சுவாமிகள் (கொழும்பில்வசிக்கிறார்)
9. அருணாசலம் சுவாமிகள்
10. வல்லிபுரம் சுவாமிகள்
11. மகாதேவா சுவாமிகள்
    (வேதாந்த மடம், கந்தர்மடம்)
12. மகாதேவா சுவாமிகள் (ஊரெழு)
13. திருப்புகழ் சாமி
14. மார்க்கண்டு சுவாமிகள்

- நன்றி : நடராஜா இராஜரத்தினம், பேபி போட்டோ
பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனிநுடங்காது
பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## பிழை பொறுத்தல்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

## வேண்டுகோள்

இந்நூலினை கற்று நல்வாழ்வு வாழ வேண்டுகின்றேன். குறை நீக்க கருத்துக்கள் நேரடியாக எழுதி அனுப்பவும். எதிர்வரும் காலங்களில் ஆக்கங்கள் சிறப்பாக அமைய உங்கள் கருத்துக்கள் உதவியாக அமையும் என்பதை அன்புடனும் பணிவுடனும் அறியத் தருகின்றேன். அத்துடன் ஹரிஹரானந்தம் நூலிற்கு எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்பன் பாதம் பணிந்து, நல்லாசிகள் கிடைக்க வேண்டுகின்றேன்.

## வாழ்த்து

வாழிநின் சேவடி போற்றி பூம்பாத வாரிசங்கள்
வாழிநின் தண்மலர் போற்றி நின் தண்ணளி வாழிநின் சீர்
வாழி என்னுள்ளத்தில் நீயு நின்னொற்றி மகிழநரும் நீ
வாழி என் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண் புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் தீர்கவே.

வான்முகில் வாளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவில்லாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## உசாத்துணை நூல்கள்:

1. கோமாதா கருத்துக் களஞ்சியம்
2. ஹரிஹரசுதன் தெய்வீக பாமாலை
3. ஐயப்பன் வரலாறும் வழிபாட்டு முறையும்
4. திருப்பாற்கோவை
5. தத்துவமஸி
6. ஸ்ரீ ஐயப்ப சுவாமி பஜனார்மிர்தம்
7. சைவசமய சிந்தாமணி
8. ஸ்ரீ ஐயப்பன்
9. பஜனாமிர்தம்
10. ஐயப்ப புராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

'தர்மமே செய்வோம், தகவுடன் வாழ்வோம்
எங்கும் நிறைந்துள்ள சக்தியைத் தேடுவோம்'
விண்ணிலும் மண்ணிலும் விரிந்துள்ள சக்தியை
என்றுமே வணங்கி நன்மையே பெறுவோம்' மெய்நெறி 30





உங்களுக்குத் தேவையான பலசரக்குப் பொருட்களை
இனிதே நிறைவு பெற இன்றே இப்பொழுதே நாடுங்கள்.

* மலிவான விலை
* நிதானம்
* உண்மை உத்தரவாதம்
* சரியான நிறையில்

மொத்தமாகவும், சில்லறையாவும் பெற்றுக்
கொள்ள சிறந்த ஒரே நிறுவனம்

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ரேடர்ஸ்

இல: 342,344,346 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

"ஸ்ரீ சபரிசன் அருட்கடாட்சம் அனைத்து ஜீவாத்மாக்களுக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்"
பிரார்த்திப்பவர்கள்: உரிமையாளர், ஊழியர்கள்



உ
சிவமயம்
ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

'எண்குணம் கொண்டவன் இறைவன் என்றறிவோம்
நற்குணம் கொண்டே நல்வழி நாடுவோம்.' (மெய்நெறி 30)



உங்களுக்குக் தேவையான பலசரக்குப் பொருட்களை
இனிதே நிறைவு பெற இன்றே இப்பொழுதே நாடுங்கள்.

* மலிவான விலை
* நிதானம்
* உண்மை உத்தரவாதம்
* சரியான நிறையில்

மொத்தமாகவும், சில்லறையாவும் பெற்றுக்



கொள்ள சிறந்த ஒரே நிறுவனம்

# ஸ்ரீ அம்பாள் ரேடர்ஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி.



"ஸ்ரீ ஐயப்பன் அருளாட்சி எங்கும் பொங்கிப்பெற பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்"
பிரார்த்திப்பவர்கள்: உரிமையாளர், ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

**கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்**

**தேவஸ்தான அறங்காவலர், பிரதம குரு, குருசாமி, பிரம்ம ஸ்ரீ கி. ஹரிஹரசுத குருக்கள் சாமி,**

**இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில், யாழ்ப்பாணம்.**

பதிவு இலக்கம் : HA/J/JA/859

***தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம்***

***"திருப்பதி", சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி***



# நன்றி கலந்த நல்லாசிகள்

*"அன்பே தெய்வமே அதையே வாழ்த்துவோம்*
*அறம் பல செய்து வளமே வாழ்வோம்"*



கோண்டாவில் ஸ்ரீ சபரீசன் ஐயப்பன் தேவஸ்தானத்தின் 14வது தீர்த்த யாத்திரைக் குழுவின் அருட்பிரசாதமாகிய ஹரிஹரானந்தம் என்னும் நூலுக்கு அனுசரணை வழங்கிய "மாரி மைந்தன்", சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா அவர்கட்கும், அவர் குடும்பத்தினருக்கும் அவருடைய நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், அவருடைய ஆத்மீகப் பணி சிறக்கவும், அவருடைய தொழில் நிறுவனங்கள் சிறப்புற்று மோலோங்கவும், ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அணிந்துரைகள் வழங்கிய நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்து நாகரீகத்துறைத் தலைவர் டாக்டர்.மா.வேத நாதன் யாழ்.பல்கலைக்கழகம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் க.தேவேந்திரன் மாவட்ட இணைப்பாளர், எஸ். உதயபாலன், அபிவிருத்தி உதவியாளர், இந்து சமய கலாசாரம், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், அதிபர் யாழ்/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் திருமதி ஜெயமணி தெய்வீஸ்வரன், திருவருள் வ.ஆ.தங்கமயில், V.விஜயரூபன் ஆசிரியர், எஸ்.கே.என்.தவராஜா, உதவிப் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம், சிவாச்சாரிகள் சிவஸ்ரீ.ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள், ஐயப்பன் பக்தன் மூத்தசாமி, பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள், ஸ்ரீ முத்துமாரியம்மன் றேடர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், ஞானியர்களின விரபங்கள் தந்துதவியவர்கள்: பேபி போட்டோ உரிமையாளர் நடராஜா இராஜரத்தனம், க.மகாதேவசிவம் உரிமையாளர் சிவன் மாளிகை, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், ஒப்புநோக்குனர்கள் திரு.வ.ஆ. தங்கமயில் ஆசிரியை திருமதி சுதமதி நடராஜா அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் செல்வி மிருணா மகாலிங்கம், இளஞ்சைவப்புலவர் செல்வி வினோ தம்பயா, கட்டுரையாக்கத்திற்கு செல்வி நேசதுரை நிரோஜனா, ஆலய நிர்வாக சாமி இ.தவகோபால் , மற்றும் ஐயப்ப சுவாமிமார்கள், ஐயப்பன் அடியார்கள், அன்புள்ளம் கொண்ட அனைத்து ஜீவாத்மாக்களுக்கும் எல்லாம் வல்லா சபரிமலை ஸ்ரீ ஐயப்பனுடைய நாமம் கொண்டு கோண்டாவில் பதி எழுந்தருளி அருளாட்சிபுரியும் ஐயப்பனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்மென பிரார்த்தித்து நன்றியையும், நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சாமியே சரணம் ஐயப்பா*

**பிரம்ம ஸ்ரீ கி. ஹரிஹரசுத குருக்கள் குருசாமி** **திருமதி.கு.கமலாதேவி,**
**செயலாளர்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org